92

அகத்தியர் நூலின்

(ஜாதபடலம்)

அட்டவணை வைத்தியத்திரு

வைத்திய ஜாதபடலம்.

63

63

31.8.62.

63

அகத்தியர் நூலில் (ஒரு பாகமும்) வாதபடலம்

அட்டவணை வைத்திய முறைகள்.

வைத்திய வாத படலம்.

1. பிணியாகிக் கிடக்கிறவன் பேர் தானென்ன
பிடித்துரைக்கும் இட்சரத்தின் பேர்தானென்ன
மணியான அவுஷதத்தின் பேர் தானென்ன
மருந்தனக்கும் கல்வத்தின் வகை தானென்ன.

அணியான யிரு கரத்தின் பேர் தானென்ன
அவ வுயிர்க்கும் இவ்வுயிர்க்கும் அரியச் சொன்றும்
பணிவிடை செய் பண்டரே யிந்த நூலை
பழுதறவே யின்ன தென்று பகருவீரே.

2. தெரியாதே போனீரோ கேளுந் தப்பி
தினம் பியாய்க் கிடக்கிறவன் பேர் தான் ராகு
மணியான அவுஷதத்தின் பேர்தான் முத்து
மருந்துறைக்கும் கல்லுக்கும் பேர் யனும்
அணியான யிரு கரமுஞ் சத்தியாகும்
அவ்வுயிர்க்கும் இவ்வுயிர்க்கும் அரியச் சொன்றும்.

சித்தி விநாயகன் போற்றி—நாளும்
சிவசிவா வென்ற ருளும் பாதமே போற்றி
சத்திக் கணபதியே போற்றி—அன்று
சண்முகனார் முன் புதித்த மாமுகனே போற்றி
வேழ முகமானவனே போற்றி—யென்று
விக்கினந் தீர்த்தருளும் விநாயகனே போற்றி
அளி தரித்தவனே போற்றி அன்று
அசுரர்களை வென்று வந்த வேலவா போற்றி
தய்ய வன்ஞ் சடையானே போற்றி
புலித் தோல் பஞ்சாட் சரந் தரித்தப் பாதமே போற்றி
வெள்ளைக் காவியுடையாய் போற்றி யென்றும்
வேதாந்த ரூபமான மாதங்கி போற்றி
தெள்ளு தமிழ் தரித்ததாய் போற்றி.

நாளும் திருநடனே புரியம் தேவியே போற்றி
ஆதியுமையாளுங் கேட்க அந்த அகத்திய நாதனார்
உரைத்த வைத்திய நூலில் கேளீர்.
நீதியுடன் மன்மதக் குடோரி
நிச்சியம தாமாயன்றுரைக்க உச்சிதமாய்க் கேளீர்.
சீர் பெருகுந் திகிடுகு மேலம் செவ்வியம்
சீரான கோஷ்டமுடன் சாதிக்காய் பத்திரியுஞ்
சாறுமைய்யா சத்தமுடன் ஓமம்—நல்ல
சன்ன லவங்கமுடன் பேரீச்சம் பழமும்
முந்திரிகை அக்கிருகாரம் போஸ்தக்க காயும்
முதக்குகின்ற சித்தரத்தைக் காட்டுக கிராம்புடன்
விந்தை பெற அபினி கிராம்பு
பெருஞ் சாதி பத்திரியுங் காயம் வால் மிளகு
கோதுமை அரிசி
வளமான அதிமதரங் குரோசானி ஓமம்.
சால்மாம் பிசினியுடன் இஞ்சிக்
கசகசாக் காரைப் பருப்புடன் புலாங் கிழங்கு

நான் கூறு அசுவ கெந்தி யோடே குங்குமம்
நற்பமுடைய மஸ்தக் கொடி வாதக் காயுடனே
தோகை மயில் மீதேறும் சிவ சுப்பிர மணியன்
தன்னருளா இப்பொழுது பாட
வாசமுடன் யி நான் மூன்று சொல்வேன்அந்த
வகையாகவே வெகு விரையாக வேதிசை
தாய்-ராமர்-திரு மேனி தான் கணயும் திரு துளசியுடனே
சூரிய காந்தமுடன் சமுத்திரப் பச்சை
நன்றுய்த் துலங்கிய நாய் நெருஞ்சி
ஆவாரையுடன் ஆல் அரசு
அத்திப் பிரு ஊமத்தைப் பீர்க்கு
அடவாகவே பூ வந்தி பெரும் பசளைச் சுரையும்
பால் சேர் பெரு நெருஞ்சி வெள்ளரிப் பி
ாகல் சிறுக்கீரை, முருக்கன் விரையுடன்
ட்டிலிருக்கும் காஞ்சோரி கனமான
ார்போக அரிசி
தானும்*நாட்டில் நாவு தவறுமல்
கரை-நயமான கற்றுளை சூரி விரை
அது யெடுப்பேன் அச்சுதன் கிருபை யதினுலே
தொண்ட நவாகவி பிசினருள்வாகச் சொல்வேன்
பச்சை மூல வன்னனென்று-அடியேன்
மங்கா கக்கம் பிசின் பாங்காக எடுப்பேன்
கானகத்திலே வளரும் தார் வேலம் பிசினுடன்
புரச விரைவும் மாநிலத்தில் யெல்லாருங் கேட்க
அந்த வன மூலிகையின் மருந்து வகையா சொல்வேன்
வான் வறளை தான் நிதிய கேள் முன்
சீந்தி, வாகான விஷ்ணு கிரந்தி, கோனரக் கிழங்கு
நிலைப் பனை, தண்ணீர் விட்டான், கரும் பிஞ்செயென்று,
நிலை நன்னாரி பூமி சர்க்கரை கிழங்கு ஆவுடன் அமுக்கிரு சத்திச் சாரணை
அடவாக தேனங்கள்
திடமாகத்தான் எடுப்பேன்
வகைக்கிருத்தட்டு எடை யெடுத்து நன்றாய்
வகைப் படவே சூரண மருந்து கைப் படவே தான்
யாகமுடன் யின்ன மொன்று சொல்வேன்
சித்தர் அருமையாய்த் தேடியிட்ட கற்பமிதுதானும், நீர் தனிலே இரண்டு சாமம் ஊறப்
போட்டு நீங்காமல் தானெடுத்துப் பாங்காகவே உணர்த்தி வீரிய மாயமும் மருந்து சேரவே
தான் இது விதமாக நால் தொன்றுச் சேர்த்து எல்லா இடித்தது தூளாக்கி இதமான சர்க்
கரைக் கற்கண்டு உடனே வல்லவர்க்கு உதவுகின்ற சீந்திச் சர்க்கரை வஞ்சையுடன்-தானரைப்
பலமாகச் சரி தேன் நெய், எருமைப் பாலுடனே சென்று தேங்காய் பால், அது பங்காய்
ஒரு படிதான் தானொரு பாகமாய்ச் சாரித்து உருட்டி நய்றாய் லேகியம் தானே-வெத்தி
விநாயகன் பூசை நாளும் விதமாக வயித்திய ஷண்முகனூர் பூசை சத்தி யென்று மாதங்கிப் பூசை
நாளுமஞ் சாயாமல் ஈஸ்வரன் பதி பூசை, நீண்ட அடிதொழுது பூசைப் பண்ணி நிரையான
பேரதனை உரையாய்க் கேளீர். மண்டலங் களன்டிசையு மெச்ச, அகஸ்தியர், அமிர்த சிந்
தாமணி லேகியம் வகையுடனுரைத்தேன் ஆதிர வாயிந்த மருந்து உன்ன உலகில் அந்தனர்க்குக்
கற்மம் விந்தையுடஞ் செய்து நாதரை வணங்கிப் பூசைப் பண்ணி அவுஷதம் நலம் பெரிய
பொருள் தான் பாதமே-சரணம்- ஒப்பனை யாய்க் கொள்ளத் தீரும். வியாதி வகை கேளீர்.
தலை பித்த மொடு அருெசிகம், வாந்தி போக்கும், சாறு விலாவினில்எரைச்சல் மூலம்,
சங்கூரக் கிருனியு மெத்த சகல வாயுவும் அஷ்ட திசை வாய்வு களெட்டும் குன்மம்-அக்கினி
மந்தமுடன் திக்கனவே ஓடும்-உஷ்ணமுடன் நீரழிவு மேகம் வெள்ளை யுறமாகப் பலவகை

உத்திரமாகப் போகும். என்று செப்பினர் முனீஸ்வரர். இது கை கண்டது.

<u>தாப சன்னி தோஷத்திற்கு மாத்திரை உருண்டை.</u>

அருங் கெவுரி பாஷாணம் இரண்டு, ரசம் இரண்டு, நாவி மூன்று அடுத்தெந்த காமனு ஞு, மனோசிலையஞ்சு, வெங்காரம் ஆறு வறுங் கோரோசனை ஏழு பங்கு, சாதிலிங்கம் எட்டு. வத்த பந்திரத் தாளகம் ஒன்பது வகையாகச் சேர்த்து பெருங் குங்குமச் சாற்றில் பேசு சிறு புள்ளடி சாற்றில் ஒவ்வொன்று மூன்று நாள் அரைத்துத் திறமாய் உருந்துப் பிரமாணம் உருண்டை செய்து, பச்சை நிய பத்திம் பாலுஞ் சோறும் சொன்னேன். அதனை வோர்க்கும் நில்லாமல் ஓடுமே தாப ஜன்னி, தோஷம். குருவே துணை.

1. நந்தீசர் வேதமுனி சூதமுனி வறலை நாதன்டி போற்றி
செய்தும் கிளந்திருக்கும் வேள்ழனை யிந்திர யோலக்கமென வாத வித்தை
செய்ய யேது இது வகை யென்று அருள வேதமுனி கேழ்க்க
நந்தி முகன்றனைப் பணி உரைத்திடுவாய்ந் நிதி தி தாரணியுள்ளவர்க்குச் சாகாத
வரமும் மந்திரத் தார் சத்தி. சித்தியாகும்-வாறு. மர்ற்ற திகம் வறுத்து
வதின் வழமாதி பகற்வாம்.

2. ஆதியாருமை கயான தன்னுடனே அருளிச் சொல்
வேத முனிக் கருவிப் பாய் நந்தி சாதிலிங்கம்
தன்னிலிருபது கழஞ்சு வாங்கித் தாமாக
சிறு பயறு போலவே பொடித்து
நீதி செர் யெலுமிச்சம் பழச். சாற்றிலிட்டு
கேளுக வொரு சாமம் வெய்யிலில் வைத்துச்
திலக் கொடி வேலி வேர்தனைக் கொண்டு வந்துத்
தூளாக யிடித்தததனை வெறு வயிற்றில் கொள்ளே.

3, வைத்த கனர் வாய் சேரும் பிணை
வகை செய்து இரண்டு கொண்டு
வந்ததிலே யொன்றில் மெய்த்திடவே.
கொடிவேலி வேர் பொடி பாதியிட்டு
மேலாகச் சாதிலிங்கம் பொடு. தழையே பற்பும்
சித்தாக வதின் மேலும் கொடி வேர்
பொடியை சிறப்பாக பத்திய பின் மறுபானை
தனை கைத்திட வாழைப் பழத்தினிலையுடனே
கனமான முருக்கிலை புங்கைய சேர்த்துயிடியே.

4, இடி இருவகையிலை இற்றனிச் சாரா .யெடுத்து
இதமாக மேல் பானைத் தூ. றன்னே
தடவி மடித்தந்தப்பானை கொண்டு வாய்
சேர்த்து மூடி வாகாக
சந்து வாய்க்கே சீலை மண் செய்து
பிடித்து நீ உணத்தியதில்
வெடித்த யிடந் தனக்குட்
பின்று மந்த மணலில் தடவி உலர்த்தி-வலுச் செய்து
பிடித்த தொரு அஞ் செழுத்தால் முன்னவ்னைப் பணி
பாங்காக உபதேச செய்தடுப்பிலேற்றே.

5. ஏற்றி அணைக்காமல் மேலே முப்பது நாழிகைக்கும்
எறிய விட்டு ஆறியதை எடுத்து-குழுக்கே
பிற்றியில் பாய வைத்தந்த சீலை மண்ணைத் திறந்து பார்க்கவே
பார்க்கவே மேலது பானைத் தூரிலே யிரத்தினம்
வேற்றி மையா யிருக்கு மதைப் பன்றி மூடி

மெதுவாகத் துடைத் தெடுத்து விரும்பிவைத்து
கொண்டால் நாற்றிசையும் புறக்கவே
எடுத்த வகைக் கெல்லாம் நன்றாக கூடு மதில்
வகை சொல்லி பேர் நாட்டே.

6. நாட்டுவேன்றிது நாமம் – நீல கண்டன்
வாலை நந்தியுரைப்படி அரைத்துச சேர்க்கும் வகை கேளும்
கூட்டு வேர்ங் கண்டங் கத்திரி யிருட
பழத்தைக் கொண்டு வந்து யிடித்ததிலே தனிச் சாரா யெடுத்து
வீட்டில் வைத்துக கொண்டிதற் முன்னேமே
உரைத்த வேதாந்த சாதிலிங்கம் பார்த்ததை யெடுத்து உள்ட்டு நீ
களஞ்சிக்குக் கால் படி சாரனந்து
யுரை யுரை பட விட்டதனை பத்து மட்டு மறையே.

7. அரைத்தெடுத்த ஒன்றிலே யடைத்து வைத்துக் கொண்டு
அன்பாக சிவகாமி பூசையுஞ் சிங் செய் துரைத்து ஆர வைத்து வெள்ளி தகடாக்கி அதிலே
யுறவாக நீல கண்டன வால்தனைப் பூசித்
திரைத்து வளர்ந்திடுங் கோழிப் புடம் போட்டெடுத்தாலிது தங்கம் போல்
மாத்துப் பத்தரையுங்காணும்
மரைத்து ஆற வைத்து செம்புத் தகட்டிலே பூசி
வளர் கோழிப் புடம் போட மாற்று மாறரையே.

8. ஆறரையுங் காணது மல்லாற் பின்னுந்தில் வகை தான வனிதனிற் மானிடற்கு
ஆன கற்பஞ் சொல்வேன்
மாரடர்ந்த விடத் தலையின் வடக்கான வேரை
வாகாக வெட்டி வந்து சாணி தன்லரைத்து
வீராக நெல்லிக் காயளவினிலே உருட்டி
மேலான வாலை ரசம் பண விடை கால் கூட்டித்
தேறுத பிணியாளர்க் கேழு நாள் கொடுக்கத்
தீருமே உன் பிணிக்கு வகை செப்புவ தாமே.

9. ஆமென்ற பிணிக்கு வகை சொல்லக் கேளப்பா
ஆக்கை தனிலே யெழுந்த வாத மென்பதுடனே
நாமென்று வருவதாஞ் சூலை யறுபதிற்கும்
நாயிறுங் கேடாக்கு மந்தக் கிரந்தி பதினெட்டு
தாமென்று ஆண்மை செய்யுங் குஷ்டமுப் பத்தாறும்
உத்தர் மேனிக்கு தாமந்த பவுத்திர மோடெட்டும்
ஏமென்றால் வேனறு மண்டல வாத மறுபதுக்கும்
இதுவாலெ கற்ப மென்று வியம்ப விண்ணிற் போமே.

10. விண்ணிறம் போய் விடு மூல வியாதி யாறுடனே
வேகமா யெழுந்த குன்மம் பதினறுங் கூட்டி
மண்ணிற்றுன் பிறப்பவர்க்கு க்ஷய ரோகம் மாற்றும்
மாயமென வந்திடுக்கும் சன்னி பதினெட்டு
கண்ணிற் காணுமல் வரும் நடுக்கான பீடை
கவுசி நோய்க் கிருணி யெட்டுச் சுர–மாலை சுரமும்
எண்ணித் தான் முடியாத யீசனருள்
பதத்திலிருக்கு முயல் வலி பதினெட்டு மேலும் பாரே.

11. ஏறுமே வலி பிணியுஞ் சகல வியாதிகளும் மென்றுரைத்த
நந்தியும் பின்னுமியம்பியதைக் கேளாய்
வாறுடைய மானிட ஆக்கை யெடுத்தோர்கள்

வகையான முன் சொன்ன வாலைச் செய்தால்
பாலுடைய நிதி கோடித் திரவிய முண்டாகும்
பண்பாக முன்புரைத்த வாலை கற்பங் கொண்டாற்
போகுமே என்னமற்ற நோயான தெல்லாப்
பொய்யாது கற்பத்திலின்னும் வகை சொல்வேன்.

12. வகை சொல்வார் கற்பத்தைச் சமாதியிலே இருந்து
வாகாகக் கொண்டவர்கள் நரை திரையு மாறி
தகையறவே மூன்று கற்பங் கால மட்டுந்
தனம் போற்றினுற் சகமுழுதும் புறக்க அருள் செய்வார்
நகையாதே நத்தி சொன்ன வாக்கிது தப்பாது
நாதனுரானை நிசமின்னும் வகை கேளாய்த்
தகையாதே முன் சொன்ன விடத் தலை யினிலையே
தாமாகப் பறித்து வந்து சாந்தெனவே அரையே.

13. சாந்தெனவே அரைத்ததிலே
நெல்லிக் காயளவு சகல குணமுஞ் சொன்னேன்
நீலகண்ட வாலை கூர்ந்தரைக் கால் பணவிடையுங் கூட்டி
ஆவரையிற் குணமுடைய அஞ்சு வங்க
மருந்தெடுத்துணர்த்தி நேர்ந்துப்
பொடியாக்கி அதில் வெரு கடியுஞ் சேர்த்து
நிறையாகப் பசுவின் வெண்ணெய் னுப்பானந் தனிலே
காந்த நீரழி வெடுத்தாற் கிரு பொழுது
நாளுக்கு நாள் கையாற் கொடுக்க
நிற்கும் காசினி யோற் குறையே.

14. காசினி யெல்லாம் பிறக்கும் பின்னுமந்த முறைக்கி கங்கானி
இரத்த பற்பம் வகை சொல்வோம் நந்தித்
தேசிகரே முன் சொன்ன சாதிலிங்கம்
இரத்தம் சிறக்க யிரு கழஞ்சு குழிக்கல்லே யிட்டு
மாசிலாகக் கண்டங்க கத்திரிப் பழச் சாற்றில்
வாகாய் முக்காற் படியு மூன்று வட்டமாகத் தூ சனி நீராக விட்டுப்
பத்து மட்டு மரைத்துச் சுருளவே
யெடுத்து நல்ல குகை தனக்குள்ளாக்கே.

15. ஆக்கி யந்தக் குகையிலே மன் தவளை நெய்யே
அரை மட்டு விட்டு வாய் சில்லாலே மூடி
நோக்கியந்த முறவேழு சீலை மண்ணுஞ் செய்து
நெய்தான எருவில் வைத்துச்
சேவற் புடமாகத் தாக்கிய தீ மூட்டி
அதை ஆறிய பின்னெடுத்தால்
தப்பாது படிக நீர் பற்பமாயிருக்கும்
வாக்கிய சேர் கணபதிக்குப் பூசை செய்து வளமாக
வளமாக வயிரவனைப் பூசை செய்யே.

16. பூசையுஞ் செய்த இரத பற்பந் தன்னைப்
பூரமாக வொன்றிலடைத்து வைத்துக் கொண்டு
காசெனவே உருக்கிய பின் தெளிந்து நிற்கு முகத்திற்
வாசனை சேரிந்த பற்பஞ் சாடி கொடுக்க
மாத்து மறந்த வென்னியிலும் காசிலிரு மதிகம்
நேசமே தப்பாது கங்காளி பற்பம்
ரோக மானிடற்குப் பின்னு மதிறக் கேளே.

17. பின்று மதில் வகை கேளு மானிடரானவற்குப்
பிணி வந்தாற்றிரி கடுகு சூரணம் செய்து
உன்னு வெரு கடிவளவு சூரணத்தை சேர்த்து
உறவாகு ரத்த பற்பம் பணவிடை கால் சேர்த்து
தன்னுள்ளே யனுப்பானந் தேனிலாகிலுமே
தாயான பனை வெல்லந் தன்னிலாகிலுமே
இன்னும் நோயிள்கும் ஏழு நாள் கொடுக்க
மிகு பனியுந் தீரு மிந்தப் பாகந்தான்.

18. பாகந்தானறியு வகை யெப்படி யோ கேளு
பல பிணிக்குந் தக்க விளியனுபான
மெடுத்து வேகஞ் சென்னிறத பற்பம்-பணவிடை கால் கூட்டி
விதமாக ஒரு பொழுது ஏழு நாள் கொடுக்கத்
தாகந்தானறக் குளிந்து
சகல வியாதிகளும் திணியுமே
பற்பத்திலின்னும் வகை கேளுந்
திரேகந்தானும் பழுப் பெரித்தனன்று
மானிடற்கு சிறு வாலை மதனம் போற்றிறப் பதற்கு மாமே.

19. மதனம் போலாக வென்றூர் சமாதியிலே யிருந்து
வளமான யிரத்த கற்பம் பணவிடை கால் கூட்டி
யதம்ப மிகும் புளிப்புடனே
கசப் பெல்லா நீக்கி யாவின் பாலுடனே
குருவையரிசி சோறுன்ன
மதம்பவே வெகுத்த நகை திரையு மாறி
வாலையாய் நாறு கற்பம் கால் வரையில்பபரா சுதனம் பேர
இருபா ம ருனை வவுண்டாம் சோதிதிருவாலீ
நந்தி சொன்னடிப செய்யே.

20. செய்ய வென்ற நந்தி பின்னும் வேத முனி தனக்கு
செப்புவான் செந்தூர வகை தான் கேளு வையக மெல்லாம் புறக்க சுத்தி
செய்தர்தம் வகையாக யிருபது கழஞ்சி-யதுபோடு
வெய்ய தோர் கெந்தகந்தானிடை முன பொற் கூட்டு
மேலான சாதிலிங்கம் பதினைந்து கழஞ்சு அதிற் சேரே.

21. கழஞ்சு இரண்டு தனித்த யிடை மனோசிலையுங் கூட்டி
கடிதான நாகத்தை யீரஞ்சு வட்டம்
வளஞ் செய்த இலுப்பெண்ணெய் தனிலுறக்கிச்
சாயத்து வகை செய்து நாற்பது கழஞ்சு யதனிற் சேர்த்து
உளஞ் செயத்தங் கத்திலொரு கழஞ்சியாக
வொக்க விரு நூற்றென்ப தென் கழஞ்சியாகத்
களஞ் செய்து. யெருக்கம் பால் தனிலே யொரு சாமமே.
கசடறவே யரைத்து மறுசாறு புரசிலையே.

22. புரசிலையுந் தும்பையுடன் செருப்படி செம்முள்ளி.
புகழான மாதளை யனிலையுடனே யஞ்சு
வரமுறையே கொண்டு வந்து
வெள் வேறெபிடித்து வகை யாகத்
தனிக் சாறு யெடுத்து வைத்துக கொண்டு
சிரமுற விச்சரு விட்டு வேவ்வேறு சாமம்
தீர்க்க முறச் சொல் முறையாய்ச் சாமு

அயிந்து மறைத்துக் மைந்தரைத்துக்
கரமுற வேர் பின்னு மந்த மாதனையின்
பூவுங் கான் முருக்கம் பூவுங்
கலந்து சமன் கூட்டே.

23. கலந்து சமன் கூட்டிப் பருவிடித்து திரச்சாறெடுத்துக்
கை சேறப் பின்னும் நன்றாய் ஒரு சாம மறைத்துப் புலந்து நின்ற
உள்ளுணத்திப் பொடியாக்கி யெடுத்துப்
பூகனிடக் கெங்கா சலக்குப் பியது தனக்கு
நிலந்தரமா யேழு சீலை மண்ணது மே செய்து
நேரான வெய்யிலிலே உணர்த்தி
வெடித்திடத்திற் பிளந்து வாரதை யரைத்து ம
மனம் பூசி மெழுகிட்டுப்
பேத மறக்குப் பிதனிற் பேணி மருந்தடையே.

24. மருந்தான பொடி வகையைக் குப்பியரை மட்டும்
வாகாக அடைத்தந்த வாய் பல்பக் கலைந்திருந்த முடியுதின்
மேலுமடை நீ மண் ஊதத் திறமாகப் பூசி யொரு
தாளி தனை யெடுத்துப் பொருந்தியதுக்குள்ளே நாலு விராகனுந்தான்
பொடி ... மணலை யிட்டதன் மேல் குப்பிதனை
வைத்து குருந்த மாயப் பின்னு மந்த மணல்தனையே குப்பி.

கூட மறைய விட்டதை யொட்டி யடுப்பேற்றே.

25. ஓட்டிய தோரடுப்பேத்தி-தாழியதின் மேலே
உள்ளாகப் புதைத்து வைத்து-முன்னவர்க்குப் பூசை
யிட்டியல் காய்ச் செய்து பின் பூத தீ ப மொரு
சாமம் மெரியிடு பின் கமலம் போலி
மெரித்தால் கெட்டியாய்க் கடுகு வெரி வொரு சாமந்
தனக்குக் கெனித முடனிப் படியே சாம
ரு லெரித்து விட்ட பின்பு ஆறவிட்டு
மறுநாளிலங்கே-யிரு மோக வயிரவனைப் பூசை செய்து கொள்ளே.

26. வயிரவனைப் பூசை செய்து / குப்பிதனை யெடுத்து
வாகக விடைத்துள்ளே பார்க்கவே செந்தூர
மெயிலாக முருக்கம் பூ நிறமாயிருக்கு மென்றியே
பத்திரமாய் அடைத்து வைத்துக் கொண்டு
கயிலாச சிரிதனிலோர் கழஞ்சு தனை யுருக்கிக்
கடுகவதில் மஞ்சாடி செந்தூரங் கொடுக்க
பயிலரிய நிறை மாற்று ஒன்பதரையுங்
கானலும் பத்தர் வைத்திருந் செப்புக் காறு குறையாதே.

27. குறையாது செந்தூரம் வினைவதிகங் கண்டாற்
கொடுப்பது தான் கண்டறிந்து
குறைவு செய்ய வேணும் நிறைவான விளைவு
சற்றே குறை விட்டதாலல் நிறையிலே கால்
மஞ்சாடி கூட்டுவது மாகும் வறை நாலு
வகை நந்தி வகையுத்த வாக்கிது தப்பாது
நிசமா யானை யுண்மைத் திது திறமான வாதி யென்று
மான்வார் சிகத்தில் செய்வது நற்கரும மென்று செப்பிய தொப்பினையே.

28. ஒப்பனி குருமுனி நந்தி உரை கேட்டு
உள்ள மகிழ்ந்தங் கவறுரைப் பருப்பை நீ
கட்ட அப்ப மிகுங் கடல் நுரையைப் பொடியாக்கி
யதில் அரைப்படிக்கு மூன்று
படியுப்பைக் கூட்டி செப்புரிய வெள்ளாட்டு
நீரை விட்டுச் சேர்த்து தொந்தரைத்
தோர் சட்டிக் குள்ளாக்கியே பின்
தப்பாமல் .மறு ஓடுதான் கவிழத்து மூடி
தவிட்டெருவில் புடம் போட்டு எடுப்பதாமே.

29. எடுத்திடு பின் செம்பு சுத்தி செய்யும் வகை கேளு
யெப்படி யென்றென்றுதே நீ
நிலப்பூவிற் கடுத்தக் காக் கனத்தினிலை யரைத்து
வாங்கிக் களங்கு போலத் திறண்ட
செம்பை பொதிவு செய்து எடுத்து ஒரங் சுதிரம்
உருக்கிப் பின்று மியம்பு புங்க
வேரரைத்து அதிவு முன் போற் யெடுத்து
ருக்க வீரஞ் சுதிரநத்திற் செம்பு சுத்தி
யென்று சொன்ன வகை சொல்லென்றுதே.

30. சொல்லரியக் கெந்தகத்தைக் கட்டும் வாறு
துர்கையாகக் கைக்கு யிர் தன்னில் வன்ன மேரும்
நல்ல மையிலாஞ்சியிலை தழையரைத்து
நாட்டாவின் தயிர் தனிலே கலவை செய்து
வில்லை போலொரு நாடு வட்டஞ்
செய்து வெளி நடுவிட் நாலாறு துவாரம்
கிசு விட்டுக் கொள்ளவே கெந்தகந் தொட்டி விட்டு குழிதனிலே ஒரு கலசம்
வைத்துக் கானே.

31. கான வைத்துக் கலவை செய்து வைத்திருந்தக் கன்
தயிரைக் குறைய விட்டுக் கலச வாயைத்
தோனவிட்டுக் கெந்தகம் தொட்டிவிட்டுத்
தோனய மலயிரு வொடுக்க வுணர்த்தி மூடி
நானயிட் குளி நிறைய மன்னையிட்டு
கானும லேறு வடுக்கி யனலு மூட்டிப் பூ
வைத்து யிப்படி யீரஞ்சு வட்டம் புடத்தி
விட்டுக கட்டிய கெந்தகத்தைச் சேரே.

32. சேரப்பா நாக மஞ்சு கழஞ்சு கொண்டு
செப்பனவே கின்ன மொன்று செய்த பின்பு
பாரப்பா மரிதார சாதி லிங்கம் பச்சை
நிறமாக வொற்ற துரிசுடனே யிரதங்
யிங்கா ரொப்பாய்க் கட்டி வைத்த கெந்தகத்தை
கூட்டிக் கண்டு கொள்
வகைக்கு ஒவ்வொரு கழஞ்சு
நாரொப்பாமைங் கழஞ்சு குழிக் கல்லிட்டுத்
தனவாய் நீர் விட்டு அரைத்துக் குழமப்பாகக் கூட்டே.

33. கூட்டி யந்தக் குழம்பு தனைக் கின்னியை தருள்ளும்
குவிந்த பிரந்தனிலும் மதைச் சாந்து போல்
பூசி நாட்டி யவ்வாய்க் கட்டி வைத்த மூனு படி யுப்பை

நாக படம் போற் குளிர்ந்த சட்டிக்குள்ளிட்டு
வீட்டி மையாய்ச் சட்டியதின் மேல்
கக்கின்னிவிளிம்பு சற்றே காணக் கான
வெளி நடுவில் வைத்துத் தாட்டி மையாய்
கின்னத்தின் விளிம்பு தான் மறைய சார்
வாகச் சீலை மண்ணுஞ் செய்தடுப்பிலேற்றே.

34. அடுப்பிலே வைத்தவுடன் நீ காத்கும்பு
அன்பாகச் செய்து கொண்டு
நற்றேயக் கினியைக் கடுக்கவே யிட்டதிலே
நவாச்சாரமிட்டு கலப்பில்லா தனிச்
சாரு மூன்று படி யெடுத்துத் தொடுப்பாக
வெரி மூட்டி யெரியிடும் வேளை
சுருக்கமாகப் படி மூன்று சிலம் வருத்த பின்பு
நடுப்பாக மெரியிடு நீ பதினைந்து
நாழிகைக்கு மேல் நன்றுயிாரிய பின்ற
னெடுத்திடு-செந்தூரமாமே.

35. செந்தூரந்தனை யெடுத்து முன்பாக வைத்து
சிவகாமி பூசையுஞ் செய்து நீ பின்பு
அந்தரங்க மாக வோன்றிலடைத்துக்
கொண்டு யற வைத்த வெள்ளி யெழு பணவிடை
யுங் கூட்டி சிந்தனையாய்ச் சுற்றி செம்பினி
மூன்று சேர்த்து மொரு கழஞ்சு மொன்றுய்
முறுகும் முன் பெடுத்து வந்தவனையாய்ப்
பின்று முருக்கி முகந் தெளிந்தால் வைத்திருக்குஞ்
செந்தூரஞ் சாடிச் சேரே.

36. மஞ்சாடி சேத்திட மாத்தேழுரையுங் காணும்
மாற்றுத் தேன்று சூதமுனி வாக்கிது தப்பாது
அஞ்சாதே பரமகுரு வாளையுண்டு நிசமே
அதவன்றி பின் குருசு சிம்பாகும் வகை கேரு
மிஞ்சவே பொன் தார குருசு மொன்றுய்க்
கூட்டி வெண்ணெய் தனிலரைத்துக் குடக் கரியில் வைத்துத்
தஞ்சவ யுருக்கில்ந் தத்துருசிலே பாசுத்தியுள்ள
செம்பிருக்கும் சொல்லுவேன் கேளே.

37. கேளப்பா யின்னு மிந்த நாகமதின் வகையைக் கேட்கவே
இலுப்பெண்ணெய் தன்னை வைத்துக் கொண்டு
நாளொப்பாயிருக்கு மந்த நாக முருக்கி-நாலு
வட்ட மெண்ணெயிலே சாய்த்த பின் யெடுத்தால்
த்ளப்பா நாலே கடந்து நர்க மெழுகது
போற் சுத்தியாயிருக்கும் பத்துப் பதினைந்து காஞ்சி
யானப்பா கூவிளங்காய் கடுக்காயு மூட்டியும் மளவாகச்
செய்தீர் தமிடை யொப்பாயடையே.

38. அடைத்திருப்பதிலொன்று தங்கந்தான் கூட்டி
அதற்கிணங்கி குகை தனை வுண்டாக்கி யந்த முடைத்த குகைக்குள்
உப்பு, யிந்துப்பு, நவாச்சார முள்ளாரி வாய்
முன்றிடையுஞ் சமயக் கொண்டுப்
புடைத்தெழுந்த யெலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துப்

பூணவே யொரு பங்கு கைக்குள்ளே பூசிச் சடைத்திட்டாயே
குகையை வெயிலிலே வத்த தப்பாம லொரு பங்கு வேறுய் வைத்த ஊர்த்தே.

39. ஊர்த்தி எடுத்து மருந்தைப் பொடியாக்கி குகைக்குள்ளொரு
விரலின் கனமாகப் பொடி பாதியிட்டு
யிணக்க முற்க் குடுக்கைதனைப் பொடி மீதில்
வைத்து குறையளவு கன மேலும் பொடி தன்னையே பரப்பி
வணக்கமுற சந்தி சில்லாற் குகை வாயை மூடி
வகையாக குகை கேளு சீலை மண்ணறுஞ் செய்து
பிணக்காதே குகை யுலர்த்தி வெடித்த இடம்
பார்த்து பின்பு மந்த மண் பூசிப்
புடத்தினிடச் செய்யே.

40. இடமாகத் தனிவாக நீள மேருதே-யின்பமாய்க் குழி யெடுத்து பாதி மட்டு
படமாக அடுக்கு அதின் மேல் குகைகைய வைத்துப் பாங்காக்க் குழி மறைய மேலு மொரு பொதிந்து
அடவாக யெரி மூட்டி யேழு நாள் வரைக்கும் மாராதே இயத்திலிட்டு ஆற்றியே நீ எடுத்தால்
திட்டமாகச் செந்தூ ரமிருக்குமதை யெடுத்து தீர்க்க முற வயிரவர்க்குப் பூசை செய்யே.

41. தீர்க்கமுள்ள வியிரவனைப் பூசை செய்து செந்தூரந் தனைப் பனி சேர்த்துத்தான வைத்து
ஆற்க்க முறவோர் கழஞ்சு வெள்ளி தனை யுருக்கி யது நிறமாய்த் தெளிவினிலே பணவிடை செந்தூ ர
மேற்கையாய்க் குடுக்க மாத்தெட்டரையுங் கானறு மீசுரானை யிது தப்பாதுண்டாகும்
நீக்க மென்று உறையாதே சுதமுனி யுரைத்தார் நிசமாக உண்டாகு மின்ன வகை கேளு.

42. உண்டாகும் கெந்தகத் தயிலம் வகை கேளு ஊளரிவா ஞானி யண்ட மனமது தாவெடுத்து
மிண்டாத வெளத்திலிட்டு ரவியிலேலேற்றி வெண் கருவை நீக்கி மஞ்சள் கருவாக யெடுத்து
தண்டா சட்டியிலே யிட்டடுப்பிலேற்றித் தினிவாக எரி மூட்டிதவ்விற கிலெரிக்கப்
பண்டாதியருளாலே வருந் தயிலந்தனை பண்பாக வெடுத்து வைத்துக் கெந்தகத்தை வாங்கோ.

43. கெந்தகத்திற் மூன்று பங்கு பசுவின் பாலிற் கேள்க நீ முன் போலே சுத்தி செய் தெடுத்துப்
பந்தமாயனல் மூட்டித் தலைகீழாய் பிடித்து பாத்திரத்தைக் கீழே வைத்துப் பண்பாக ஏந்தி
வந்து சேரத் தயிலத்தை யொன்றிலே யடைத்தால் கசு வாகாகப் பின்புமதில் வகை கருவாமே.

44. கருவாக விருந்த பின் பாத்தெடுத்த பொன் களங்க நிறத்துடன் மாற்றுக் குறைந்திருந் தாலு
முருவாகவே யிந்தத் தயிலத்திற் பொன்னை உள்ளாக்கி ஊ வி வைத்தோர் திறந்தாலு
திருவாக நிறம் பசுமையாக மாற்றேறுஞ் செப்பிலும். பின்புமதிற் செய்யும் வகை கேளு
அருவான சொரி சிரங்கு, நோயினத் தமக்குந் தளசியிலைதனிற் கொடுத்து தொகுத்து நீரே:.

45. தொகுத்து நீர் பார்க்க வென்றல் வங்க வகை தனிலே சுருதியுள்ள செந்தூ ரஞ் சொல்வேன் கேளு.
வகுத்தவுடன் வருட மா ற்றிருபதுஞ் சென்று வழமாக நிற்கு மந்த வேம்பிட பழத்தை
வெகுத்த முடன் கொண்டு வந்து யிடித்திற் சாறெடுத்து வேறு கலப்பில்லாதே யிரும்பி வைத்துக் கொண்டு
பகுதத்திலே யின்ன மொரு பாத்திரத்தில் வாங்கி பாங்காக கருத்தவங்கத்தனை உருக்கிச் சாயே.

46. உருக்கிய வங்கத்தை மூவேழு வட்டமொன்றுன சாத்திலே உரைத்த பின்பு
குறித்ததற் கிசைந்த ஓட்டில் வைத்துத் தாளகமுங் கூட்டித் தனித்தடுப்பிலேற்றி
யே நாயுருவிக் காய்
நெறுக்கியதை வருக்க வங்கம் நீறாகிப் பின்பு நீள்கு மறி சாற்றிலே ஒரு சாமமரைத்
து
திருக்கிசைந்தக் குகையிலிட்டு எருவிலே வைத்து செவ்வலிம்புடமாக நாழி விடலாமே.

47. சேவலியின் புடமாகத் தின மிரண்டு வட்டத் திறமாகச் சாற்றிலரைத்திருபது நாளையி
லே
எவலுடன் புடம் நாற்பத்தொன்று குறையாமலிடவே செந்தூரமது முருக்கம்பூ நிறமாய்
ஆவலுடன் வெள்ளி யொரு கழஞ்சு தனை உருக்கி யது தேனிற் பணவிடை செந்தூரங்
குடுக்க நீ
மாற்றேழு குறையாதுப் ஈசு பா மலர் திருவாளை நிசம் வங்க வகையிது வே.

48. இது தனிவுஞ் சுருக்கா யின்ன மொரு வகை கேள் இன்னிலத்திலாதி யாதி மாறு
ஆவரையின் பட்டைச்
சாறாகக் கொண்டு வந்து ஊர்த்தி ஒரு பானை தன்னிலிட்டுப் பாதாள அங்கணத்தி
மெதுவாக இறக்கியதை
விரும்பி வைத்துக் கொண்டு மேலான கோழி முட்டை வெங்கருவை யதிலே மதுவாக
யுறைத்ததை
மருவரேசித்து வசமாகச் செய்த பின்பு அரிதாரம் வாங்கே.

49. வாங்கியந்த அரிதாரக் கட்டி தனிற் றயிலம் வாகாகவே யுரைத்து வெய்யிலிலே
வைத்தால்
பாங்கான செந்தூர மாகுமதை யெடுத்துப் பசுமையாயிற் வைத்து வெள்ளி யோர்
கழஞ்சு
மேங்கவே யுறக்கியதிற் பணவிடை செந்தூர மேற்கையாய்க் குடுக்க மாற்றேழு
குறைாது
நீங்காது சூதமுனியுரைத்த வகை யெல்லாம் நிசமாகுங் கண்டறிந்துத் தேறி நீ
பாரே.

முற்றிற்று குருகடாக்ஷம்.

மாதவல்லி தன்னை படிதனிலிருத்தி வைத்து
அரைதனில் துயிலே வாங்கி அல்குலி நாவே வாங்கிப்
புரை புரை நாவை யொட்டிப் போற்றவே
அமுர்த முண்டால் நரையும் போலத் திரையும் ஆவார்.

சிரரோக ஜன்னிக்குத் தைலம்.

நல்லெண்ணெய் படி.க, நொச்சிக் சாறு படி.இ, கரு நொச்சிச் சார் படி.இ, குப்பை மேனிச் சார் படி. , வேளைச் சார் படி .ரு, இதர கடைச் சரக்கு நெல்லிப் பருப்பு விராகனிடை .ரு, திப்பிலி விராகனிடை.ரு, மிளகு விராகனிடை .ரு, கற்பூர சலாசத்து விராகனிடை .க, வசம்பு விராகனிடை .க, கடல் நுரை விராகனிடை.உ, பரங்கிப் பட்டை பலம் கால், புங்கம் வேர் பலம் கால், அருகம் வேர் பலம் கால், வெள்ளைக் குங்கிலியம் தூட்டிடை .க, இது வெல்லாம் என்ணெயிற் போட்டு மெழுகு பதமாகக். காய்ச்சி வடி கொண்டு நாளு நருக்கு கொரு முழுக்கக உசிலம் பட்டையில் தலை முழுகவும். காதிலும் ஒரு துளி விடவும். சிரரோக ஜன்னி தீரும்.

இதன் குணம்.

காதிலிரைச்சலாய் கேளாது. சீ விழுகிறதும் கண்ணெறிகிறதும் தலை பாரிப்பும், மயிரு உதிருகிறதும் என் நேரமும் சிறு வலியாய் நோகும். நாசி யடைக்கும். இது கர்ணிகை சிரேரோக ஜன்னி. ஜன்னியின் குணமிது. ஜன்னி யரு வகை. பிரமாணம்.

ஜன்னி பதிமூன்றுக்கும் பிரமாணம்.

தந்திரிகம் நாள், அ, அந்தத்துர நாள் .ய, ருக்கு தாகம் நாள்.உய, சித்தப் பிரம சன்னிக்கு நாள் .உயக, சீதா நர்கத்தக்கு நாள்.யரு, தாந்திகித்துக்கு நாள். உயரு, நாளிலா விடில் நாள்.7, கண்ட குசத்துக்கு நாள் .யஉ, கன்னியாசம் நாள் .கரு மாதம் மூன்று, பக்ஷி நேத்திரத்துக்கு நாள்.அ, சஞ்சிவுடம் .நாள்.ய, சிவகத்துக்கு நாள்.ய , அபினு சத்துக்கு நாள் .யரு, ஆக யங. இந்த பதிமூன்றுக்கு அசாத்தியமாவது. சிமமரதர சன்னி தந்திரீகம் முற லாபம். சித்தி விப் பிரமம். கறன்னி சன்னி சஞ்சட்டி இந்த ( ) ஆறு சன்னியும் அசாத்திய மென்பது-ருக்கு தாகம் பக்ஷி நேத்திரம், அபின் வியாசம் சஞ்சிட்டி கண்ட குச்சம், அந்தக சன்னி, சத காத்திரம் இந்த ஏழும் ஏழு வகை சன்னியும் சாத்தி மென்பது-தந்தீரீகமாவது.

அந்தக ஜன்னிக்கு குணம்.

அந்தக சன்னிக்குத் தாக மெடுக்கும். தலை உருட்டும். ஆருட்ட மெடுக்கும். விக்க லெடுக்கும். உடம்பெல்லாம் உருட்டும். இது அந்தக சன்னி யென்றறியவும்.

ருக்கு தாகத்தின் குணம்.

உளரிக்கை தாகம் மவுன மாயிருக்கத் தொண்டை நோக காறியுமிய உதடு வறண்டு, பொருக்கிருமெடுலடுக்கு நடுக்கல், முகம் வெளுக்க உடம்பு வேர்க்க நெற்றியும் கழுத்தும் விடாமல் வேர்க்க இது ருக்கு தாகம் என்றறியவும்.

சித்த பிரமத்தின் குணம்.

உடம்பெல்லாம் நோகும். வாத பயித்திய நாடியில் பிற கோதித்திருக்க பிறமையாயிருக்க வந்து பேரை கவுழ்ந்து பார்க்க கிட்ட வந்த பேரை கையிலுலே அழுந்த் கண் முழி பிரட்டி யாட பாடலிருக்கும். இது சித்தப் பிறம சன்னி யென்றறியவும்.

சீதாங்க சன்னியின் குணம்.

சரீரமெல்லாம் அதிக சீதளமாய் இருமல் விக்கல், உப்பிசம் சந்து சந்து சர்வாங்கமும் நோகதாக மெடுக்க முற்சிகக் உடம்பு கடுக்க இது சீதாங்க மென்றறியவும்.

கற்ன்னிக சன்னியின் குணம்.

உடம்பு ததியும். பிறட்டளக்கு வெடிக்க விக்கல் இருமல் நடுக்கல், உடம்பு நடுக்கல், காதின் சீழ் இரண்டு புறமும் வீங்கிச் சீழ் கட்டி உடைய எழுந்திருந்து ஓட இது கறன்னிக சன்னி யென்றறியவும். இரண்டு வருஷத்திற்கு நாக்குக்கு குன்றும். கொன்னிப் பேசும்.

சஞ்சிட்டியின் குணம்.

நாக்கும், உதடும் வெடிக்கும். இரத்தம் விழும். வெகு சுரமடிக்க நிலம் பிரண்டால் மூர்ச்சிக்க இரும லெடுக்க தரையுருட்ட சரீரம் நடுங்க நாக்குக் கருகச் சிகப்பாயிருக்க இது ரஞ்சிட்டி யென்றறியவும்.

கிரந்திக் களிம்பு.

காசுக் கட்டியும் மனிதரைச் சுட்ட யெலும்பும் சுவரிலே ஒட்டி ஒடும் வெள்ளைக் கல் பொடியும், அரசிலைக் கருக்கும் அத்தியிலைக் கருக்கும், ஆவரை யிலைக் கருக்கும். இவை யெல்லாம் பொடி செய்து பசுவின் வெண்ணெயில் குழப்பித் தடவ ஆறாத புண்ணும் ஆறும்.

உள்ளுக்கு மருந்து.

நல்லெண்ணெய் படி.க, நீர் பிரப்பிச் சார் படி.இ, மிளகு பலம் .க, ஒன்றிரண்டாய் நறுக்கித் தண்ணீர் விட்டுக் குறுகிய வருகிற பக்குவத்தில் இந்த மிளகைப் போட்டு இரண்டு ஙங் பொங்கு வந்த பிறகு இறக்கி மறு சட்டியில் வார்த்து வரிக் குமட்டி வேர்.ங, நெருருங்கத் தட்டி சுடச்சுட எண்ணெயிற் போட்டு வசம்பு ஒரு துட்டிடை நறுக்கிப் போட வும். உதயத்தில் இரண்டு கரண்டியாய் ஒன்பது நாள் கொண்டு பதினெட்டு நாள் பத்தியங் காக்கவும். இது பத்தியம் வென்னீர் சாதம் சாப்பிடவும். யது நாளுக்கு மேல் உப்புப், புளி, புகை கிரந்திப் பண்டம் இது வெல்லாம் கூட்டிக் கொள்ளவும்.

கடுப்புக் கழிச்சலுக்கு மருந்து.

படராதி வடகம் அகல சுக்கு தென்னஞ் வேர் மாதளை யிலைப் பட்டை தென்னங் குரும்பை புளியங் கொட்டைத் தொறலி கருங் காலிப் பட்டை விடத் தெழுந்தழை நவலப் பட்டை மரப் பட்டை, அரசம் பட்டை, கடுக்காய், விளாம் பட்டை, வில்வப் பிஞ்சு, ஆலாம் விழுது, நன்னாரி வேர், ஆக வகை .யஎ,-க்கும் வகை ஒன்றுக்கு பலமாகக் கூட்டி நாலு வள்ளத் தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு மறுக அரைப்படியாக் காய்ச்சி அதில் கடைச் சரக்கு தேசாவரம் விராகனிடை. உ, திப்பிலி விராகனிடை .உ, மிளகு விரா கனிடை .உ, தாளிச பத்திரி விராகனிடை,உ, சிறு நாகப்பு விராகனிடை.உ, கோட் சம் பாலை விராகனிடை.உ, அதிவிடயம் விராகனிடை.உ, ஜாதிக்காய், விராகனிடை.உ, பத்திரி விராகனிடை.உ, சிலவங்கம் விராகனிடை.உ, கசகசா விராகனிடை.உ, அபினி விராகனிடை .உ, சடைக் கஞ்சா வறுத்தப் பொடி விராகனிடை .ங, மாங் கொட்டைப் பருப்பு விராகனிடை.உ, முள்ளி வேர் விராகனிடை .உ, விடரம் வேரினைத்து விராகனிடை.உ, ஆவரம் வேர் பட்டை விராகனிடை.உ, இலவன் பிசின் விராகனிடை.உ, விளா மதுரம் பிசின் விராகனிடை.உ, மது தாங்கி வேர் விராகனிடை.உ, நன்னாரி வேர் பட்டை விராகனிடை.உ, வில்வப் பிஞ்சு விராகனிடை,உ,இலவங்கப் பட்டை விராகனிடை.உ, இலவங்கப் பத்திரி விராகனிடை.உ, ஆக வகை உயஎ-யும் கஉ ரூயம் ஙா போட்டு ஒரு சாமம் கை விடாமல் அரைத்து களச்சிக் காயளவு குளிகை செய்து அநுபானம் தயிர் வடி கட்டின தண்ணீரிலுரைத்துக் கொடுக்கவும். இதற்கு உஷ்ணக் கிருணி, வாதக் கிருணி பித்தக் கிருணி, சுங்க கிருணி பாலியந்திக் கிருணி, பாலக் கிருணி, சுகிக் கிருணி, சுராதி சாரம், இது முதலான வியாதி யெல்லாந் தீரும்.

சுரமேற்ற மென்பது.

தக்கீலாஞ் சுத்தி செய்யாமல் சீலந்திக் கொடி சமூலமும் சித்திர மூலம் வேர் பட்டை நாராயணன் சன்னி வேர் வட்டை இது வெல்லாம் சிறு நீர் விட்டரைத்து மிளகுப் பிரமாணம் உருட்டி அநுபானம் வென்னீரில் கொடுக்க சுரம் வரும். திப்பிலி யஞ்சனம், நாவி, சாத்திர பேதி, துத்தந் தரிசு, காந்தம், படிகாரம் இது வெல்லாம் வெள்ளாட்டுக் கோமயத்தில் ஒரு நாள் மந்திக்கவும். கையாந்த கரைச் சாரிலே ஒரு நாள் மந்திக்கவும். வெத்திலைச் சாரி லொரு நாள் மந்திக்கவும். வேலிச் சாற்றி லொரு நாள் மந்திக்கவும். நீலி சாற்றி லொரு நாள் மந்திக்கவும். துளசிச் சாற்றிலொரு நாள் மந்திக்கவும். காட்டு முருங்கைச்

சாற்றில் ஒரு நாள் மந்திக்கவும். பேய்ப் பீர்க்கஞ் சாற்றிலொரு நாள் மந்திக்கவும். இப்படி மந்தித்து சிறு விரல் பிரமாணம் இற்ற மட்டுச் செய்து கொள்ளவும். அநுபானம். சன்னி பாத தோஷத்திற்கு, துவரைப் பருப்புஞ் செஞ் சோளமும், இந்தக் குளிகையும் சாறணையிலைச் சாற்றிலாவது வெற்றிலைச் சாற்றிலாவது வைத்துக் கண்ணிலிடவும்.

ஸ்த்ரீ தோஷத்திற்கு.

முட்டை இரத்தமாவது சிறியனத் நடை யிரத்தமாவது உரைத்துக் கண்ணிலிடவும்.

தாப தோஷத்திற்கு.

முலைப் பாலிலிடவும். இது திவ்விய அஞ்சன மென்று பெயர்.

வலிப்புக்கு மருந்து.

கருங் கம்பினியைச் சுட்டு சாம்பல் பண்ணி மூங்கிற் குழாயிலடைத்து வலிப்புக்கு ஒரு கொட்டைப் புடு மது மாராட்டகமும் வசமாம். மூன்றுந் நறுக்கி பற்பங் கூடக் கலக்கி பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை கால் மடியும், ஆண் பிள்ளைக்கு பெண் பிள்ளை கால் மடியும் மூக்கில் நசியம் பண்ணவும்.

உள்ளுக்கு மருந்து.

நாராயினன் சுள்ளி வேர் கஷாயம் பண்ணி அரை ஆழாக்கு அந்த பற்பமும் மூன்று விரல் பிரமாணங் கஷாயத்தில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியம் வெள் வெங்காயச் சாற்றில் பெருங்காயமிட்டரைத்துக் கொடுக்கவும். இது உள் வலிப்பு, பிற வலிப்பு, குதிரை வலிப்பு, தநுர வாய்வு, நாலு வகையுந் தீரும்.

க்ஷய ரோகத்திற்கு.

கெந்தகம் பலம் ", கடுக்காய் பலம்.உ, தான்றிக்காய் பலம்.உ, சுக்கு பலம்.உ, திப்பிலி பலம்.உ, மிளகு பலம்.உ, கொடி வேலி வேர் பலம்.உ, நறுவிலிப் பட்டை பலம்.உ, பரங்கிப் பட்டை பலம்.உ, இவ் வெல்லாஞ் சூரணஞ் செய்து கெந்தகச் சூரணத்திற் கலந்து மூன்று விரல் பிரமாணம் இரண்டு நேரமும் கொள்ளவும். இதற்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு தள்ளி தவிர்க்கவும். இதற்கு தீரும் வியாதி, க்ஷயம், மூத்திரச் சிறச்சி, வெள்ளை விழுகிறதும், வாந்தியும், சூலைக்கும் உபக வகை மேகத்திற்கும், அஷ்ட குன்மத்திற்கும், வீரிய வர்த்தனைக்கும், அகோதரத்திற்கும், கிராணிக்கும் உதர வியாதிக்கும் இது முதலான எல்லாந் தீரும். சூலாகாத பெண்ணுக்கு ஒரு நெத்தத் தேங்காய் துருவி மாவிலியங்காயிலை அரைத்துப் போட்டுப் பிசைந்து பிழிந்து அந்தச் சார் மூன்று நாள் கொடுக்கவும். இது விடும். இலை கன்னிப் பட்டை அரைத்துப் பசுவின் பாலில் குடிக்க இதுவாவாள். மூங்கிலையும் சாமையரிசியும் இடித்து களிக்கிண்டி மூன்று நாள் தின்ன ருதுவாவாள்.

குளிருக்கும் காய்ச்சலுக்கும்.

விஷ்ணுக் கிரந்தி, கஞ்சாங் கோரை, துளசிச் சுக்கு, ஒரொன்று முக்கழஞ்சு இரு நாழித் தண்ணீர் விட்டு உழக்காக் காய்ச்சி பிசைந்து வடித்துக் கொடுக்கவும். குளிர் நிற்கும். பொன்னுதம்மானே இடுபுடோல் முத்தக் கசு பற்படாகம், சீந்தித் தண்டு சுக்கு காரு பையவே நொந்து அப்பிரு ரோடெ அளவானிருரே என்னைக் கேட்டு விளம்பினர் சித்தம் விட்டு விடை கொண்டே யேகினரே.

சீதங் கழிய மருந்து.

முத்தின தேங்காய் உடைத்து திருவி வெள்ளை வெங்காயம் நறுக்கிக் கலந்து உழக்கு விளக்கெண்ணெய்க்கு நாலு காசிடை கன்னிப் பால் விட்டு கொதிக்க வைத்து இறக்கி இரண்டு காசிடை நக்க சீதங் கழியும். இதில் கடுகு போடாமல் பதனம் பண்ணி வைத்துக் கொள்ளவும். இதற்கு மாற்று. மோருஞ் சாதமுண்ணவும். பால், தயிர் கூட்டிக் கொள்ளவும். உடம்பு மெத்த வீங்கினால் குப்பி கோமூத்திரம் பிடித்து வடித்துக் கொண்டு இதில்

குவிலை யிலை அரைத்து கரைத்துக் காய்ச்சி அடி பற்றுமல் கிண்டி நாலு பிடியான பிறகு இறக்கி நாளொன்றுக்கு ஒரு பிடி நக்கவும். பிச்சுத் தெளியும். பிரண்டைக் கொழுந்து கன்னி முள்ளான் கிழங்கும் பொடி செய்து தேனிற் குழைத்து முழுங்கவும்.

உடம்பு பருக்க.

கொன்னைக் கொழுந்தும் ஆனைத் தக்காளியும் திருத்தளாயும், ஆனை நெருஞ்சியும் இது சரியாய் வொக்கி நிழலிலுர்த்தித் தூ த்தி காலமே வெரு கடிப் பிரமாணம் தின்னவும். உடம்பு தூ ளிக்கும். சிறு பயறு, உளுந்து, எள்ளு, .ச, வேற் கொம்பு, ச. அமுக்கலான் வேர் இரண்டும் நிழலிலுலர்த்தி தனித்தனி யெறு .ச, தூ ளாக்கி ஆன பன்னிரண்டு படியுடனே கலந்து கருப்பன் சர்க்கரையும் நெய்யுடன் கலந்து தின்னவும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

விக்கல் சேற்றுமத்திற்கு மருந்து.

சுக்கு, மிளகு, கடுக்காய், திப்பிலி, இந்துப்பு,.

பல்லடி நோவும் ஊறித் வாய் நாற்றத்திற்கு மருந்து.

கருப்புக் கட்டியுடன் பொடி செய்து எலுமிச்சங் காயை மூன்று கீத்தாய் கீறி இம் மருந்தை அதில் விட்டுக் கசக்கி வாயிற் போட்டு ஒதுக்கிக் கொண்டு கார மிறக்க விக்கலுஞ் சேற்றுமமும் நிற்கும்.

விக்கலுக்கு மருந்து.

தத்தி வடக்கு வேர் பிடுங்கிக் காதில் கட்ட நிற்கும்.

உடம்பு தினவுக்கு வீக்கம் வற்ற மருந்து.

ஆவரை வேரும், அல்லி வேரும் முத்தின காடியும் எலுமிச்சம் பழச் சாறு விட்டு ஒரு நாள் ஊற வைத்துப் மற்ற நாளரைத்து மேலே பூச வீக்கம் வற்றும்.

உடம்பு தினவுக்கு மருந்து.

நீர்முள்ளி விரையும், மாமரை வளையமும் பொடி செய்து பாலிற் குடிக்க திமிர் அரும்.

குட்டித் தக்காளியிலையும்,. பாகல் கிழங்கும். ஏலம், சீரகம், விலாமிச்சன் வேர், சந்தனம். எலுமிச்சன். சாறு விட்டரைத்து அந்தச் சாற்றில் குடிக்கவும். ஆறின சாதமும் தயிருமாக உப்பில்லாமல். பத்தியம். கொடுக்கவும்.. ஈர வெங்காயம் கூட்டிக் கொள்ளவும். கத்தரிக்காய், பாகல் காய்,. பரங்கிக் காய், நல்லெண்ணெய்,. பன்றிக் கறி, கோழிக் கறி, இது. வெல்லாம் மூன்று மாதத்திற்கு ஆகாது. நெய்யாகும்.

நாவடி பல்லடி நோவுக்கு மருந்து

பெருங்காயம், வசம்பு, இந்துப்பு, நிறை ஒக்க அரைத்து நாவிலும் பல்லடியிலும் தடவ நிற்கும். பிச்சிலையைத் துவைத்துப் பிழிந்து சார் கொப்பளிக்க நிற்கும்.

வாய் நாற்றத்துக்கு மருந்து.

பச்சிலை, மிளகு, சீனந் திப்பிலி இவை ஒக்க பல்லடி நோவும் வாய் நாற்றமும் தீரும்.

கரப்பானுக்கு மருந்து.

சீந்தித் தண்டு திரிபாலையும், நிறை ஒக்க நீர் வார்த்தரைத்து உருண்டை செய்து தினமொரு உருண்டை கொள்ளவும்.

ஊது கரப்பானுக்கு மருந்து.

செங்கத்தாரி வேர், கடுகு, வெள்ளுள்ளி, பனை வெல்லம், சுக்கு இது வெள்ளாட்டுக் கோமயத்தில் அரைத்து வெள்ளாட்டு பாலில் குடிக்கவும். கரப்பானெல்லாந் தீரும்.

மண்டை இடி எண்ணெய்.

நல்லெண்ணெய் படி.க, வெந்தம், பத்து காசிடை நறுக்கி எண்ணெயிற் போட்டு ஒரு

விறகு கொண்டு எரித்து பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு மூனறு நாளைக்கு ஒரு முழுக்கு பச்சை அரப்பை விட்டு முழுகவும். இதற்குப் பத்தியம் அரிச் சாமும் துவரைப் பருப்பும், ஆகும். மற்றது ஆகாது. இத்றகு நசியம் சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளை வெங்காயம். வெள்ளைச் சாறணைத் தழை இதை நையத் தட்டி. முலைப் பாலிற் நசியம் விடவும்.

குலைப்புன்னறுக்கு மருந்து.

அரிமனு பெரரியசிசத் தழை ஒரு பிடி பொருமித் தழை ஒரு பிடி, விளும் பித்தழை ஒரு பிடி, வேலியனைஞ் சான்தீ தழை ஒரு பிடி இந்த ஏழு வகைத் தழையும் ஒன்றுகத் துவைத்து ஒரு பிடி சாறும் ஒரு சிரகு நல்லெண்ணெயும் சீனிச் சர்க்கரையும் இது மூன்றுஞ் சமனகக் கலந்து கொள்ளவும். இப்படி ஏழு நாள் கொள்ளவும். இதற்கு களிம்பு வெங்கக் காரல் பொடி செய்து நெரய்ய தூளை புரத்தி வட்டலில் போட்டு மேல் வட்டில் வைத்து கையாந்த கரைச் சாறு விட்டரைத்து ஆவின் வெண்ணெயுங் கூட விட்ட அரைத்துக் களிம் பாம். இதை தண்டுக்கு வென்னீர் விட்டுக் கழுவிப் போட்டு களிம்பு புண்ணிற் போடவும். இப்படி நாள் மூன்று போடவும். எந்தப் புண் வியாதியுந் தீரும்.

அசீரண வாய்வுக்கு மருந்து.

குன்ம வாய்வு, குடல் பிரட்டின வாயவு இதற்கு சூரணம்.

அமுக்கலாம் வேர், பாக்குப் போல் வட்டமாய் நறுக்கி உலர்த்தி இடித்துச் சட்டி ? வாயில் சீலை கட்டி உதிர்ந்த தூளை எடுத்து இந்தத் தூளும் அரைப்படி பசுவின் நெய் சட்டியில் போட்டு தூள் சிவந்த பதத்தில் எடுத்து நாள் சயம் கொள்ளச் சகல குன்ம வாய்வு நிற்கும். பத்திய மாயிருக்கவும்.

நேத்திர வாய்வு மண்டை இடிக்கு மருந்து.

வருத்த சித்தாணமக் கெண்ணெய் படி.க, சித்தா முட்டி வேர் பிடி.க, மிளகு பிடி இது இரண்டும் வேக வைத்து பதத்தில் இறக்கி தலையிலிட்டு பச்சை அரப்பிட்டு முழுகவும். பத்தியமாய் இருக்கவும்.

சன்னி பாதத்துக் மருந்து.

சித்தா மல்லி, பேரா மல்லி, சுக்கு, சீந்தி, திப்பிலியும் வசம்பு, பற்படாகந் தானும், மோதங் கடுகு ரோணியும் பேய்ப் புடலும், ஒரு பங்கு கண்டங் கத்திரியும், விலா மிச்சன் வேரும் இது பன்னிரு கழஞ்சு மெட்டொன்றுக்கி எழிலான தேன் விட்டுக் குடிப்பீராகி ற் சத்தியமாம் பன்னிரண்டு சன்னியோடு தந்திரிக சன்னி தானும் போமே.

அரக் கெண்ணெய்.

நல்லெண்ணெய் படி.க, பசுவின் மோர் படி.க, நொச்சிச் சார் படி கால், பாவட்டஞ் சார் படி கால் மொசுமொசுக்கை சார் படி.கால், கோரைக் கிழங்கு விராகனிடை.ச, கம்பினிப் பிசின் விரர்கனிடை.ச, மர மஞ்சள் விராகனிடை.உ, மஞ்சள் விராகனிடை.ச. விட்டு நன்ருய் எரித்து இறக்கி கொம்பரக்கு விராகனிடை ச விட்டு எரிக்கவும். அரப்பாகிலுஞ் சீவக்காயாகிலுமிட்டு முழுக அஸ்தி சுரம் நிற்கும்.

பெரும்பாட்டுக்கு மருந்து.

கருவேப்பிலை இலையுங் கோலும் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்க நிற்கும். (வேறு) பூவரசன் பிஞ்சை அரைத்து எருமைத் தயிரில் கலந்து கொடுக்க நிற்கும்.

சர்வாங்கி வதத்திற்கு மருந்து.

பாவட்டன் வேர் நன்கு அரைத்துப் பசுவின் பாலாகிலும் ஒரு சிரங்கைப் பாலில் இந்த அரைத்த மருந்தைக் கலந்து கொள்ள இப்படி மூன்று நாட் கொள்ள. சர்வாங்கியுடனே நிற்கும். ஈஙல் அதற்கு ******* கார்ப்பு, புளிப்பு ஆகாது. இதற்குத் துவளை மருந்து முடக் கொத்தான் தழை, வேலிப் பருத்தித் தழை, பாவட்டன் தழை இது வெல்லாம் நன்ருய் துவைத்து சாறு பிழிந்து புளியஞ் சிராய் மேல் புரளை கொண்டு வந்து எரித்து

சாம்பலில் துவளையிடவும். சாயங்காலம் வெந்நீர் வார்த்து உடம்பேற்றும் விடவும். இது கை கண்டது.

நேத்திர இடி கண் சிவப்பு இதற்கு மருந்து.

வெள்ளைப் படலம் முதலானதற்கு மருந்து.

தாழை விழுது சார் படி.க, சிறுக்கீரை பிடி.இ, பொன்னாங்காணிச் சார் படி.இ, பசுவின் பால் படி.இ, நல்லெண்ணெய் படி.இ இது வெல்லாம் ஒன்றாக விட்டு வெள்ளிக் கிழமையில் உமிக் காந்தலில் வைத்து .எய, நாழிகை இளம் பதமாய் எரியிட்டு ஞாயிற்றுக் கிழமை எரித்து மெழுகு பதத்தில் இறக்கி தேய்த்து அரப்பிட்டு மூன்று நாளைக் கொரு தரம் முழுகவும். சிவப்பு, இடியும் நிற்கும். அதின் பிறகு அந்த வெள்ளைக்கு மருந்து விடவும். பனங்கையை அடுப்பிலே சுட்டு சார் பிழிந்து போய் வெள்ளி உரைத்து அந்தக் கண்ணிமைபை நாள் பத்துக்கு உதையம் அந்தி நேரமிப்படி இரண்டு நேரமும் போடவும். வெள்ளையும் கண் சிவப்பும் பூனை முதலானதும் இடியும் நிற்கும்.

எலிகடிக்கு மருந்து.

கொம்புத் தேனும், முற்றின சிறுக் கீரை வேரும் நன்று அரைத்து இந்த தேனிற் குழப்பி உள்ளங் கையிலொரு உருண்டை பிறங்கையிலொரு உருண்டை இப்படி நாள் மூன்றுக்கு சாப்பிட நிற்கும். கார்ப்பு, புளிப்பு விடவும். குரு பாதம் துணை.

மண்டையில் இரத்தம் விழுந்தாலும் இடித்தாலும் மருந்தும்.

நல்லதாய்க் கோரோசனை கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து காட்டில் காய்க்கிற முள்ளிக் காய்ப் பூவும் மொட்டும் பூவிய மூன்றும் சமன் படத் தட்டி நாசியிற் விடவும். உடனே இடியும், இரத்தமும் நிற்கும்.

வாதகல் சன்னிக்கு மருந்து.

வாதகல் சன்னி செய்யும் குணமும்:-

உடம்பு வேர்க்கும். கை கால் ஒரு நேரமிசிக்கும். இடுப்பில் அடித்தாப் போலே இருக்கும். மயங்கி வரும். இதற்கு மருந்து. ஆறு வருஷம் சென்ற வேப்பம் பட்டை ஒரு மிடாவுக்கு நிரப்பி சமுக் அஞ்சு வள்ளத் தண்ணீர் விட்டு எரிவிடாமல் மூன்று நாள் எரித்து.ங, படியாய்க் குறுக்கி வைத்துக் கொண்டு இதுவுடன் கடை மருந்து பெருங்காயம், விராகனிடை .உ, வெள் வெங்காயம் விராகனிடை.உ, கருஞ் சீரகம் விராகனிடை .உ, இந்துப்பு விராகனிடை .உ, இரசம் விராகனிடை.உ, சதகுப்பை விராகனிடை.உ, பரங்கிப் பட்டை விராகனிடை.உ, நேர் வாளம் விராகனிடை .உ, அதிவிடையம் விராகனிடை.உ, இந்தக் கடைச் சரக்கெல்லாம் அந்தக் கஷாயத்தில் இடித்துப் போட்டு சித்திர மூலமும் ஒரு மாங்காயளவு இதுவுடன் போட்டு பச்சிலைச் சார் வகை கையாந்தகரைச் சார் படி.க, துளிஞ்சி சார் படி.க, நொச்சிச் சார் படி.க, மொடக் கொத்தான் சார் படி.க, ஆதண்டஞ் சார் படி.க, இது கஷாயத்தில் கலந்து எண்ணெய் வகை நல்லெண்ணெய் படி.க, வேப்பெண்ணெய் படி.க, விளக்கெண்ணெய் படி.க, பசுவின் வெண்ணெய் படி.க, புங்கெண்ணெய் படிக, இந்த எண்ணெயும் இதுவுடனே விட்டு எரித்து பதத்தில் கியிடச் சுடாதிருக்கும். அந்தப் பதங் கண்டு இறக்கிச் சாறு வாங்க மிட்டு முழுகவும். பச்சை அரப்புநீம், சிவக்க சீயக்காயும் எந்த வகை சன்னியுந் தீரும். சிவனே துணை.

வரக்கணை, மாந்தக் கணை, அஸ்தி சுரம் இதற்கு எண்ணெய்.

சித்தா மணக்கெண்ணெய். பச்சை முற்று இடித்து உலர்த்தி அந்த எண்ணெய் ஒரு படி இதற்குக் கடைச் சரக்கு ஏலம் விராகனிடை.க, நற்சீரகம் விராகனிடை.க, வெந்தயம் விராகனிடை .க, ஈர வெங்காயம் விராகனிடை.க, அகத்திப் பட்டையும் பச்சை மூங்கில் மேல் தோலுஞ் சீவி இது இரண்டு மரைத்து கட்டப் போட்டுக் கொள்ளவும். வல்லாரை, புளியாரை, தகரையிலை, சுரத்தழை, உளர் அவரந் தழை, பழம் பாசி, மணத்தக்காளி, வில் பத்தழை ஆக வகை எல்லாம் ஒன்றுக்கு சாறு எண்ணெய் இரண்டும் ஒரு அளவாக மண்சடுப்புக் கட்டி விறுயகள் புகை செய்து அடுப்பில் வைத்து ஆவரன் விறகிட்டு எரித்து எண்ணெய் பதமான

வாறு இறக்கி வைத்துக் கொள்ளவும். குழந்தைகளுக்கு அந்திக்கு ஒரு கரண்டி வேறு ஒரு காசிடை இரண்டு நேரமும் நாள் உயரும் கொள்ள எந்த வகை கணை சுரங்களும் தீரும். கார்ப்பும், புளிப்பு விடவும். சிவ மயம்.

வயிற்றிலுள்ள தீரிப்புழுவின் மருந்து.

ஆடு தின்னாப் பாளையைக் கொண்டு வந்து ஒரு பானையில் தண்ணீரில் விட்டுத் தட்டுப் பருத்தி அந்தத் தழையை புட்ட வித்து குழந்தையின் தொப்பிளுக்குள் வைத்துச் சீலை காட்டி ரா ரவைக்கிப் படுத்திருக்கச் சொல்லி காலமே பிற ஒரு சேரை நீச்சத் தண்ணீருடன் ஒரு வாக்கன் விளக்கெண்ணெயுஞ் செரிச்சுக் கொடுத்தால் புழு வெல்லாம் கூடு யெல்லாம் விழுந்து போம்.

பிள்ளைகளுக்கு மூலக் கடுப்பு.

புழுங்கல் நெல்லரிசியிற் வெள்ளை வெங்காயப் பருப்பு முளை யெடுத்து பசுவின் பால் விட்டு குழைய வேக வைத்துக் கொடுக்க நிற்கும்.

திருகு சன்னிக்கு மருந்து.

உகாம் பட்டையும் இந்த இலையும் பத்துக் காசிடை அரைத்துப் பெருங்காயம் பண விடை கலந்து ஆண் பிள்ளைக்குப் பெண் பிள்ளை சிறு நீரில், பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை சிறு நீரில் கொள்ளவும்.

உள் வலிப்புக்கு மருந்து.

உசிலம்பட்டை பெருங்காயமும் அந்தப் படி சிறு நீரில் கொள்ளவும்.

சடுகுடுப்பாறுக்கு மருந்து.

கடுகெனப்புடனே சென்று மந்தைப் புளியுந் தனைக் கொணர்ந்து திடமுடனே வெதுப்பி ரள் செய்விடுலவன் மொடாமங் கூட்டச் சடுதியில் வந்த விக்கல் சடுகுடுப்பாறும் போமே.

வெட்டு காயத்துக்கு மருந்து.

குப்பை மேனியிலையுந் தண்டும் கையாந்த கரையும் அரைத்து விளக்கெண்ணெயில் கொதிப்பிட்டு எண்ணையைத் தடவவும். தீரும்.

முலை எழும்பாத பிள்ளைக்கு மருந்து.

முந்திரிக்கன் செடியைப் பிடுங்கி வந்து நசிக்கி அந்த ரசத்தை முலைக்குள் முலை எழும்பும்.

வாயில் இரத்தம் விழுந்தால் இதற்கு மருந்து.

பன்றி மதுக்காரை வேரைக் கொண்டு வந்து எலுமிச்சங் காய் மாதிரி அரைத்துக் காலமே வெந்நீரில் கொடுக்கவும். சிறுகாஞ் சோரி வேர், எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்து அஸ்தமான வேளையில் கொடுக்கவும்.

குட்டுக்கு குண மருந்து.

சிறுநீர் விழுகிற போது சுருக்கென்ற வயிறு நோகும். இதற்குச் சரி சுண்டைத் தழை ஒரு ஆத்துக கூடை தழை கொண்டு வந்து குவைத்து சாறு வாங்கிக் கொண்டு மூன்று நாள் மூன்று படி சாறு வாங்கி ஒரு சிரங்கை விளக்கெண்ணெய் கூட கூட்டிக் கொடுக்கவும். கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

நாலா மாறுதலுக்கு மருந்து.

பட்மிளகு, திப்பிலி, கல்லுப்பு, வெல்லம் இவை கூட்டிச் சேர்மானம் பண்ணி பசுவின் நெய் கூட்டி கொடுக்கவும். இந்தப்படி முறை வருகிற நாள் தொட்டு மூனறு நாளைக்கு ஆறு நேரம் கொடுக்கவும். நாலா மாறல் நீங்கும். இது கை கண்டது.

காது கேளாததற்கு மருந்து.

அத்திக்காய், எருக்கிலங்காய், சுக்கு, இவை மூனறு நறுக்கி நல்லெண்ணெயில் ஊறப் போட்டு காதில் விடவும். காது கேட்கும்.

சிலந்தி ஆறும் புண்ணுக்கு மருந்து.

நத்தச் சூரி வேரும், புல தடிக்கி வேரும் இந்த இரண்டும் வேரும் வடக்கே போகிற வேர் பட்டை கொண்டு வந்து ஆமணக் கெண்ணெயில் போட்டு அதனுடன் சற்று வசம்பு ஒரு உள்ளி தட்டிப் போட்டுக் கொதிக்க வைத்து அந்த எண்ணெயைப் புண்ணுக்குத் தடவவும். நா பட்டு ஆறுமலிருந்த புண்ணும் ஆறும்.

நஞ்சு தின்றால் மருந்து.

மஞ்சக் காரம் பழத்தைத் தண்ணீரில் அரைத்துக் கொடுக்க நஞ்சு தின்ற மயக்கந் தீரும்.

கண் புழு வெட்டுக்கு மருந்து.

மிளகு, திப்பிலி, இவை வெற்றிலைச் சாற்றில் அரைத்து கண்ணில் போடவும். கடுக்காய் மஞ்சள் இவை சுட்டு எருமைத் தயிரில் கூட்டிப் போடவும். புளித் தயிரில் போட்வும்.

அனல் மேல் இருமலுக்கு இருந்து.

வெள்ளுள்ளிப் பருப்பு ஒரு சேரை தொலிச் செடுத்து நடு முனை வாங்கிப போட்டு காராட்டுப் பாலில் பச்சைப் பால் ஒரு படி பால் விட்டு வேக வத்து விசக்க வேக விட்டு எடுத்தத தின்னவும். இப்படி மூன்று நாள் மூன்று நேரம் பாகைப் பண்ணித் தின்ன இருமல் நீங்கும். இது கை கண்டது.

பெரும்பாடு உதிரம் சாயசிறதற்கு மருந்து.

நரு முன்னை வேர் வடக்கே போகிற வேரை பருவேனுகக் கொண்டு வந்து பட்டை தட்டி நேக அரைத்து அத்துடன் புண்ணுக்குப் பூட்டு இலை தைவத்து ஒரு பிடி சார் வாங்கி ஈர வெங்காயம் மோருக கூட முள்ளசிகாய் பிரமாணம் அரைத்துப் போட்டு நல்ல வெல்லம் முள்ளிக் காயளவு பசுவின் நெய்யிற் அவ்வள்வு கூட்டி கலந்து கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். பத்தியம்.

பிள்ளையில்லாததற்கு குறிப்பும் மருந்தும்.

ஈசுவர கற்பினையாலெ சுத்த மலடாயிருந்தால் அதின் குணம் மாதஞ் சென்று திட்ட மாதிற பொது வயிறு தடித்திருக்கும். அல்லது மலட்டுப்பபுழுவின் குணமானல் மாத மொருக் கால் திட்டமாகிற வேளைக்கு . அடிவயிறு சுருக்கென்று நோகும். கோள் கொண்டு வந்து குத்துகிறுப் போல் இருக்கும். அல்லக் தெய்வக் குறையானல் மலமிறங்கி வருகிற போது வயிறு நோகும். அல்லது காற்றுக் கருப்பானல் அடிவயிறு பலகாலு நோகும். இப்புடிக் கொத்த குணங்கள் உண்டானல் அது கண்டறிந்து அதற்குத் தக்க அவிஷதம் செய்ய வேண்டியது. மருந்து பொன்னுங்காணி வேர், சிறு புனை வேர், நல்ல வெல்லம் இவை கூட்டி அரைத்து பசுவின் பாலில் 7 நாளைக்குக் கொடுக்கப் புத்திரனுண்டாகும்.

வயிற்றில் கவுசையின் குணமும் மருந்தும்.

அடி வயிற்றிலே ஒரு உள்ளங் கைப் பிரமாணம் வட்டங் கொண்டு கல் சொரிந்தார்ப் போல் இருக்கும். வயிறு நறுக்கு நறுக் கென்று நோகும். பசி குளிர்ந்து சோறு செல்லாது. தா முண்டாம். உடம்பு மெலியும். நடை தளர்ச்சியாகும். மேலிளைப்பு உப்பிச முண்டாகும். கை கால் அசர்ந்து போகும். உடம்பு ஆருட்டமாய் பால மாறித் தினமாய் அசதியுண்டாகும். இதற்கு மருந்து பேய்க் குமட்டிக் காய், கொண்டு வந்து அந்தக் காயைப் பொதித்து அதில் இரசம் பணவிடை .க, கெந்தகம் பணவிடை .உ, இவை இரண்டு மருந்தும் போட்டு பின்பு சிறுக்கீரை கொண்டு வந்து அந்தத் துவாரத்தை அடைத்து அரைத்து அடைக்கவும். பூசிய மூன்று அக்கினி பீடம் போடவும். நன்றாக வேக வைத்தெடுத்து எலுமிச்சம் பழச் சார் விட்ட ரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு உருட்டி வைத்துக் கொண்டு கொடுக்கவும். முன்னமே ஒரு பாக்களவு கருப்புக் கட்டி கொடுத்து பின்பும் மருந்து கொடுக்கவும். இப்படி நாள் சய. அம் தின்னவும்.

செங்கரப்பான் குணமும் மருந்து.

செப்பவே அமர்ந்த கொங்கை செங்கை மாதர் கேள் மின் வெப்பதான் செங்கரப்பன் மெய்யிலே வி

மெய்யிலே விரைந்திடிற் குப்பை மேனிச் சாற்றிலெண்ணெய் மூன்று நாள் குடித்திடில்.
ஒப்பமான செங்கரப்பான் உடனே உடல் விட்டோடுமே.

இதன் குணம்:- சரீரத்திலேல கரப்பான் மிஞ்சி உடம்பு திமிர் எடுத்துச் சொரிந்த விட மெங்கும் சற்றுப் புண்ணுல் அதுக்கு மருந்து குப்பை மேனிச் சார் கால் படி ஒரு கரண்டி நல்லெண்ணெயுங் கூட்டிக் கலந்து மூன்று நாள் காலமே குடித்துப் பத்தியத்துடனிருக்கவும்.

ஜலம் அடைப்புக்கு மருந்து.

நாயுருவி இலை ஒரு பிடி, கொண்டு வந்து அதனுடன் கல்லுப்பு பனை வெல்லம் கூட்டி எதமாய்த் திறட்டி உள்ளுக்குக் கொடுக்க சகலமடைப்வு விடும். பின்னும் குமிளங் கொழுந்தும் நற்சீரகம், சர்க்கரை இவை கூட்டிப் பசுவின் பாலுடன் கொடுக்க சலக் கட்டு விடும். ஆண் கட்டுக்கு பூமி சர்க்கரைக் கொழுந்து ஏழு கொழுந்து சிறு வயதில் வேற் புரணியும் கூட்டி அரைத்து பசுவின் பாலுடன் குடிக்கவும். ஆண் கட்டு விடும். பின்னும் குட்டித் தக்காளி சருமூலமும் அரைத்து செம்மறியாட்டுப் பாலுடன் கலக்கி குடிக்கவும். ஆண்டு கட்டு விடும்.

பேய் வீக்கத்திற்கு மருந்து.

கோவைத் தழை, நீர்ப் பூலாநு தழை, தாளித் தழை, இவை மூன்றையும் அரைத்துப் பூசவும். பேய் வீக்கந் தீரும்.

உடம்பு குடைச்சலுக்கு மருந்து.

பொடுதலையை அவித்துப் பசுவின் பாலிற் பிசைந்து நல்லெண் விட்டுக் குடிக்க உடம்புக் குடைச்சல் நிற்கும்.

குன்ம லட்சணக் குணம்.

குலையிலே எரிவு தோன்றிக் குலைந்திடும் உடம்பு தானும்
நிலையுடன் வயிறுங் கை கால் நிசம தாகுங் கண்ணொடு
தொலை விலா மெய் யிளைத்து தோன்றிடு மெரிவு சேர
இதுயென வேண்டாங் கண்டேரேி குன்ம மிதவுந் தானே.

சீரகம், சுக்கு, ஏலம் இது மூன்றும் எலுமிச்சம் பழச் சார் விட்டு நாலு நாழிகை அரைத்து பருத்தி விரைப் பிரமாணம் குளிகை பண்ணிக் கொண்டு துளசியிலை நெல்லிக்காய், கருவாதி அரைத்து அம்மரு வாதி வெண்ணெய் கூட்டி அதில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் தயிர் வார்த்து உண்ணவும்.

வயிறு ரத்தமுஞ் சீதமுங் கழிந்தால் வயிறு வலிக்கு மருந்து.

கருவேப்பிலை அரைத்து பசுவின் தயிரில் குழப்பி முழுகவும். முத்தின ஆவரை சர்வ மூலமும் பிடுங்கி உலர்த்திப் பொடி செய்து அந்தப் பொடி வெரு கடிப் பிரமாணம் எருமைத் தயிரில் இகள் குழப்பி முழுகவும். நற்சீரகம், வெங்காயம் சமஞக அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பி முழுகவும். வயிறு ரத்தமுஞ் சீதமுங் கழிந்து வயிறு வலி கண்டால் இந்தப் படி கொடுக்கவும்.

இரத்தக் கடுப்புக்கு வயிறு தள்ளீரோடிஞல் மருந்து.

வெண்ணுடங் கொழுந்து சிவந்ததை ஒரு பிடி எருமைத் தயிரில் அரைத்து முழுகவும். பெருமரக் கொழுந்தைப் பறித்து வந்து அரைத்து ஒரு புளியங் கொட்டை மரியாதி உள்ளங் கையிற் குளித்து எலுமிச்சம் சார் விட்டு உருட்டி விழுங்கவும். ஒரு கொட்டை பூரு வெங் காயத்தில் கல்லுப்பு அரைத்துப் பூசி அக்கினி புடம் பண்ணி உப்பை உதிர்த்துப் போட்டு அரைத்து இள வெந்நீரில் கொடுக்க வயிறு பிச்சுகிறது நிற்கும்.

வயிறு கழியாதிருந்தால் இதற்கு மருந்து.

சோற்றுப் பாலை கரிக் கழுவி ஒரு கரண்டி எண்ணெய் காய்ச்சி கூடக் கூட்டிக் கொடுக்க வயிறு கழியும். பிரண்டை விதில் விலாங் குமிழைச் சுட்டு அந்தப் பிராணி ஊச்சா மலும் கரியுங் கூடப் பொடி செய்து வைத்துக் கொண்டு நித்திரையில் தா வசம் போல்

கிடப்பார்கள். செரங்கை வறகரிசி தீட்டின தவுடு ஆனை வணங்கி சாறு மூலமும் பொடி செய்து பேய்க் கர்மனக் கெந்தகம் போலிருக்கிற பொடி ஊமத்தங்காய் யரு பொடித்த தூள் இது நாலு செங்கலாவது ஒரு கல்லில் அம்மியுங் குழவியுமாக ஊமத்தன் சாற்றில் நிற்மானமாக அரைத்து அடைத்துக் கொண்டு காற்றுத் தப்பி நின்று தாவ .ங, நாழிகை திட்டம் பார். கலமும் எடுக்கலாம்.

செத்த பிள்ளை விழ மருந்து.

கொடக் கிழங்கு அரைத்துக் கொம்புனிடில் விழும் மாட்லினிஞ்சியிலை மாற்றமே
தேழயுரு வெந்தொட்டி கொம்புனிடில் விழுமே
பிள்ளையுடன் மயந்துட விற் கொள்வீர் மருந்து.

பேய் வீக்கத்திற்கு.

கோவைத் தழை நீர்ப் புலாந்தழை தாளித் தழை இவை மூன்றும் அரைத்துப் பூசவும். பேய் வீக்கந் தீரும்.

பேதிக்கு வாங்க மருந்து.

நேர்வாளம் விராகனிடை .ச, அசமதம் விராகனிடை அ, சுக்கு விராகனிடை .க, திப்பிலி விராகனிடை.உ, கடுக்காய் விராகனிடை.உ, இது வெல்லாம்வெந்நீர் விட்டரைத்து குன்றிப் பிரமாணங் குளிகை செய்து நிழலிலுலர்த்தி அவத்துக் கொண்டு பேதியாகு வேண்டுமென்றால் மிளகு சார் சுடச் சுடக் குடிக்கவும். பேதியதிகமாம். போதுமென்றால் குளிர்ந்த தண்ணீரில் கால் கழுவி மோருஞ் சாதம் சாப்பிடவும். இது மீறில் எலுமிச்சன் பழத்தை அறுத்து குப்ப நிற்கும்.

பைத்தியம் பிடித்து பித்துப் பேசினால் மருந்து.

எலுமிச்சன் பழச் சார் ஒரு பிடி காசிச் செம்பில வித்து ஒரு சேர், பச்சைப் பயறுங் கூடப் போட்டு ஊர விட்டு காலம்பர இறுத்துக் கொடுக்கவும். ஒரு எலுமிச்சன் பழத்தை நாலு கீற்றாய் அறுத்து கூரிய சுண்ணாம்பு நடுவே வைத்து கூடப் பிடித்து சீலையில் சுற்றி பனியிற் வைக்கவும். (வேறு) எலுமிச்சன் பழம் நடுவே துளை பண்ணி அதிலே கூரிய சுண்ணாம்பு கூறு கொண்டு அந்தப் பழமும் பனியில்வைத்து அந்தச் சார் குடித்த.ஒரு நாழிகைக்கும் பிறகு இந்த.இரண்டு பழமுந் தின்னக் கொடுக்கவும். வாந்தி யெடுக்கும். விரோசமாகும். கடிசாக எடுத்தால் புழுங்கலரிசியை இளவறுப்பாய் வறுத்து சுக்கு ஒரு தெறு தட்டிக் கூடப் போட்டு இரண்டு படி தண்ணீர் பொரி கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். மறுநாள் ஆயப் பட்டை ஒரு கையகலம் வெட்டி வந்து தட்டிக் கருஞ் கொள்ளு அரைப்படி கூடப் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு கூடப் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும். இதற்குப் பத்தியம்:- விபரம். சாமைச் சோறு, சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், வெள்ளுள்ளி இது வெல்லாம் இள வறுப்பாய் வறுத்து அரைத்துப் பழம் புளியை அவரையிலையிற் சுற்றிச் சுட்டு அந்தப் புளியைக் கரைத்து மிளகு நீர் வைத்து அந்த சாமைச் சோற்றில் மோரு வெடிக்க வைத்து வார்த்து அசனம் பண்ணவும். எட்டு நாள் கிரமித்து மொசு மொசுக்கை சர்வ மூலம், பேய்ப் புடலும் சர்வ மூலம் குறுக வெட்டி அரைப்படி பச்சைப் பயிறு கூடப் போட்டு .ச, படி தண்ணீர் விட்டு அதிலே ஒருக் கொட்டை வெங்காயம். கறிவன் மிளகு சுக்கு, திப்பிலி இது முடிந்து கூடப் போட்டு கஷாயமாயக் காய்ச்சி அரைப்படி யான பிறகு இறக்கிக் கொண்டு மூன்று நாளைக்கு முடிந்தகற்கத்தை மட்டும் அரைத்து கஷாயத்தில் கொடுக்கவும். பைத்தியம்விட்டுப் போகும். இது கை கண்டது.

பச்சோந்தி கடித்தவற்கு மருந்து.

பேய்க் குமட்டி பழம், தேற்றன பழம், இது இரண்டு பழச் சாறும் ஒரு பிடி வாங்கி பழைய வெள்ளைச் சீலையில் ஐந்தாறு தரம் பிடித்து உலர்த்திக் கட்டிக் கொண்டு அவிஷதங் கொடுக்கிற போது அரபானம் பழைய தண்ணீரில் நாலு விரலகலம் அந்தச் சீலையைக் கிழித்து அந்தத் தண்ணீரில் கலக்கி கசக்கிப் பிழிந்து கொடுக்கவும். வாந்தியும் பேதியும் ஆகும். மூர்ச்சையாகும். இதற்குத் தெளிவு கஞ்சி விபரம் வில்லை வேரும், பச்சைப் பயிறு, அரிசி

வருத்தப் பொடித்தப் போட்டு எட்டொன்றுய்க் காய்ச்சிக் குடிக்கத் தெளியும். இதற்குத் தவளை மருந்து கோரைக் கிழங்கு, அருகன் வேரும், கற்றான் மடல் சீந்தித் தண்டு. நெல்லிக்காய் சாரும் இது ஐந்து வகையுங் கூட்டித் தவளையிடவும். மூன்று நாள் இந்தப் பிரகாரம் தவளையிடவும். எலுமிச்சன் பழம் பிழிந்து சர்வாங்க மெங்குந் தவளையிடவும். ஆயரங் கொடன் தண்ணீர் விடவும். அப்போது தெளியு மருந்து பூரகமும். முசுறு முட்டை, முலைப் பாலில் எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்து உள்ளுக்கு மூன்று நாள் கொடுக்கவும். தீரும். உப்பு, புளி தவிர்க்கவும்.

4.9.62.

மச நாய் கடிக்கு மருந்து.

பொன்னூமத்தை விரை தைலம் வாங்கி ஒரு பணவிடை உள்ளுக்குக் கொடுக்கவும். முசுறு முட்டையும் அரைத்துக் கொடுக்கவும். புலவிமல்லு உரைத்துக கடிவாயில் பூசவுந் தீரும்.

மசநரி, மச நாய் கடிக்கு மருந்து.

இந்திரிய கோபப்பூச்சியைப் பிடித்து வந்து வெல்லத்திற் புதைத்து உண்டை பண்ணி உள்ளுக்கு மூன்று நாள் கொடுக்கவும். மசை யெழும்பாமல் நின்று போகும். இது கை கண்டது. குரு பாதம் துணை.

மூலரோகத்திற்கு மருந்து.

காட்டுக கறணை கருங் கறணை, காரும் பிரண்டை செம்பிரண்டை, தொட்டம் பெருகும் மதுக் கிழங்கு சொல்ல வரியமாப் பிரண்டை வாட்டி இடித்துப் பொடி செய்து மதுவுங் கொள்ள வல்லீராய்க் கூட்டிவுள்ள மூல மெல்லாங் கூ கூ வென்று வோடிடுமே. இதற்கு காளன்று சுக்கு, கடுகொடு திப்பிலி, நேரொக்கக் கூட்டி நித்தமுந் தின்னக் கால் வேரொக்க போமே மூல வியாதி.

சிறுகக்கு மருந்து.

கல் சர்க்கரை, கல் நாரும் நற்சீரகம், சம்புக் கிழங்கு மோரும் புதுப் பானையில் ஊறப் போட்டு மற்று நாள் குடிக்கவும்.

உள்மூலம் பிறமூலம் இதற்கு மருந்து.

ஒரு சாடு நிலையாவரை பிடுங்கி வந்து நிழலிலுலர்த்தி இடிக்கிற அன்றைகே வெய்யிலிலே உலர்த்தி இடித்த தூள் புடம் பண்ணிக் கொண்டு தெள்ளி மாவெடுத்து ஒரு புது. பானையிலிட்டு வைத்துக் கொண்டு ஒரு வெரு கடிப் பிரமாணம் உள்ளங் கையில் வைத்துக் கொம்புத் தேனிலொரு துளி விட்டுத் தின்னவும். இப்படி ஒரு மண்டலந் தின்னவும்.

எலும்புருக்கி பெரும்பாட்டுக்கு மருந்து.

சாதிக்காய் பலம்.க, சாதி பத்திரி பலம்.க, கிராம்பு பலம்.க, சுக்கு பலம்.க சுக்குக்கு மேல் புறனை சீவிப் போட்டு பலகரை பலம் .க, வெங்கக் கால் நன்றாக்கி ஏழு வடி கொண்டு எடுத்த தூள் பலக்கரைப் பொடி மருவாதி வெங்கக் கால் பொடியும் நிறுத்துக் கொண்டு இந்த ஏழு மருந்தும் மற்ற படி பசுவின் நெய்யிலும் ஊறப் போட்டு சூரிய புடம் வைத்து ஏழு நாளைக்கு ஒரு கரண்டி நெய் கொடுக்கவும். இப்படி ஏழு நாள் கொடுக்கவும்.

நிலாவாரைக் கற்பம்.

நிலாவாரைப் போதப் பிடுங்கி வந்து நிழலிலுர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி பேய்ச் சுரைக்காய் குடுக்கையில் அடைத்து வைத்துக கொண்டு இந்தப் பொடி வெரு கடி பிரமாணம் வெந்நீரில் கொள்ளக் கடி விஷந் தீரும்.

பெருச்சாளி கடித்தால்:- செருப்பட்டிச் சாற்றில் கொள்ளவும்.

எலிக்கடிக்கு:- முருங்கையிலைச் சாற்றில் கொள்ளவும்.

மூஞ்சி யெலி கடித்தால்:- சாறணைச் சாற்றில் கொடுக்கவும்.

சிறு பாம்பு கடித்தால்:- உத்தமதாளிச் சாற்றில் கொடுக்கவும்.

நாக பாம்பு கடித்தால்:- விரும்பிச் சாற்றில் கொடுக்கவும்.

விரியன் கடித்தால்:- சிறுகுறிஞ்சிச் சாற்றில் கொள்ளவும்.

மலபாம்பு தீண்டினால்:- எலுமிச்சன் பழச் சாற்றில் கொள்ளவும். கூ்டு பாம்பென பட்ட தெல்லாந் தீரும்.

செய்யான் கடிக்கு:- பாகையிலைச் சாற்றில் கொள்ளவும். கட்டுவாக்காலி விஷந் தீரும்.

அறணை கடி, விஷக் கடி, செவ்வட்டை கடி, வண்டு கடிக்கும் ஓந்தி. குரங்கு, பேய் நாய், பேய் நரி இவைகளுக்கும்:-

ஆவரன் சாற்றில் கொள்ளவும்.

ஈழை இருமலுக்கு:- கையாந்த கரைச் சாற்றில் கொள்ளவும்.

முளிமாறலுக்கு:- நொச்சியிலைச் சாற்றில் கொள்ளவும்.

வெதுப்புக்கு:- மறுவெண்ணெயிற் கொடுக்கவும்.

விக்கல், சக்கல், வெள்ளோக் காளம் இவைகளுக்கு:- நல்லெண்ணெயிற் கொள்ளவும்.

திரேகம் ஊதலிட்டிருந்தால்:- தேனில் கொள்ளவும். திரேகம் வடியும்.

திரேகம் புஷ்டிக்க வென்றால்:- பசுவின் நெய்யிற் கொள்ளவும். சரீரம் பாலிக்கும்.

சோகை, காமாலைக்கு:- வெள்ளாட்டுக் கோமயத்திற் கொள்ளவும்.

மூல வியாதிக்கு:- பிரண்டைச் சாறும். நல்லெண்ணெயு இந்தப் பொடியுங் கூட்டித் தின்னத் தீரும்.

மருந்தீட்டுக்கு:- உளர் முருங்கைச் சாற்றில் கொள்ளவும்.

க்ஷயமும் சத்தியுந் தீர:- குப்பை மேனிச் சாற்றிற் கொள்ளவும்.

குன்ம வியாதிக்கு:- கருங்குட்டித் தக்காளிச் சாற்றிற் கொள்ளவும்.

வாய்வுக்கு:- பசுவின் பாலிற் கொள்ளவும்.

சகல கழிச்சலுக்கு:- எருமை மோரில் கொள்ளவும்.

கண் சோதிக்கு, செரியாக் குணம், நீர்ப்பாடு, கோவைப் பாடு இவையெல்லாவற்றிற்கும் பசுவின் மோரில் கொள்ளவும்.

வயிறு கீரிப் புழுவுக்கு, சிறு புழு, மேய்ச்சலுக்கு:- வேப்பிலைச் சாற்றிற் கொள்ளவும்.

வயிற்றுக் கழிச்சலுக்கு:- எருமைத் தயிர் கொள்ளவும்.

சேற்றுமன் கட்டினால்:- மிளகு பொடி கலந்து கொள்ளவும்.

பித்தத்துக்கு:- திப்பிலி பொடி கலந்து கொள்ளவும்.

வாதத்திற்கு:- சுக்குப் பொடி கலந்து கொள்ளவும்.

கிரந்தி, கரப்பானுக்கு:- குளிர்ந்த தண்ணீரில் கொள்ளவும்.

படுவான் சிலந்தி, பிளவை, விப்புருதி, கடி விஷம், மதவைக் கட்டுச சூனியம் மற்று முண்டான வியாதியெல்லா வற்றிற்கும் இந்த கற்பத்தை கருங் குருவை அரிசியில் உய்யச் சோறு பண்ணி உருள்ளுக்குக் கொடுக்க தீரும்.

நிலப்பனைக் கற்பம்:- நிலப்பனைக் கிழங்கு இரும்புப் படாமல் கிள்ளி எடுத்து வந்து நிழலிலுலர்த்திப் பொடி செய்து அம்மிக் கல்லில் அரைத்து வசிசிர காயம் பண்ணி பன்னிரண்டு நாட் கொள்ள இளைத்திருக்கிற சரீரம் பலக்கும்.

இருமலுக்கு:- பசுவின் பாலிற் கொள்ள வசீகர*முண்டாகு* வும். ஆவின் பால் அரை மண்டலங் கொள்ள வசீகரமுண்டாம்.

புத்திரனில்லாத பேருக்கு:- காராட்டுப் பாலிற் கொள்ளவும். புத்திரனுண்டாம். தேனிற் கொள்ள சரீரத்திலிருக்கிற விஷந் தீரும்.

குலைக் கட்டுக்கு:- இளநீரில் கொள்ளவும்.

மூன்று மாறலுக்கு:- வாழைத் தண்ணீர் கொள்ளவும்.

மாலைக் கண்ணுக்கு:- எலுமிச்சன் பழச் சாற்றிற் கொள்ளவும். பசுவின் நெய்யிற் கொள்ள வீரிய விர்த்தியுண்டாம்;

குளிர் வெதுப்புக்கு:- இளநீர் கொள்ளவும்; குளிர் சுரம் விடும்;

குடல் வதத்திற்கு:- கரிசாந்தழைச சாற்றிற் கொள்ளவும்.

இந்தக் கற்பமும் நிலாவாரைக் கற்பமும் இரண்டுஞ் சமஞக வைத்துக் கொண்டு இரண்டு தேசிக காலம் பசுவின் பாலிற் கொள்ள, நரை மாறும். முற்றும். வேறு.

நத்தியா வட்ட வேர். தாத் தொட்டி வேர் இது இரண்டும் எருக்கிலம் நாரிற் குளிசமாடி பெருவிரலிலிட்டுக் கையிலே போட்டு வெட்டராது.

<u>கையாந்தகரை கற்பம்.</u>

கையாந்த கரைச் சார் பிடித் தண்ணீர் வரைப் பிடி நெய்த்துளி ஒன்று இது மூன்றுஞ் சாரித்து ஒரு நாள் கொள்ள சரீரங் கெட்டியாம். ஈரேழு நாள் தின்னக் கண் கருக்கும். மூவேழு நாட் கொள்ள வடிவுண்டாம். மூன்று திங்கள் கொள்ள நரை திரை மாறும். இது கை கண்டது.

அமுகினிச் சாரும், காராம்பசுவின் பாலும் நெய்யுந் தேனுஞ் சரியாக இது வெல்லாங் கூட்டி இப்படி ஒரு வருஷம் கொள்ள ஆயிரம் வருஷம் இருப்பான். கையாந்தகரைக் கற்பம் முற்றும்.

<u>அகவைக்கு மருந்து.</u>

பெரிய வரிக் குமட்டிக் காய் கொண்டு வந்து நன்றாய் துவைத்து வடி கட்டி தனிச் சாறு பிழிந்து கொண்டு இதுவுடன் கடைச் சரக்கு கருஞ்சீரகம். விராகனிடை.ங, மிளகு விராகனிடை.உ, புழுங்கலரிசி அரை தவிடு ஒரு சேர் இந்தச் சாற்றில் மருந்தை அரைத்துக் கூடப் போட்டு அடுப்பில் வைத்துக் மெழுகு பதமானல் இறக்கி களச்சிக்காய் பிரமாணம் உருண்டை செய்து ஒரு உருண்டை ஒவ்வொரு நேரகம் கொடுக்கவும். இப்படி நாள் 7 இடை விடாமற் கொடுக்கவும். பேதியானல் மோருஞ் சோறும் கொடுக்கவும்.

<u>ஊரண்ட வாதம், நீர்க் கடுப்பு இதற்கு மருந்து.</u>

முடக் கொத்தானிலை ஒரு நாம்பல் கொண்டு வந்து இளவருப்பாக வறுத்து பசுவின் வெண்ணெய் சமன் கலந்து கொடுக்க நிற்கும்.

<u>வயிற்று கடுப்புக்கு மருந்து.</u>

மூன்று காசிடை மிளகு ஓட்டில் வறுத்து மூன்று காசிடை பனி வெல்லம் பொடி கூடப் போட்டு கிண்டினல் நார் போலே இருக்கும். இந்தச் சாப்பிடவும். எந்தக் கடுப்புந் தீரும்.

<u>காமாலைக்கு மருந்து.</u>

கடுக்காய் விரை போக தூள் செய்து நிலையாவரை வேர்ப் பட்டை தூள் செய்து இந்த இரண்டு பொடியும் மூன்று விரல் கொண்டு பசுவின் கோமயத்தில் கலந்து கொண்டு ரு நாள் கொடுக்கவும்.

<u>காமாலை, வயிறு பேதி வீக்கத்திற்கு மருந்து.</u>

காம்பு கத்தரித் தழையை ஈர வெங்காயம் கூடப் போட்டுத் துவைத்து அரைப்படி சார் கொள்ள வயிறு மிகுதியாய் பேதியானல் மிளகு நீர். புளி போட்டு கூட்டிக் கொள்ளவும். மோருஞ் சோறுங் கொள்ளவும்.

<u>குழந்தைகளுக்கும், பெரியர்களுக்கும் அஸ்திக்கு மோரெண்ணெய்.</u>

பாவட்டஞ் சார் படி.க, முடக் கொத்தான் சார் படி.க, நொச்சிச் சார் படி.க, ஆதண்டச் சார் படி.க, கையாந்த கரைச் சார் படி, க இந்த வகை வகைச் சாறும் ஒரு காடியில் அளந்து விட்டு இரண்டு படி பசுவின் மோரும் இரண்டு படி நல்லெண்ணெயும் இதுவும் இந்தச் சாற்றில் விட்டு கொம்பரக்கு விராகனிடை.க, நன்றாய்ப் பொடி செய்து எண்ணெயில் சுடவிட்டு அடுப்பில் உமிக்கானலில் நாழிகை வெதும்ப நிகம் குடுமரியாய் வைத்து மறுநாள் சாந்தமாக எரியிட்டு மெழுகு பதத்தில் இறக்கி ஒரு நாள் ஆற வைத்து மறுநாள் ஒரு காய்ந்த தண்ணீரில் பொடி இரப்பிட்டு ஒரு நாழிகையில்

முழுசிப் போடவும். இப்படி ரு நாளைக்கொரு முழுக்கு முழுசிப் போடவும். இதற்கு தீரும் வியாதி அஸ்தி சுரம், சீத சுரம், மாறல்.உ, முறை சுரம் , முறை சுரம் .ச லாம் முறை சுரம் தாந்திருக சன்னி யஙு-ம் தீரும்.

வண்டு கடி புண்ணுக்கு மருந்து.

வெள்ளாட்டுப் பீ பாலில் தகரை விரையை இரண்டு சாமம் ஊற வைத்து எடுத்து அந்தப் பாலில் அரைத்து புண்ணில் ஏகமாக அஞ்சு நாள் விடாமல் தடவத் தீரும்.

ஈழை நாசி இருமலுக்கு நெஞ்சு முறிந்த இருமிலுல் மருந்து.

வரிக் குமட்டிக் காய் பெரிய காயாய்க் கொண்டு வந்து மேல் புறம் சீவிப் போட்டு பண்பாக அறிந்து இதனுடன் ஈர வெங்காயம் சமனாக அறிந்து போட்டு இருப்புக் கொளாறும் நன்றாய்த் தட்டி நொய்ய சூரணம் செய்து கூடப் போட்டு புண்ணுக்குப் பட்டுத் தழையுங் கூட் அளவாகப் போட்டு ஒரு படி விளக் கெண்ணெயும் விட்டு அரைச் சமன் எலுமிச்சம் பழச் சாறும் கூட விட்டு நன்றாய் எரித்து மெழுகு பதமான பிறகு இறக்கி வைத்துக் கொண்டு மறுநாள் ஒரு கரண்டி சாப்பிடவும். இரண்டு மூன்று தரம் வயிறு பேதியாம். மிகவும் நல்லது. இதற்குத் தீரும் வியாதி நெஞ்சு முறிவு, ஈழை, காசம், வறட்சி இருமல், க்ஷயரோகம் முதலான வியாதிகளெல்லாந் தீரும். நாலு நாளைக்- கொரு தரம் கொள்ளவும். கை கண்டது.

கால், கை முடங்கி நடக்கமாட்டாதவர்களுக்கு.

செங்கல் எடுத்து வந்து தீய அடுப்பில் பழுக்கச் சுட்டு ஆதண்ட இலையைக் கீழே சீலை யில் படுக்க வைத்து முத்தின தேங்காய் திருவிப் போட்டு இந்த சுட்ட சூடு செங்கல்லை அதன் மேல் வைத்து தலையிலிருந்து இடுப்பு உள்ளங்கால் வரைக்கும் ஒத்திடவும். இப்படி நாள்.ங,க்கு ஒத்திடவும். அதின் பிறகு பாவட்டன் தழையை மூன்று வள்ளத் தண்ணீரில் சமனாகப் போட்டு அமுக வேக வைத்து கழுத்து முதலாய் இடுப்பளவு சுடச் சுட விடவும். இப்படி மூன்று நாள் விடவும். இதற்கு சந்து வாத சன்னி சர்வாங்க சன்னி இவையெல்லாந் தீரும்.

காதில் சீ விழுந்தால்.

உள்ளோடி பிறவோடி இந்த இரண்டு தழையும் கசக்கி காதில் மூன்றுக்கு விட்டு அடைக் கவும் நிற்கும்.

மாங்கிஷ தோஷத்திற்கு.

புங்கம் பட்டைச் சார் அஞ்சு துளி நக்க தாக முதலானதும் சுரம் முதலானதும் தீரும். விஷ சுரம், வீக்கமுந் தீரும்.

வண்டு கடிக்கு மருந்து.

நிலையாவரை சிறு நிழலிலுலர்த்தி சூரணஞ் செய்து குருவை நெல்லரிசியில் ஊ நீரில் உலை வைத்து நன்றாய்ச் சோறு வெந்த பிறகு இதில் இந்தச் சூரணத்தையும் போட்டு சாப்பிட நிற்கும். இதற்குத் தைலம், ஒரு சட்டியை அடுப்பிலே வைத்து தீ யெரித்து அதில் வெள்ளாட் டுப் புழுக்கையைச் சட்டியில் போட்டால் அது புகையெழும்பும். அதின் மேலே கலத்தை மூடினால் வட்டல் கருப்பேறும். அந்தக் கருப்பில் வெள்ளாட்டுப் பால் விட்டுக் காவிச் செம்பில் அரைத்தால் களிம்பாம். இதை எடுத்துப்பு புண்ணில் தடவ வண்டுகடி தீரும்.

சுத்தி வகை அறிய: நேர்வாள சுத்தி.

நேர்வாளக் கொட்டையை உடைத்து உள் முளையைத் தள்ளிப் பசுவின் வெண்ணெயிற் ஜலக் கரண்டியில் இட்டுப் பருப்புப் பொன்னிறமாகக் காய்ச்சி நிலத்தில் விடவும். வேண்டிய அநுபானத்திற்கு கொள்ளவும்.

நாவி சுத்தி.

நாவியைக் கொண்டு வந்து சிறுக்கீரை வேரைத் தட்டி ஒரு சட்டியில் ஒரு படி தண்ணீர் விட்டு அதிலே இந்த நாவியைப் போட்டு ஒரு நாழிகை விட்டு எடுத்து வெள்ளாட்டுக் கோமயத்தில் அவரைப் பிரமாணந் திரித்துப் போட்டு ஒரு சாமம் ஊறப் போட்டு எடுத்துக்

காடியில் ஒரு சாமம் ஊரப் போட்டு எடுத்து அநுபானத்திற்கு எல்லாங் கூட்டிக் கொள்ளவும்.

கெந்தக சுத்தி.

கெந்தகத்தை ஒன்றிரண்டாய் உடைத்து ஒரு பானையில் பால் வார்த்து வேடு கட்டி அதின் மேலே கெந்தகத்தை வைத்து மேல் சட்டிப் புகை போகாமல் மூடிப் பானையைத் தட்டிப் பார்த்து எடுத்துக் கொள்ளவும். சுத்தியமாம்.

இரச சுத்தி.

ஆவாரையிலை அரைத்துக் குகை செய்து இரசம் போகாமல் மூடிச் சட்டியில் வைத்து அந்த அம்மியைக் கழுவி திரங்கை தண்ணீர் சட்டியில் விட்டு ஒரு விறகாலெரித்து வற்றிக் கருகி வந்தால் எடுத்து ஆறவிட்டு இரசம் எடுத்துப் பிறகு அந்தக் குகையில் இரசம் விட்டு மூடித் தீ அனலிலே பிரட்டி மேல் கருகச் சுட்டு ரசம் எடுத்துக் கொள்ளவும்.

வெள்ளைப் பாஷாணம் சுத்தி.

வெள்ளைப் பாஷாணம் ஒன்றிரண்டாய் பொடி செய்து கெட்டிச் சீலை ரெட்டை மடிப்பாக மடித்து அதிலே மூட்டை முடிந்து சுண்ணாம்பு விளாங்காய் மாத்திரம் ஒரு சட்டியில் இரண்டு படி தண்ணீர் விட்டு மறு சட்டியில் இறுத்து . கட்டித் தண்ணீரிலே இரண்டு விரல் பதியக் கட்டிக் காய்ச்சி இரண்டு விரல் தண்ணீர் இறக்கிக் கொள்ளவும். ஏறின பிற்பாடு பரவிவரும்.

குக்குல சுத்தி.

ஆடா தொடைப் பட்டை அரைத்து அதிலே குக்குலம் போட்டுச் சேர்ப்பிக்கச் சுத்தியாம்.

அரிதார சுத்தி.

கத்தரிக்காய், முத்தினப் பழத்துக்குள்ளே அரிதாரத்தை வைத்து வெத்திலையில் சூழ்ந்து தண்ணீர் படாமல் கட்டித் தூக்கி ஒன்றரை நாழிகையில் இளம்புடமாக எடுத்துக் கொள்ளவும்.

வெங்கார சுத்தி.

முருங்கையிலைச் சாற்றில் வெங்காரத்தைக் கட்டித் தூக்கிப் பாதி நனைய இளங் கொதிப்பாக் கொதிக்கச் சுத்தியாம்.

சாதிலிங்க சுத்தி.

சாதிலிங்கம் ஒரு பலம். க, நாலு மடிப்புச் சீலையில் முடிந்து எள்ளெண்ணெயில் ஒரு சாமம் ஊர வைத்து எருமை மூத்திரம் பானையில் விட்டு சாதிலிங்கத்தைக் கட்டித் தூக்கி மந்தாக்கினியால் எரியிட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பாஷாண சுத்தி.

பசுவின் பால் நாழியில் சிறுக்கீரை நறுக்கிப் போட்டு இரண்டு பலம் பாஷாணம் நறுக்கிப் போட்டு இரண்டு பலம் மந்தாக்னியிகா ஒரு சாமம் எரியிட்டு இப்படி 7 தரம் எரியிட மிகவும் நல்லது: இரண்டு தரமானுலும் மிக்க நல்லது.

பச்சை துத்தம் சுத்தி.

பச்சை துத்தம் பூனை இறக்கின மலத்தில் பொதிந்து குகை கருகச் சுட்டு வைத்துக் கொள்ளவும்.

நேர்வாளத்தைச் சுத்தி.

நேர்வாளத்தை நாழிகை தண்ணீரிலூர வைத்து உடைத்து உள் முளை யெடுத்து விட்டு எருமைச் சாணியில் வேக வைக்க சுத்தியாம். இதுவும் பசுவின் சாணியில் வேக வைக்க சுத்தியாம். சுண்ணாம்புத் தண்ணீரில் வேக வைக்க சுத்தியாம்.

நெரி விஷம் சுத்தி.

நெரி விஷத்தை கோமூத்திரத்தில் மூன்று நாள் ஊறப் போட்டு எடுத்து உலர்த்திக் கொள்ளவும். சுத்தியாம்.

மனோசிலை சுத்தி.

மனோசிலையை காடியிலாவது கோமூத்திரத்திலாவது வேக வைக்கச் சுத்தியாம்.

வெள்ளைப் பாஷாணம் சுத்தி.

வெள்ளைப் பாஷாணத்தை பொடி செய்து ரெட்டை மடிப்புச் சீலையில் கட்டிக் கலச் சுண்ணாம்பு தண்ணீரில் டோளாந்திர நீர் சாமம் எரித்து வைத்துக் கொண்டு இதை முடிந்து தேனிற் போட்டு வேக வைக்க சுத்தியாம்.

கௌரி பாஷாணம்.

எலுமிச்சம் பழச் சாற்றில் விட்டரைத்து உருட்டி இரட்டை மடிப்புச் சீலையில் கட்டிக் குறுணி தண்ணீரில் ஒரு தேங்காயளவு சுண்ணாம்பு கலக்கி அதிலே டோளாந்திரமாக எரிக்க சுத்தியாம்.

தொட்டிய பாஷாணச் சுத்தி.

தொட்டிப் பாஷாணம் பொடி செய்து சீலையில் கட்டி மூன்று நாள் கோமூத்திரத்தில் டோளாந்திரத்தில் வேகச் சுத்தியாம்.

கற்பூர சலாசத்து.

கற்பூரத்தை தாம்பூர வளையச் சுத்தியாவது நெய்தல் கிழங்கு சாற்றிலாவது ஒரு சாமம் அரைக்கச் சுத்தியாம்.

இருசு.

பசுவின் தயிர் வார்த்தரைத்து அடை தட்டி ஓட்டில் வைத்து சுட்டு எரிக்கச் சுத்தியாம். வேறு. எலுமிச்சம் பழச் சாற்றில் கழுவச் சுத்தியாம். பால் துத்தத்திற்கு இது சுத்தி.

சத்தி சாரம்.

சத்தி சாரத்தைக் காடியிலரைத்துக் கொள்ளவும். அல்லது கோமூத்திரத்திலரைத்துக் கொள்ளவும். சுத்தியாம்.

வெச்சாரம்.

அரிசி கழுவின தண்ணீரிலரைத்து வெய்யிலில் வைக்கச் சுத்தியாம்.

கல்லுப்பு.

மூன்று வட்டம் ஓட்டில் வறுக்கச் சுத்தியாம்.

இந்துப்பு.

காடி வார்த்தரைத்து வெய்யிலில் வைக்க சுத்தியாம்.

அட்டுப்பு, பொட்டிலுப்பு.

மோரிலாவது. கோமூத்திரத்திலாவது அரைத்து வெய்யிலில் வைக்க சுத்தியாம்.

வளையலுப்பு புளியிலைச் சாற்றிலரைத்து வெய்யிலில் வைக்க சுத்தியாம். சிவந்த உப்பும் இதில் சுத்தியாம். சுக்கு, மிளகு, திப்பிலி ஆனைத் திப்பிலி சுக்கு மேல் புறனை சீவிப் போட சுத்தியாம்.

மிளகு புளித்த மோரில் போட்டு உலர்த்தச் சுத்தியாம்.

ஆனைத் திப்பிலி:- ஆட்டு மூத்திரத்திலாவது காடியிலாவது நனைத்து வெய்யிலில் வைக்கச் சுத்தியாம்.

ஓமம்:- சுண்ணாம்பு தண்ணீரூற வைக்க சுத்தியாம்.

நற்சீரகம்-கருஞ்சீரகம்:- இரண்டு சாமம் வெய்யிலில் வைக்கச் சுத்தியாம். இரண்டு

ஊமத்தன் விரை எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமம் ஊறப் போட்டு எடுக்கச் சுத்தியாம்.

எட்டி விரை சுத்தி:- தேற்றான் வேர்ச் சாற்றில் ஊற வைத்து இரண்டு நாழிகை எரிக்கச் சுத்தியாம். அரைப்படி நல்லெண்ணெயில் வேக வைத்து இருகளில் போட்டு கருவேலம் பட்டைச் சாற்றில் உலர்த்தச் சுத்தியாம்.

பாலரசம்:- விரையைப் பசுவின் பாலிற் வேக வைக்கச் சுத்தியாம்.

சர்வ சுரத்திற்கு தூபம்.

பரமரக் கட்டை, மயிலிறகு, பெரிய கழுதை விட்டையுடன் கும்பிலக் கொம்பி, வில்வ வேர், கூட வேர் முன்னித் தோல், தும்பை, துளசி, குந்திருக்கம் தவட்டிப் புகைக்க விட்டோடும். சர்வ சன்னி பாதமொடு சர்வ சுரமுந் தீர்ந்திடுமே.

பெரும் பாட்டுக்கு மருந்து.

முள்ளிலவம் பிசின் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கவும். ஒரு பிடி வெள் வெங்காயப் பருப்பு ஒரு பிடி நெய்யிற் வேக வைத்துத் தின்னவும். தீரும்.

காதில் தினசு புகுந்தால் மருந்து.

முள் முருங்கத் தழைச் சாறும். உத்தாமணிச் சாறும், நல்லெண்ணெயுங் கூட்டி காதில் விடவும். தினசு விழும். நோவுந் தீரும். மணத்தக்காளிச் சாறு, பேய் பீர்க்கந் தழைச் சாறும் நல்லெண்ணெயுங் கலந்து காதில் விட தினசு சாகும்.

வெட்டைக்கு மருந்து.

மொசு மொசுக்கைத் தழை, விஷ்ணுக் கிரந்தியும் குவைத்து ஈர வெங்காயம் நற்சீரகம் அரைத்து எருமை மோரில் பிசைந்து புளிக் கஞ்சி கொடுக்கவும். இருமல் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

பவுத்திரத்திற்கு மருந்து.

கருவாகை விரை நொறுக்கி பொடி பண்ணி தேன் விட்டுக் குழப்பி மூன்று நேரம் உள்ளுக்குக் கொடுக்கவும். முருங்கைப் பட்டை அரைத்து பனங் கருப்புக் கட்டியில் கலந்து தின்னவும். பலகரை நாலைந்து எலுமிச்சம் பழச் சாற்றில் ஊற வைத்து நல்லெண்ணெயில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். வெள்ளை நிற்கும்.

கதல் வாதத்திற்கு.

ஆசனத் தோல் விரை பொடி செய்து கோழி முட்டை வெள்ளைக் கருவு நத்தித்தழை, களச்சிக் கொழுந்து அரைத்துப் போட்டு வருத்துத் தின்ன கழல் வாதந் தீரும்.

உஷ்ணத்து வயிற்று வலிக்கு மருந்து.

கருந்துத்தித்தழை, அரைத்து நற்சீரகம் பொடி செய்து போட்டு வெண்ணெயிற் குழப்பி தின்னவும். தீரும்.

வெட்டை மேல் கண் சிவந்து நீர் விழுந்தால் மருந்து.

மயிர் மாணிக்கம் அரைத்து தயிரில் கலந்து தலைக்குத் தேய்க்கவும். இள வென்னீரில் குளிக்கவும்.

கண் மங்கலுக்கு மருந்து.

வில்லப் பழத்தை உடைத்து அந்தப் பழத்தை அரைத்துத் தலையில் தேய்க்கவும். மூன்று நாள் முழுகவும்.

ஒருத் தலை நோவுக்கு மருந்து.

சீந்தியிலைச் சாறு நெய்யிற் கொதிக்க வைத்து மறுபக்க நாசியில் விட நோவு தீரும். பின்பு ஏலம் பொடித்து சீலையில் வைத்து எண்ணெய் குத்தி எரித்து அவித்து அந்தப் புகை பிடிக்கவும். நல்லெண்ணெய், கண்ட பழமும் செரித்து மூக்கில் நசியமாறிட ஒருத்தலை நோவு தீரும்.

சர்வ சுரத்திற்கு மருந்து.

சுக்கு, கடுக்காய், சீந்தில் கொடி, கண்டங் கத்திரி, சறுவமூலமும் கொண்டு வந்து இது வெல்லாம் சமனுசக் கூட்டிக் காய வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

சீத சுரத்திற்கு.

நன்றி கஞ்சாங் கோரை, கத்தாழைச் சருகு, சித்தா முட்டி, பேய்ப் பீர்க்கு, பேய்ப் புடல், விஷ்ணுக்கிரந்தி, பேருமுட்டி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கொத்த மல்லி சிறு தேக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கஷாயம் வைத்துக் கொடுக்கவும்.

வாத பித்த தொந்தத்திற்கு.

சுக்கு சீந்தித் தண்டு நில வேம்பு, பேய்ப்புடல், வில்வ வேர், விஷ்ணுக்கிரந்தி, இது வெல்லாம் போட்டு ரெண்டு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி கொடுக்கவும். தொந்த சுரம் விடும்.

சுக விரோசனத்திற்கு கஷாயம்.

கொம்பு பாகவிலை இலையைக் கசக்கி பசுவின் நெய் காய்த்து அதில் பிழிந்து சுக ஊஷ்ணமானவர்களுக்குக் கொடுக்கவும். பேதிக்கும்.

சன்னி வாதத்திற்கு நசியம்.

சமுத்திராப் பழம் முலைப் பாலிலரைத்து மூக்கில் நசியம் விடவும். சன்னியும் போகும்.

கணையின் பேரில் சுரம் வந்தால் மருந்து.

நாராயணன் கன்னி வேர் பட்டைத் தட்டி பம்டையுடனே சீரகம் போட்டு நேக அரைத்து ஒட்டப்பமாய் தட்டி புடம் பண்ணி இள வெந்நீரில் மூன்று நேரங் கொடுக்கவும். உப்புப் புளி தவிர்க்கவும். கிரந்தி பண்டம் விடவும்.

வண்டு கடிக்கு மருந்து.

திருகு கள்ளிக் கொண்டு வந்து ஒரு பானையிலே நாழித் தண்ணீர் வார்த்து அந்தத் த- தண்ணீரிலே கள்ளியைப் போட்டு வேக வைத்து பச்சரிசி மாவு அந்தப் பானைக்கு வேடு கட்டி அந்த மாவை புட்டவியாக வேக வைத்து அந்த மாவை யெடுத்து மூன்று நாள் தின்னவும். கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

கிரந்திப் புண்ணுக்கு மருந்து.

விடத் தொந்தழையைக் கொண்டு வந்து வேக வைத்து புண்ணில் வைத்துக் கட்டவும்.

மலச்சல் மடைத்தால் மருந்து.

சவுக்காரம் தண்ணீர் விட்டரைத்து இரண்டு மிளகு கூடப் போட்டு அரைத்து சீலையில் வைத்து திரியாக திரித்து பலம் வரும் வாயில் வைக்கவும். முசல் புழுக்கை மலம் வரும் வாயில் வைக்கவும். முருங்கைப்பு வருத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

கப ரோகத்துக்கு மருந்து.

முடக் கொத்தான் வட்டத் திருத்தி பேரமுட்டி மணத்தக்காளி, பேய், முசட்டை, நொச்சிக் கொழுந்து குப்பை மேனி நிலாவரை, வசம்பு பெருங்காயம், இவை யெல்லாம் அரைத்து காதிற் பிழியவும். மேலுக்குந் தலை ஊயிடவும்.

மூன்று மாறல் சுரம்.

வேலிப் பருத்தித் தழை வாய் பேசாமல் கொண்டு வந்து நல்லெண்ணெயிற் பிழிந்து செரித்து உள்ளுக்குக் கொடுக்கவும். மாறல் விடும்.

சுரத்தின் பேரில் தாகமானல்,

விஷ்ணுக் கிரந்தி, அதிமதுரம், பட்டை, சமுத்திராப் பழம் மூன்று வகையும் ஒரு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி 2 நாழியாக குறுக்கி கஷாயம் கொண்டு தாகமான போது அளவாய்க் கொடுககவும்.

பித்த சுரத்திற்கு மருந்து சூரணம்.

வில்வ வேர் சுக்குடன் மிகுத்த நன்னாரியும் புல்லு வேர்ப் பயறுடன் பெர்ரியும் வெல்லமும் நல்ல நீர் குறுணி நாழியாகவே சொல்லிய வாந்தியும் சுரமும் போகுமே.

வாந்த மிளகு சுக்குடனே வகையாச் செவியங் கொடி வேரி
அந்தஞ் சீந்தி கொள்ளிஞ்சி வேர் விதமான விஷ்ணுக்கிரந்தி
பந்தம் பேசும் நில வேம்பு பதமாய் வடித்துக் கொண்டால்
எந்தச் சுரமும் விட்டேகும் இதமாய் காய்ச்சிக் கொடுவீரே.

ஆடா தோடை பேய்புடல் அதிலெ சீந்திப் பற்படாகம்
நீடா கண்டங் கத்திரி நிலவேம்பு விஷ்ணுக்கிரந்தியுடன்
வீடா குடிநீர் விடியற் காலங் குடிப்பீருய் கோடீர கோடீர் சுரமுந்தா
பங்குளிருங் குளிரும் சுரம் போமே.

சித்தா முட்டி, பேராமுட்டி, சீந்தி, சுக்கு, பற்படாகம், வசம்பு, ஓமம் எத்திசையும், பேய்ப்புடல் முத்தக் காசு யேகுங் கண்டங் கத்திரி வேர், சித்திர மூலம் இத்தனை பன்னிரு கழஞ்சு கஷாயஞ் செய்து எனிலாகத் தேன கூட்டிக் கொள்வீராகில் சத்தி மகா சன்னி, பதிமூன்றுஞ் சன்னியும் தோஷமும் இதற்கு சுரமும் போமே.

உளமாந்தைகடகரையின் குணம்.

நெஞ்சுடன் பழுக்கம் பக்கம் நிலவழிந்திருமி நெர்ந்து
பஞ்சு கொள் சுரமுந் தோன்றும்
பழுத்துள்ளே சீயுங் கட்டும்
அஞ்சவே அய்யும் பித்தம் அசனமே உண்ணெட்டாது
உஞ்சுடர் துன்மை சொன்னேன்
உள் மாந்தை கடகரையு மாமே.

இதற்கு மருந்து:-

அய்விரலித் தழையுடனே வில்வங் கூட்டி அதவுடனே என்னத் தங்காளி மிகவுங் கூட்டி
பையவே பழம் பாசி தேவியாரும் பருத்த அப்பைபயிலையும்
கூட்டி மெய்யவே ஒரு சிரங்கை குடிப்பிருகில்
விட்டோடும் உளமாந்தை கடகரையும் விள்ளுவோர்க்கே.

குடுகுடுப்பாலுக்கு மருந்து.

வேலிப் பருத்தித் தழையும், வெள் வெங்காயமும் அஞ்சு மிளகும் அரைத்து மூன்று உருண்டை பண்ணிக் கொடுக்கவும்:

மூவாண்டு சென்ற பருத்தியிலையும் பொருமபி வேரும் முருங்கைப் பட்டையும், கொள்ளிஞ்சி வேரும், சுக்கு, மிளகு, கடுகு, வெங்காயம், வசம்பு, ஓமம் இது வெல்லாம் நன்றாய் அரைத்து குன்று மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உணர்த்தி ஒரு உருண்டை வெந்நீரில்குடிக்கவும். அதற்கு நில்லா விட்டால் உதாந்தறையை வேக் வைத்து அந்தத் தண்ணீரில் ஒரு குளிகை கொடுக்கவும். தண்ணீர் தாகத்திற்கு நெல்லு உமியை கரியாக வருத்து இறுத்துக் கொடுக்கத் தீரும்.

வெகு ரோகத்திற்கு.

இரசம், கெந்தகம், இரு தாவி பொன்னரி தாரம், தானிக்காய், கடுக்காய் நெல்லிப் பருப்பு, எவச்சாரம், சுக்கு, மிளகு, திப்பிலி வெண்காரம், நேர்வாளம், இந்த பதிமூன்று வகையும் சமனுக நிறுத்துப் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி கையாந்தகரைச் சாறு விட்டரைத்து நன்று அரைத்து மிளகு பிரமாணம் விரேசனத்திற்கு நாலு உருண்டை ஆமணக்கெண்ணெயில் கொடுக்கவும்.

தேள் கொட்டினால்:- இஞ்சிச் சாற்றில் ஒரு குளிகை உரைத்து உள்ளுக்குக் கொடுத்து கடிவாயில் தடவவும்:

வயிறு பொருமலுக்கு:- பசுவின் நெய்யில் இருபத் நாளைக்கு இருபது உருண்டை உரைத்துக் கொடுக்கவும்.

நாறு விழுந்திருக்கிறதற்கு:- எலும்புருக்கிக்கு நொச்சிச் சாற்றில் தினமொரு குளிகை உரைத்து எட்டு நாள் கொடுக்கவும்.

பிரமியத்திற்கும், கச்சி போல் விழுகிற மேகத்திற்கும்:- வெள்ளாட்டுப் பாலில் தினமொரு குளிகை உரைத்து ஐந்து நாள் கொடுக்கவும்.

உடம்பு உலருகிறதற்கு:- நெல்லிக்காய் கெந்தகத்துடனே பொடி செய்து ஐந்து நாள் தின்னவும்.

உடம்பு பருக்கிறதற்கு:- பத்தியத்துடனே இருபது நாள் தின்னவும். வாந்தி பண்ண வேண்டிலுல் வெல்லத்துடனே தின்னவும். செறியாமலிருந்தால் முசுட்டை இலைச் சாற்றில் உரைத்துக் கொடுக்கவும். அதனமாக அசனம் பண்ண வேண்டிலுல் கிலுகிலுப்பைச் சாற்றில் ஐந்து நாள் கொள்ளவும்.

ஈளை வியாதிக்கு நீரழிவுக்கு:- தானிக்காய், கடுக்காய், நெல்லிப் பருப்பு இந்த மூன்றும் இடித்து தண்ணீரில்ஊரப் போட்டு அந்தத் தண்ணீரிலே இருபது நாள் கொடுக்கவும். சரஸ்வதி முன் நிற்க வேண்டி குங்குமப்பூ ஊரப் போட்டு அந்தத் தண்ணீரிலே ஐந்து நாட் கொள்ளவும்.

ராச வசியத்திற்கு:- வெத்திலையில் தினமொரு உருண்டை கொள்ளவும்.

பல்லு வலிக்கு:- அக்கலாகாரத்துடனே ஒரு உருண்டை அடைக்கவும்.

குளிர் காய்ச்சல், பழைய காய்ச்சல் இதற்கு மருந்து:- ஊமத்தையிலைச் சாறு அல்ரக் காசிடை சாற்றில் ஐந்து நரட் கொள்ளவும்.

கண் மூடி இருக்கிறதற்கு:- கழுவின எள்ளு கசக்கி ஒரு துளி பிழிந்து பாதி உருண்டை உரைத்து ஏழு நாளைக்குக் கண்ணிலிடவும்.

வயிற்றுக் கடுப்புக்கு:- எருமை சாணிப் பாலில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும்.

கிறுணிக்கு:- இந்தப் படியே கொடுக்கவும்.

முதம் வலிப்புக்கு:- வலம் பிரிக்காய் கூடு சாம்பலும் அதின் தழைச் சாறுங் கூட்டி குளிகையும் உரைத்து மூக்கிலே நசியம் பண்ணவும். மூன்று நாள் நசியம் பண்ணவும்.

வாய் நாற்றத்திற்கு:- செண்பகப்பட்டை ஊரப் போட்டு அந்தத் தண்ணீரிலே ஐந்து நாள் ஐந்து உருண்டை கொடுக்கவும்.

தலை சிறு சிறுப்புக்கும் பைத்தியமா யெடுக்கிறதற்கும்:- ஐந்து நாள் வெந்நீரில் கொடுக்கவும்.

குட்ட வியாதிக்கு:- பனங் கடிக்கி ஒரு மண்டலம் இள வெந்நீரில் கொள்ளவும்.

மருந்தீட்டுக்கும், குன்மத்திற்கும்:- பசுவின் கிடாரி கோமயத்தில்ஐந்து நாள் கொள்ளவும்.

பெரு வயிற்றுக்கு:- சிறு நீரில் பத்து நாள் கொள்ளவும்.

சூடல் வாதத்திற்கு:- பசுவின் கோமூத்திரத்தில் ஐந்து நாள் குடிக்கவும்.

புத்தியில்லாதவர்களுக்கு:- பாக்கு வெற்றிலையுடனே ஒரு மண்டலந் தின்னவும்.

வாந்தி பேதிக்கு:- அம்மான் பச்சரிசியுடனே ஐந்து நாள் கொள்ளவும். இந்த அநுபானப் படியே கொடுக்கவும்.

எந்த ஊதை வாதத்திற்கும்:- துளசி, நாவலை, கண்டங் கத்திரி, விஷ்ணுக் கிரந்தி, சித்திர மூலம் இந்தக் கஷாயத்தில் ஒரு குளிகை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

விக்கலுக்கு:- பச்சை நெல் பசுவின் நெய்யில் போட்டு அந்த நெல்லை தண்ணீரிலே போட்டு வேறு பிடிக்க நிற்கும். விளாம் பிஞ்சு கூட்டு கரியாக விட்டு தேனிலரைத்துக் கொடுக்கவும். சிறுக்கீரை, வேரை பசுவின் பாலிலே வேக விட்டு விரை எடுத்துப் போட்டு அந்த பாலுந் தேனுங் கலந்து குடிக்கவும். விக்கல் நிற்கும். ஏலம், கருஞ்சீரகம், இந்துப்பு, சுக்குத் திப்பிலி விளாம்பழம், எலுமிச்சன் பழச் சாறு விட்டு தானி விரையிது வெல்லாம் அரைத்து தேனிற் குழைத்து நாவில் தடவ விக்கல் நிற்கும். காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

மூன்று வகை சீந்தித் தண்டு, வேப்பீர்க்கு, நெல்லிப் பருப்பு, தானிக்காய், பேய்ப்புடல், கடுகு ரோகணி, சிறுகாஞ்சொறி, கண்டங் கத்திரி வேர், சுக்கு, மிளகு இரு நாழி நீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி கொடுக்கவும். மூன்று சுரமும் போகும்.

நர்லா வகை கணிக்கு மருந்து:-

உருட்டுக் கணைக் குணம்:- உடல் சுற்றி வரும். நாற்க்கணிக்கு வாய் நாறும். வறக்கணை உள்ளுணர்த்தும். ஊதுகணை உடல் வீங்கும். இசிகணை வலிப்பு வாங்கும்.

இதற்கு மருந்து:- அதிமதுரம், செங்கழு நீர், கோஷ்டம், நற்சீரகம், ஈர வெங்காயம், இதுவெல்லாங் கொண்டு வந்து ப்ூவின் பால் உழக்கு விளக்கெண்ணெய் உழக்கு, கோழிய வரையிலை உழக்கு ஒரு பிடி, கருஞ்சுக்கட்டித் தழை ஒரு பிடி, பொன்னுவரையிலை ஒரு பிடி, தகரையிலை ஒரு பிடி, மொசுமொசுக்கை இலை ஒரு பிடி, அவரையிலை ஒரு பிடி, பழம் பாசி ஒரு பிடி, இது வெல்லாந் துவைத்து சாறு வாங்கி பாலும் எண்ணெயும் கூட விட்டுக் காய்ச்சி கடைச் சரக்கு நுணிக்கிப் போட்டு வேக வைத்துக் கொண்டு தட்டிவிட கொள்ளவும். தகரையிலை பொன்னுங்காணி இலை அரைத்து முழுகவும். தண்ணீர் தாகத்துக்கு நெஞ்சில் தடவவும். இது கை கண்டது:

காதிலடைப்புக்கு மருந்து.

கையாந்தகரை, நெல்லிக்காய், தழை சாறு நாழி, மையாரெண்ணெய் அய்யுளக்கு, மதித்த பாலு அது நிறைய பெயா மதுரம் ஒன்று பதத்தில் வடித்து தலையிலிட கை கால் எரிப்பு காசம் காதிலடைப்பு வெளியாமே.

வாத சுரத்தின் குணம்.

வாத சுரத்தின் குணங் கேளீர்-மயிருஞ் சிலுப்பல் வசங் குளிர்தல் போத நடுக்கு முன் முதுகும் பெருந்துங் கை கால் தாறுமாயும் காதிலிடிப்புந் தன்றுடனே கருத்த் தலையு மிக நொந்து இது செய்யும் மெல்லியரே மிகவே மேவியுங் கண்டீரே.

பித்த சுரத்தின் குணம் கேளீர்.

பித்த சுரத்தின் குணம்:- பெருக்க வெதுப்புந் தன்றுடனே மெத்தத் தண்ணீர் தான் தவிக்கும். மிகவும் கசக்கும். நாவுலரும், மெத்த சிறு நீர் வலந் தாறும் ஒளி சேர், கண்கள் சிவப்பேரும். சுத்தியடங்கும். முக மயங்கும். தொலவாய் எகிறும் புண்ணுமே.

சிலேற்றும சுரத்தின் குணம்.

3. சிலேற்றும சுரத்தின் குணங் கேளீர்:- தொட்டிடுந் தும்பல் வந்து தொண்டையும் வாயும் நொந்து கட்டிடுங் கடிய வேகம் கால் முளைய முளசி இட்டு மாரிருமலொடு இளைப்புடன் தலை நோவுண்டே.

4. கடுக்காய் சீந்தி சாசிவலை கண்டங் கத்திரி, மொசுமொசுக்கை அடுக்கம், பற்படாகம், ஆடாதோடை, அதிமதுரம், வருக கன் மடவீர் கொடுப்பையுடன் வர்த்த காய்ச்சி நாலி லொன்றும் குடிக்கும் பொழுது பித்த சுரம் குடி போய் கெடியில் விழுந்திடுமே.

5. ஆடாதொடை அதிமதுரம், அஞ்சு கடுக்காய், இந்துப்பு, தொடார் கண்டங் கத்திரியும், சீந்திக் கொடியும் குருந் தொட்டி வாடா நெல்லி மலை மஞ்சள் வத்தக் காய்ச்சி நாலி லொன்றும் கோடா கோடி சிலேற்றுமந் தான் குடி போய கெடியில் விழுந்திடுமே.

பாக்யிலையும் அதின் வித்தும் பமபந்தீரும் கஞ்சாவும் மாக மூவி சிறு ர பூனை யிதமோடோத்த மதுக் காரை ஆகப் பிடுங்கி இது ஐந்து அரைத்து-உழக்கு எண்ணெய் தனில் வேக எரித்து பதத்தில் வடித்து விடியற் காலம் நாக்கிரிட வாதஞ் செரியுஞ் சன்னியுடன் எடுக்கும். வெதுப்பும் வை சுரமும் போதவமையு மினிப் போனூர் போனூர் போனூர் போனூரே:

விடாத சுரத்திற்கு.

பேரா முட்டி வேப்பீர்க்கு, பேரா மல்லி, சீந்தில் சுக்கு, சீரகஞ், கடுகு, ரோகணியுஞ் சித்தா மல்லியுடன் ஐந்தால் தீராக் காய்ச்சல் விட்டோடும். திருந்த நீரையுட் கொண்டே புாரா யிந்தக் கிருகை தன்னீ புகுத்த கொடியினிடை யானை பெற்ற கொன்னைப் பழத்தின் சோறு பூங் கோரைக் கிழங்கு, சுக்கு வற்கமாம், பேய்புடலும் வன்னமாங்

கொத்த மல்லி, நற்கொளவாடா தொடை நதிமர் வீறமுங் கூட்டி சிறபடக் காய்ந்த நீராற் சிறந்திடுஞ் சுரங்களெல்லாம்.

நஞ்சு தின்றவர்க்கு.

கையாந்தகரை நாயுருவித் தண்டு வேர், கருந் துளசி, சங்கம் வேர், நா த வளை வேர், எருக்கிலை மொட்டு, வேலிப் பருத்தி வேர். கண்டங் கத்திரி வேர், சீந்திக் கொடி சுக்கு கஷாயம் போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக்குடிக்க இம்மருந்து நஞ்சு மாறும்.

சீத சுரத்திற்கு தூபம்.

நண்டுத்தோடு முள்ளித் தோல் நல்ல கஞ்சா குழலையுடன் அண்டங் காக்கை யிறகுடனே அசம்தாக்கமும் மாட்டெருவில் ஒன்று கட்டி தனில் புகைக்க குளிருஞ் சுரமும் விடுமென்றே கண்ட கருப்பை யுள்ளவனுங் காதல் முனிக்குத் தானுரைத்தார்.

தேள் கடித்தால் மருந்து.

ஆடாதோடை வேர், திங்கருக்கு காப்புக் கட்டி செவ்வாயிக் குப்பலி கொண்டுத்து வேரெடுத்துச் சத்திலடைத்துக் கொண்டு தேள் கடித்தால் அந்தச் சத்தை கட்டி வாயில் தீயிரங்கத் தடவவும். ஆடாதோடை இலைச் சாறு தடவப் போகும். இரசம் வெள்ளெருக்கிலைக் காய் எருக்கலம் பால் வார்த்தரைத்துக் குளிகை உலர்த்திக் கொள்ளவும். தண்ணீர் முலைப் பாலில் வார்த்து உரைத்துக் கடி வாயில்த் தடவ எரிப்பு தீரும்.

செய்யான் கடிக்கு மருந்து.

கடுக்காய் சுண்ணாம்பு கூட்டி அரைத்து கடி வாயில் பூசப் போம். கோவையிலைச் சாறு சிறு நீருங் கூட்டி உள்ளுக்குங் கொடுத்துக் கடி வாயில் பூசத் தீரும். வெள்ளாட்டுப் பிச்சும் களச்சிப் பருப்பும் அரைத்து உருண்டை செய்து எருக்கிலம் பாலில் உரைத்து கடி வ வாயில் பூச விஷந் தீரும்.

பூரான் கடிக்கு மருந்து.

பச்சை மஞ்சள் அரைத்துக் கடி வாயிற் பூசப் போகும். நாய் வேளையிலையும் மஞ்சளும் அரைத்து எண்ணெயில் குழைத்து கடி வாயில் பூசிக் கட்ட ஆறும்.

பேய் நாய் கடிக்கு மருந்து.

முத்தின மாவிலங்கு வடக்கே போகிற வேர் அரைத்துக் காடியில் கரைத்து எலுமிச்சன் சாறு விட்டு எட்டு நாள் கொடுக்க பேயந்தி, பேய் நாய் கடி தீரும். இதுவும் ஊமத்தன் காய் அரைத்து எலுமிச்சன் காயளவு காராட்டுப் பாலில் குடிக்க வெறி எடுக்கும். எடுத்தால் பிங்கட்டாய் கட்டி வைத்து சாயங்காலம் நூறு குடம் தண்ணீர் தலையில் சொரியவும். மோருஞ் சோறும் கொடுக்கவும். தீரும்.

சீரகத் தைலம்.

பாரப்பா சீரகந்தான் படிதான் யிரண்டு பதமாக இடித்த நீர் பதத்தில் போட்டு
சேரப்பா எட்டிலொன்றாய் கஷாயம் வாங்கி தெளிவாக எண்ணெயும்படி தான் வாரு
காரப்பா கார் போக அரிசி பலம் இரண்டு கஷாயம் விட்டரைத்துக் கலக்கிக் கொள்ளே
ஏரப்பா மெழுகு பதமாக வாங்கி யியல்பாக முழுகி வர குணத்தைக் கேளீர்.

2. குன்மமென்ற குன்மமெட்டும் வாய்வு பித்தங் குட்ட மொடு தழுதளையுங் குண்டலுமங் கேளும் .
மணமென்ன வாந்தி பித்தம் கிறுகிறுப்பு வாய்வுறல் வந்ததொரு சோகை பாண்டு
கணமென்ன உஷ்ணங்கள் போகும் போகும் காலத்தில் குடான கபநீர் கட்டும்
பணமென்ன நேதநய தீரா மருந்து முண்டோ பாரினுள்ளே மூளைத்தெழுந்த மூலிகைக்குத் தானே.

அறுக்கலாங் கிழங்கு தைலம்.

அமுக்கலாம் வேர் பலம் பத்து இடித்ததனை பதக்கு நீரில் வளமாகப் படி யெண்ணெய் அதினிற் சேர்த்து
வாங்கிய தோர் எலுமிச்சன் பழச் சாறு நாழி வத்த விட்டு மெழுகு பத முருட்டிப் பார்த்து

தாங்கியே வடித்ததனை வைத்துக் கொண்டு சுகமாக முழுகி வர சுகத்தைச் சொல்வேன்
பாங்கியே பீனசங்கள பறந்து போகும் பாரிலுள்ள மண்டையிடி பற்று போமே.

பறந்ததின் மேல் யின்னமொரு தயிலங் கேளும் பச்சை யிஞ்சி கால் துலாம் புரிந்திடித்து
சிறப்புடனே பிழைத் வடி கொண்டு விட்டு தெளிவான நல்லெண்ணெய் படிதான் விட்டு
உரைப்பான பசுவின் பால் படி தான் விட்டு உருதியாய் மெழுகு பதமாக வாங்கி
நிறையுடனே முழுகி வரப் பருவமாக நிசமாகத்திரு நோய் நிகழ்த்துரேனே.

நிகழ்த்துறேன் மண்டையிடி சூலை வாதம் நிலைகெட்ட பீனிசங்கள் மெய்யிளைப்பு
கனத்துறேன் சூலையொடு வாதம் வாய்வு பொல்லாத யிளைப்பு இருமல் நெஞ்செரிவு
கனத்துறேன் கால் கடுப்பு மெய் நோயெல்லாம் அகலுமே குட்ட மென்றனைத்துங் கேளும்
சிகத்திலெ நாடாமல் ஓடிப் போகும் செம்முள்ளி யெணெய்தனைச் செப்புறேனே.

செப்புறேன் செம்முள்ளி பலம் நூறப்பா-சிறக்கவே சமூலத் தோடெ யிடித்து
அப்புறேன் தாணி நீர். தன்னில் விட்டு அளவாக யெட்டொன்றுய் உகந்து காய்ச்சி
அப்புறேன் அதை வடித்து என்ணெய் நாழியதில் விட்டு மெழுகு பதமான வாறெ
நம்பினேன் முழுகி வருங் காலந் தன்னில் நன்குகத் தீரும் நோய் நவிலக் கேளே.

நவிலக் கேள் கூஷய மீழை சல ரோகங்கள், நாடாது மந்தார காசத்தோடும்
நவிலக் கேள் வாத மெல்லாம் காஞ்தோடும் நாசமாங் கப மொடு கண்ணிற் பாய்ச்சல்
அவிலிக் கேள் புண் புரைகளெல்லாந் தீரும் அரையாப்புக் சிறந்தி முதல் அண்ட வாதம்
விமலக் கேள் வீக்கமொடு விஷ பாகந்தான் அகலுமடா யித்தயிலம் முழுகிப் போதே.

சாறணை வேர் தைலம்.

1. முழுகவே யின்ன மொரு தயிலங் கேளும்
முறையான சாறணை வேர் பலந்தான் பத்து
இளகவே யிடித்ததனை பதக்கு நீரில்
இட்டதனை யெட்டொன்றுய் என்ணெய் நாழி
அளவாக கொதித்ததனை யிருத்து வாங்கி
மகத்தான மெழுகு பதமான வாறே
தெர்முகவே வடித்ததனை முழுக்கும் பேர்து
ஓடிபோகும் வாதமொடு வாய்வு கூறே.

2. கூருக வேலி பலம் நூறு தானப்பா
கொத்தகத்தறித்து திடித்து தாணி நீரிற்
பேராக யிட்ட வித்து யெட்டொன்றுக்கி
பேசியே யென்ணெயதில் நாழி விட்டு
வீருகக் கொதித்து வந்திடுமே மெழுகு தானல்
மெய்யிலே பூசி நீ முழுகும் போது
தேருத சடல மெல்லாந் தேறுந் தேறும்
சிதறு முஷ்ணங்கள் சேர்ந்த யிந்தும்
மாருத கண் புகைச்சல் கிறுகிறுப்பு
வாங்கி விடு மண்டலத்தில் வரிசையாமே.

சவுரித் தைலம்.

1. நாட்டிலுள்ளோர்க்கின்ன மொரு தைலம் சொல்வேன்
நலமான சவுரியது பலந்தாறு தானிடித்துத்
தாணி நீரில் பருவாய்ப் போட்டு
வற்றியே யெட்டொன்றுக்கி சலந்தனை வடி கொண்டு
என்ணெய் நாழி சிறக்க விட்டு
இரண்டு மென்றுய்ச் சேர்த்துக் கொண்டு
நலமாகக் கருஞ்சீரகம் பலந் தானென்று
நாட்டியே தைலத்தில் கரைத்துச் சேர்த்து

பலமான மெழுகு பதமான வாறெ பதத்துடனெ தான்
வடித்து முழுகுவாயே.

2. வாய்ப்பான வாதமொடு குன்மமெங்கே
வாதத்திரலெழுந்த கறப்பானெங்கெ
காயப்பான காய்ப பெங்கே கழலை யெங்கே
கண்டத்தில் வீக்க மெங்கே கழலை யெங்கே
கண்டத்தில் வீக்க மெங்கே கழவர்த மெங்கே
நெர்ய்யான நோயெல்லாம் அகன்று போகும்
நன்றுக்கமாய் தயில மொன்று நவில்க் கேளும்.

மாலைக் கண்ணுக்கு மருந்து.

உடும்பைச் சாருகப் பிழிந்து அந்த தண்ணீர் கால் படியும், எருமை தயிர் கால் படியும் கலந்து அதில் அதிமதுரம் பலம் கால், சீரகம் பலம் கால் அதில் உருண்டை காசிடை கூட அரைத்துக் கலந்து மூன்று நாள் கொடுக்கவும்-கை கண்டது.

வயிற்று கடுப்புக்கு மருந்து.

நவல்ப் பட்டை, மாம பட்டை, அரசம் பட்டை, இது மூன்றும் அரைத்து பசுவின் மோரில் உடனே கொடுக்கவும். குடிக்கவும். மிளகு, வெள் வெங்காயம், ஓமம், வெத்திலை கிராம்பு, கடுகு தும்பைத் தழை இது வெல்லாய் எருக்கிலம் பழுப்புத் தழையில் கட்டி தீப் புடம் போட்டு எடுத்து அரைத்து வென்னீரில் கொடுக்கவும்.

வயிற்று கடுப்புக்கு மருந்து.

அம்மான் பச்சரிசி எலுமிச்சன் பழச் சாற்றில் அரைத்துக் குடிக்க இரத்தக் கழிச்சல் நிற்கும். ஆவரை பேர்பட்டை முள்ளி வேர் பட்டை பொரும்பி வேர், பட்டை இவை நேக அரைத்து ரொட்டி பண்ணி ஏழு புடம் போட்டு வெண்ணெயில் மூன்று நாட் கொள்ளவும். பத்தியம் புளியாகாது. சுக்கு, சுண்ணும்பு தட்விச் சுட்டு கருத்த பிறகு யெடுத்து பசுவின் தயிரிலரைத்து அடை பண்ணி கீழும் மேலும் பச்சிலை எலுமிச்சனிலை வைத்துக் கட்டி இந்தப்படி ஏழு புடம் பண்ணி சுட்டித் தயிரில் முழுங்கவும். கார்ப்புப், புளி தவிர்க்கவும்.

வெட்டு காயத்திற்கு மருந்து.

குப்பை மேனியிலையுந் தன்டும் கையாந்த கரையு மரைத்து விளக்கெண்ணெயிற் கொதி யிட்டு அந்த எண்ணெயைத் தடவத் தீரும்.

பழங்காய்ச்சலுக்கு மருந்து.

சுக்கு பலம்.உ, மிளகு பலம்.க, பதினு நீர் படி தண்ணீரிர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும். பழங்காய்ச்சல், நாள்பட்ட தோஷம் சோபை முதலானதுந் தீரும். மூக்குத்தியிலையும். ஈர வெங்காயமும் நேர்வாளம் பருவிடை இது மூன்றையும் கால் படி தண்ணீரில் அரைத்துப் பூச வீக்கங் கரையும்.

சீ விழுகிறதற்கு மருந்து.

புளியன் வேர் வடக்கே போகிற வேரும் சுங்கன் வேரும் கொண்டு வந்து எலுமிச்சன் காயளவு அரைத்துப் பருத்தியிலைச் சாறு ஒரு சேரை புளிச்ச காடி அரைப்படி கூட்டி கலக்கி மூன்று நாள் குடிக்கச் சீ விழுகிறது நிற்கும்.

உதிரத்திற்கு மருந்து.

இரத்தம் விழுந்தால் இந்த வேரும் எலுமிச்சன் காய் சாறும் கூட்டிக் கொடுக்க உதிரம் விழுகிறது நிற்கும்.

இரத்தப் பிரமியத்திற்கு.

பசுவின் பாலை நன்றாய்க் காய்ச்சி புரைகுத்தி தவைய விட்டு காலமே ஆடை கூட தயிர் மத்தாலெ கடைந்து கலக்கி வயிறு நிறைய ஒரு படிக் குடிக்கவும். இப்படி மூன்று நேரங்

குடிக்கவும். பத்தியம் முருங்கையிலை, துவரைப் பருப்புங் கூட்டவும்.

சிப்பிரமியத்திற்கு மருந்து.

ஒரு படி கொள்ளு ரவ். வடுப்பிலே வேக வைத்து அருக வெந்ததை எடுத்துப் பிசைந்து நல்லெண்ணெய் ஒரு பிடி விட்டுப் பனை வெல்லம் நல்லதாக உடைத்து கூடப் போட்டு இது மூன்றுஞ் சுவறப் பிசைந்து தின்னவும். தன்றிலுண்டான சீயெல்லாம் விழுந்து போகும். சரீரத்தின் குணமறிந்து மற்ற நாள் தின்னவும். கை கண்டது.

நஞ்சுண்டான கற்பம்.

நஞ்சுண்டான் வேர் நல்ல நாளையிலே மிகுதியாயப் பிடிங்கி வந்து உலர்த்தித் தூள் பண்ணி வடி கொண்டு புதுச் சட்டியிலாவது, பேய்ச் சுரைக் குடுக்கையிலாவது அடைத்துக் கொண்டு வேண்டிய போது ஒரு வெரு கடிப் பிரமாணம் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால் பசுவின் நெய் துவரைப்பருப்பு முருங்கையிலை யாகும். மற்றது ஆகாது. இப்படி ஒன்பது நாள் அவுஷதங் கொள்ளவும். அவ்பத்தியம் பதினெட்டு நாள் விடவும். இப்படி மருந்து கொண்டால் சூலைப் புண், கரப்பான், சிரங்கு, சொறி வண்டு கடி, சொறிப் படுவன் உடம்பு வீக்கம் வாதம், கரிமாலை இவை யெல்லாந் தீரும்.

வாயில் இரத்தம் விழுந்தால் மருந்து.

பன்றி மருக்காரை வேரைக் கொண்டு வந்து எலுமிச்சன் காய் பிரமாணம் அரைத்து காலமே இள் வெந்நீரில் கொடுக்கவும். சிறுகஞ்சொறி வேர் எலுமிச்சன் காய் பிரமாணம் அரைத்து ஔஷதம் இரண்டு வேளையில் கொடுக்கத் தீரும்.

நீர் வண்டு கடிக்கு மருந்து.

ஊஞ்சல் மரம் முத்தின மரத்துப் பட்டையைக் கொண்டு வந்து நன்றாய் இடித்து பசுவின் பாலுடன் பிசரி வடி கொண்டு மூன்று நாள் கொடுக்கத் தீரும். பொரும்பி வேரைக் கொண்டு வந்து எலுமிச்சன் பழச் சாற்றில் அரைத்துப் பூசத் தீரும். பத்தியம் மூன்று நாளைக்கு கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

சர்வாங்கி சூலம்.

சந்து சந்துகளிலே நோகும் வீங்கும். அதற்கு முள்ளு மந்தாரையைக் கொண்டு வந்து வறனரிசியிலிடித்து உலர வைத்துச் சூரணமாக்கி மூன்று விரலாலே எடுத்து உள்ளுக்கு கொள்ளவும். அல்ல வென்றால் அந்த மாவை உலை கட்டிக் கழிக்கின்றி நல்லெண்ணெய் வார்த்துக் கொண்டு பனை வெல்லம் கடித்துக் கொண்டு எட்டு நாள் தின்னவும். நோவு தீரும். முதலே அந்தி விடிந்து உடம்பிற்குத் தண்ணீர் விட்டுக் கொள்ளவும்.

பிள்ளை பெறுவதற்கும் மாசு விழுவதற்கும் பிரசவ உதயமாவதற்கும் மருந்து.

கையாந்த கரையும், தாமரையும் இவை ரெண்டையும் காடி வார்த்தரைத்து தொப்பிள் மேலும் உள்ளங் காலிலும் கீழிறங்கப் பூசவும். பிள்ளை விழும். அதிமதுரத்தை காடி வார்த்தரைத்து தேனுடன் கலந்து குடிக்கப் பிள்ளை விழும். மருதம் பட்டையை காடி வார்த்தரைத்து ஒரு பாக்களவு குடிக்கப் பிள்ளை விழும். மென் தோன்றிக் கிழங்குடன் பாலானாலும் முலைப்பாலினாலும் வார்த்தரைத்து உள்ளங் காலிலே தடவப் பிள்ளை விழும்.

மாசு விழ.

சிறு பையன்கள் சிறுநீரை வட்டலில் பிடித்து ஒரு வட்டுப் பனை வெல்லமும் ஆறு எலுமிச்சன் பழச் சாறும் விட்டுக் கொடுக்க மாசு விழும். ஆடு தின்னாப் பாளை வேர் கொண்டு வந்து கட்டக் கால் நாலு காலிலையும் தலை கீழாய்க் கட்டித் தூக்கி வைக்க மாசு விழும்.

பிரசவ உதயமாவதற்கு.

அரசன் வேர் வடக்கே போகிற வேரைக் கொண்டு வந்து அரைத்து கீழ் வயிற்றில்

இறங்கத் தடவினல் பேறு நேக்கும்.

பிள்ளை பெறமாட்டாதார்களுக்கு என்னெய்.

இந்திரன் தங்கை மந்திரி குமாரத்தி செப்புக் கூட மெடுத்துச் செவ்வெண்ணெய்குப் போனுள் அவவ்வெண்ணெய் வரங் காட்டி இவ்வெண்ணெய் ஏந்தியிடக் குலை நிற்க குருந்த விளச்சு வாகரா குல் தீரும். பசு கொடு தீரும். பசுடு காட்டிலிருக்கிற, பேச்சி திரும்பப் பேச்சியின் கை பில் பிள்ளை திரும்பத் திரும்பு திரு நீலகண்டரானை பச்சுவாகா.

மலட்டுப் புழுவுக்கு மருந்தும் குளுமும்.

வயிறு வலித்த நேரம் முட்டாசிறதற்கு முன்னே முடக் கொத்தான் கொண்டு வந்து அரைத்து மூன்று உருண்டை விழுங்கவும். மருலேக கன்னிப் பட்டை கொண்டு வந்து அரைத்து காராட்டுப் பாலிலே கலக்கிக் கொடுக்கவும். கூட்டோடே புழு விழும். இதவும் அழுக்காகப் பேன போது முழுகின நாள் கொண்டு வந்து பொரும்பித் தழையை ஒரு வாகினம் ஒரு பிடி பறித்து வந்து கம்பரிசி வானிரிசியிலிடித்துக் கழித்கிளாரி நக்சுக் கருப்பட்டி கூட்டி நெய் குத்தி மூன்று நேரந் தின்னவும். மலட்டுப் புழு விழும். பிள்ளை உண்டாம்.

செறியாக் குணத்திற்கு மருந்து.

வசம்பைக் கருக வறுத்து அதிலே இரண்டு படி தண்ணீர் வார்த்து ஒரு சேரையாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும். தண்ணீர் தாகம் ஆறுட்ட மாஜல் சுரை ஓட்டைக் கருக வறுத்து முக்கால் படி தண்ணீர் வார்த்துக் குருக்க் காய்ச்சி இறக்கிக் கொண்டு பிறகு கொடுக்கவும். ஈர வெங்காயத்தைக் கருதிலே குத்தி விளக்கெண்ணெய் தடவி அக்கினியிலே வெதுப்பி தின்னக் கொடுக்கவும்.

விரேர்சனத்திற்கு.

கடுக்காய் நன்றுய்ப் பொடி செய்து இள வென்னீரில் கொடுக்க வயிறு கழியும்.

வரக் காமாலேக்கு மருந்து.

நீர்ச்சுள்ளி வேரைக் கொண்டு வந்து அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கத் தீரும். நீர்ச் சுள்ளி சமூலமுங் கொண்டு வந்து சுட்டு அதினுடைய சாம்பலைக் குழப்பி மேலே பசத் தீரும்.

பச்சைக் காமாலைக்கு மருந்து.

ஆவாரையிலைச் சாற்றை வெள்ளாட்டுப் பிச்சில் தடவி நெருப்பிலே வெதுப்பி பொழுது விழுந்து நட்சத்திரங் கண்டவுடனே தின்ன இப்படி மூன்று நாள் தின்னவும். புன்னுகக்குப் புட்டுத் தழையைத் தலைவத்து வெள்ளாட்டுப் பாலில்பிசறிவடி கொண்டு குடிக்கத் தீரும். கார்ப்பு, புளி மூன்று நாள் விடவும்.

காது வலிக்கு மருந்து.

கொடி சீங்கத் தொரலியை நல்லெண்ணெயிற் கொதிப்பிட்டு காதில் பிழிய வலி நிற்கும். பருத்தியிலை நறுக்கி நல்லெண்ணெயிற் போட்டுக் கொதியிட்டு காதில் பிழிய வலி நிற்கும்.

முகமறியாத வீக்கத்திற்கு மருந்து.

மலந் சுண்டத் தழையை வீக்கத்திலே வைத்துக் கட்ட வீக்கம் உடையும். வெற்றிலையைக் கிள்ளி புண்ணில் வைத்து நாலு நாள் கட்டத் தீரும்.

புண் ஆற மருந்து.

தகரையிலையை அரைத்து நெய்யிற் குழப்பிப் புண்ணிற் போடவும். வெற்றிலையைக் கிள்ளிப் புண்ணில் வைத்து நாலு நாள் கட்டத் தீரும்.

குடல் வாத மெழுகு வாதத்திற்கு.

வஞ்சல் கொழுந்து ஒரு பிடி, கொத்தான் கொழுந்து இரு இரண்டையும் அரைத்துப் பசுவின் பாலுடனே வெல்லம் போட்டு மூன்று நாளைக்கு குடிக்கத் தீரும். கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வயிற்று விப்புருத்திக்கு மருந்து.

கலக்குற்று மாத்தத் தழையும் கருங் கொள்ளு அரைப்படி இவ்விரண்டையும் கூடத் தண்ணீரில் விட்டு வேக வைத்து வெந்த கொள்ளைத் தின்னவும். அந்தத் தழையை வீக்கத்திலே வைத்துக் கட்டத் தீரும்.

வாய்வுக்கு மருந்து.

சுக்கு பலம் கால், தும்பைச் சாற்றினா ரப் போட்டு இடித்துக் காய வைத்து மறுபடி இடித்து வெருகடிப் பிரமாணம் கொள்ளவும்.

மலஞ்சலம் அடைத்தால் மருந்து.

கனச்சியைத் தட்டி தண்ணீரிலரைத்து பனியில் வைத்து தண்ணீரில் கலக்கிக் கொடுக்க மலஞ்சலம் போகும். நீரடைத்தால் பனங் காடி அடிவண்டல் குழம்பாக நாழி வார்த்துக் கொண்டு முறியக் காய்ச்சி சற்று சர்க்கரையும் போட்டுக் கடலையளவு வெங்காரம் பொரித்துப் போட்டுக் கொடுக்க நீர் விடும்.

விஷத்திற்கு மருந்து.

வெள்ளைச் சாறணையில், குப்மைப மேனியிலைவிழும்பியிலை, புன்றுக்குப் புட்டு யிலை, இந்த நாலு இலையும் விரும்பி இலைச் சாறு விட்டரைத்து விழுபட அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலே உலர்த்தி நல்லெண்ணெய் பதமிட்டு அந்த எண்ணெய் சுவற விட்டு இரண்டாவது எண்ணெய் பதம் ஒரு சிமிளிலே எண்ணெய் தடவி அந்தச் சிமிளிலே அடைத்துக் கொண்டு எவனுகிலும் விஷந் தீண்டி வந்த பேருக்கு ஒரு குளிகை காசிடை நல்லெண்ணெயில் கொடுக்க விஷம் மீளும். இது கை கண்டது.

வைத்தியத்திற்கு மருந்து.

இளநீர் மூன்று கண் திறந்து சற்றே இளநீரை உள்ளர்த்திப் போட்டு ஒன்றுக்கு ஒரு எலுமிச்சன் பழம் விட்டுப் பனியில் வைத்து மற்று நாளெடுத்து காலமே சர்க்கரை வெல்லம் கிடைத்ததைப் போட்டு குடிக்கக் கொடுக்கவும். (வேறு) பத்து எலுமிச்சம் பழம் பிழிந்து தோலியும் விரையும் எடுத்துப் போட்டு அந்தச் சாறு தனிழ தண்ணீர் விட்டு ஒரு வட்டுப் பனை வெல்லமும் போட்டு பனியில் வைத்து அதிகாலமே அவனை எழுப்பி குடிக்கக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

கெற்ப சுரத்திற்கு.

நன்னாரி மாகானிக் கிழங்கு தானும்
நல்மான முத்தமொடு வெட்டி வேரும்
சொன்னவ் மதி மதுர சுக்குச் சீந்தில்
துலங்கிய தோரிலா மிச்சை சித்தா முட்டி
தின்னும் பேராமுட்டி தேவதாரம்
சிறந்த தொரு நிலப் பனை சந்தனமுங் கூட்டி
அன்னளில் கஷாய மிட்டு தேனெ குத்தில்
அருவையற்கு கெற்ப சுரம் அகலுந் தானே.

பிள்ளை பிறந்த பிறகு வந்த சுரத்திற்கு மருந்து.

சித்தாமுட்டி சீந்திலொடு முத்தக்காசு திகளெருக்கம் வேர்
சுக்கு நிலவேம்போடு
புத்தியுள்ள பேராமுட்டி கஷாயமிட்டு
புகழ் பெறவே திப்பி மென பொடியுந் தா விதத்தை
யெது மொழியார்கள் பிள்ளை பெற்று தனியறையிலிருக்கையிலே சுரம் வந்தால்
சுத்த மொடு தீர்ந்திடுமெ யென்று கங்கன் சுவாமி உமையாள் தனக்குச் சொன்னரிதே.

பன்னறு சிறு வழுதிலையு முத்தக் காசு பற்படாகம்
சீந்தியிரை சிறுகாஞ் சொறி
துன்னிய கோரிசினை திப்பிலி பூ வேம்பு
சொன்ன சிறு தேக்கு செங்கழுநீர் கோஷ்டம்
மன்று சலம் நாழியது வார்த்துக் காய்ச்சி
வன்மையுடன் பஞ்சிறல் மருகுங் காய்ச்சல்
யின்னவிடம் போனது வேன்றறியலரிமோ
இப்படியே மூன்று பொழுதிறுத்துக் கொள்ளே.

மேல் வீக்கச் சுரத்திற்கு மருந்து.

கையாந்த கரை தூதுவளை கடிய நொச்சி பிறமியுடன்
மெய்யாய் விளங்கு நீர் முள்ளி விராகிய மல்லிகைத் தண்டு
செய்யார் கறந்தை பேராமுட்டி திகழுஞ் சுக்கு நறுக்கி யிட்டு
துயதாய்க் காய்ச்சிக் குடிப்பீராய்ச் சுரமும் வீக்கமுடன் போமே.

சகல மாந்தத்திற்கு மருந்து.

விரும்பித் தழை, கொருஞ்சித் தழை, பருத்தலாந் தழை, தும்பைத் தழை. சுரத் தழை, பொடி தழை, தகரைத் தழை, ஊர்வாத் தழை, ஆவரங் கொழுந்து கையாந்த கரை பச்சை சிங்கப் பட்டை, காட்டு முருங்கைப் பட்டை, வேளை வேர், மலை தாங்கி வேர், ஆதண்டம் வேர், கருங்காவளை வேர் ஆக வனமூலிகை யங, கடைச் சரக்கு விபரம்:- வசம்பு, ஓமம், ஒருக் கொட்டை வெள் வெங்காயம், பெருங்காயம், மிளகு, சுக்கு, திப்பிலி, இது வெல்லாம் சம பாதிக் கொண்டு கடைச் சரக்கை வெங்வேராக வறுத்து கடைச் சரக்கும் வன மூலிகையும் ஒரு சட்டியிற் போட்டுத் திரும்பவும் வறுத்துத் தீப் பறக்க வறுத்து பல தழை சாற்றை விட்டு வெள் வெங்காயப் பருப்புங் கூடப் போட்டு வேக வைத்து தழைச் சாறு சுண்டின பின் இறக்கிக் கொண்டு அம்மியிலே வைத்து அரைத்து குளிகை சேர்த்துக் கொள்ளவும். துவரை மருவாதி குளிகை சேர்த்துக் கொள்ளவும். இதற்கு அனுபானம் சிறு நீரில் கொடுக்கவும். இதற்குத் தீரும் வியாதி சூடு மாந்தம். கட்டு மாந்தம், சொருகு மாந்தம், மாந்த வலிப்பு இது வெல்லாந் தீரும்.

மூலத்திற்கு புகை பிடிக்க.

திருகு கள்ளி வறண்ட கொம்பு இடித்துத் தூள் செய்து அந்தத் தூளில்பிரண்டைச் சாறு கொஞ்சமாய் விட்டு பிசரிக் கொண்டு சாண் ஆழம் குழி கிள்ளி அந்தத் தூளைப் போட்டு தணறப் போட்டு பக்கத்திலே துவாரம் விட்டு நோக்காட்டுக காரனைக் குழி மேலே இருத்தி அந்தத் துவாரத்தில் குழல் கொண்டு ஊதிப் புகை பிடிக்கவும். எரிச்சலெடுத்தால் பசுவின் வெண்ணெய் தடவவும். இந்தப் படி புகை காட்டக் கரைந்து நோவு தீரும். கை கண்டது.

பித்த சுரத்தின் குணமும் மருந்தும்.

வாய் கசந்திருக்கும். கண் சிவந்திருக்கும். தலை நொந்து கண் சுழன்று வரும். வாய் நாவுலரும். பல் கடிக்கும். கண் பீளை சாரும். இதற்கு நாலு நாள் லங்கண மிருந்து ஒரு படி புழுங்கலரிசியுங் கண்டங் கத்திரி ஒன்றிரண்டாய் நறுக்கி ஒரு சட்டியிற் போட்டு இரு நாழி நீர் விட்டு அரைப்படியாய்க் காய்ச்சிக் கஞ்சியைக் குடிக்கவும்.

அசாத்திய சுரத்தின் குணம்.

உடம்பு இளைத்திருக்கும். நெஞ்சு வீக்கியிருக்கும். மூலாதாரத்திலே உஷ்ணத்தி உள்ளே வெதும்பும். கையுங் காலும் எரியும். உள்ளே அழலும். மேலே வீசிக் காயாது. மலமுஞ் சலமுஞ் சிறுத்து விழும். அன்னம் வேண்டிராது. தண்ணீர் தாக முண்டாகும்.

நெய் பண்ண வகை கேளாய்.

சித்தர் முட்டி சமூலங் கொண்டு வந்து தலைத்து இருபது படி தண்ணீரரைத்து எட்டி லொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு செவ்வள்ளி, தாமரை வளையம், சமூலமுங் கொத்த மல்லி, கோஷ்டம். அதிமதுரம், செவ்வியம், சடாமஞ்சி, ஏலம், இலவங்கம், பம்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், அதிவிடையம், தாளிச பத்திரி, சந்தனம், திப்பிலி, சுக்கு,. மிளகு. பசுவின் பால் நாழி மேல் படி நெய்யிது. நாழை கடைச் சரக்கு ஒவ்வொன் றும் முக்களஞ்சு. கொண்டு நித்தம் கொள்ளும் போது. காசிடை தேனும் இரண்டு காசிடை நெய்யும். விட்டும் நித்தம் உள்ளுக்கு வார்க்கவும்.. மேலுக்குத் தலை இடவும். இப்படி பதினைந்து நாளிடவும். சுரசிற மத்தை விசாரித்துப் பார்த்துக் கொண்டு வாத பித்தஞ் சேற்றுமங்களிலே இன்ன. சுரமென்றும் உகந்து பார்த்துக் கொண்டு அறிந்து கொடுக்கவும்.

வாத பித்த சுரத்திற்கு.

தாக மெடுக்கும். மேலெல்லாஞ் சிகையாயிருக்கும். இதற்கு கஷாயம் செய்யும் முறை:- சீந்தி இரு வேலி, விலாமிச்சை வேர், பேய்ப்புடல், முத்தக் காசு, பற்படாகம் நிலவேம்பு, சிறுகாஞ்சி வேர், கொத்தமல்லி இவை ஒவ்வொன்று முக்களஞ்சு கூட்டி இரு நாழி நீர் விட்டு உழக்காய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு குடிக்கத் தீரும்.

விஷ சுரத்தின் குணம்.

உடம்பு வெர்க்கும் விடும். பலகாலும் வெதும்பும். காலம் மாறி சுரம் வரும்.

இதற்கு கஷாயம்.

சிறு தேக்கு, பற்படாகம், முத்தக்காசு, சீந்தித் தண்டு, நிலவேம்பு, பேய்புடல், சிறுகாஞ்சொறி, செங்கழுனிர், கோஷ்டம், கண்டங் கத்திரி வேர். இவை ஒவ்வொன்று முக்களஞ்சு கொண்டு இரு நாழி நீர் விட்டு உழக்காக காய்ச்சி வடித்துக் கொடுப்பது. இதற்கு மூன்று நாள் மாறுல். தீரும்.. உடம்பு வீங்கிலல் முருவிலி வேர், கண்டங் கத்திரி வேர்.. நீர்முள்ளி, களச்சியிலை,. நிலையாவாரை, சங்கங் குப்பியிலை, இவை சரியாகக் கூட்டி ஒரு பானியிலடைத்து நாளிப் பதக்குத் தண்ணீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கஷாய இரண்டு நேரமும் ஏழு நாள் கொடுக்கவும். விஷ பாகம், பாண்டு ரோகமுந் தீரும். சுரத்திற்கு எண்ணெய் பண்ணவும்.

சுரத்திற்கு எண்ணெய்.

சீதேவியார் செங்கழு நீரும், ஓரிலைத் தாமரை, பேய்ப் பாசு சொத்தி வேர் தாயைக் கொன்றன் இவைத் தன்னி லொக்கக் கொண்டு உருண்டை பண்ணி எண்ணெய் பண்ணி எண்ணெயில் கொதிப்பித்து நக்கவும். மேலுக்குந் தலைமையிடவும்.

இதற்கு மருந்து.

ஆவிலம் பழுப்பும். விஷ்ணுக் கிரந்தி, வெப்பலக்கும். பேய்ப்புடல், சுக்கு இவை

ஒவ்வொன்று முக்களஞ்சு கூட்டி இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி வடித்துக் கொடுப்பது. நீர்ப்புலானிலை, சீந்தித் தண்டு, நற்பாலை, சாரணையிற் கொதிப் பித்து மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு புன்னைக்காயளவு தினம் தின்று நெய்யும் நக்கவும்.

விரேசனக் குளிகை.

கடுகுரோகணி விராகன்.க, நெரிவிஊடம் விராகன்.க, சிராம்பு விராகன்.க, தானறிக்காய் விராகன்.க, கடுக்காய் பொடி விராகன்.க, இந்துப்பு விராகன்.க, நேர்வாளம் விராகன்.ரு, இது வெல்லாம் ஒன்றுகக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற் வார்த்தரைத்து பாவட்டை விரைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை குருநீரில் கொடுக்கவும். மாற்று வெந்நீர் கொடுக்கவும். கழியாது.

ஆனந்த வயிரவன் குளிகை (பதினெட்டு ஜன்னிக்கு)

இரசம், சாதிலிங்கம், திப்பிலி, நாபி, சுக்கு மிளகு இது வெல்லாம் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி சுரத்தின் பேரில் வருகிற சன்னிக்கெல்லாம் இஞ்சிச் சாற்றிலாவது சுக்குச் சாற்றிலாவது கொடுக்கவம். அதி சுரத்திற்கு குப்பை மேனிச் சாற்றில் கொடுக்கவும். கிராணிக்கு எருமை மோரில் கொடுக்கவம். காச ரோகத்திற்குச் சர்க்கரையில் கொடுக்கவும்.

பதினெட்டு வகை சன்னிக்கும் வீரபத்திர குளிகை.

எலிப் பாஊடாணத்தை இருபத்தோரு குள் எருக்கம் பாலில் ஒரு சாமம் வெய்யிலேஉலர வைத்துக் கொண்டு எலிப் பாஊடாணங்களஞ்சு இரசம் களஞ்சு.க, சாதிலிங்கம் களஞ்சு.க, கெந்தகம் களஞ்சு.க, ஆக நாலும் இஞ்சிச் சாற்றிலரைத்து உழுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி வெய்யிலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு நாக்கு வந்து கருத்து இருக்கிற சன்னிக்கு முலைப்பால், சந்தனம், கலங் கொம்பு, தேய்த்து திப்பிலி மேற் பொடி போட்டுக் கொடுக்கவும். அலறு சன்னிக்கும், செவி கேழமலிருக்கிற சன்னிக்கும். நாக்குச் சுழன்ற சன்னிக்கும்,. சேற்றும சன்னிக்கும். தேனுந் திப்பிலியும் ஒரு குளிகை முலைப்பாலிலிடவம். சன்னி யெல்லாம் மீளும்.. இதற்கு பத்தியம்:- கொள்ளுப் பயிறு துவரை அரிசி இது மூன்றும் வறுத்துக். கஞ்சி காய்ச்சிக். கொடுக்கவும். சகல சன்னிக்கும்.. குடிநீர் பெரு வகைப் பட்டை பெருங் குமிளப். பட்டை,. சிற்று மல்லிகை., . முன்னை. வேர்,. பாதிரி வேர்., இதுவெல்லாம் தன்னிலோகக் கொண்டு வந்து இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி ஒரு குளிகையுங் கரைத்துத் திப்பிலி பொடி தூவி ராத்திரிக்கு குடிக்கவம். சன்னி பலவும் நீங்கும். கை கண்டது.

சுர குளிகை.

இரசம். பச்சை நாபி, நெர்வாளம், அரிதாரம், நெல்லிக்காய், கெந்தகம், பொரிகாரம், மிளகு, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், இது வெல்லாம் ஒரு நிறையாகக் நிறுத்துக் கருப்பஞ் சாற் வார்த்தரைத்து சிறு பயறு மாதிதிரம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இந்த குளிகை எந்தச் சுரத்திற்கும் முலைப்பால் நற்சீரகம், கடுக்காய் தண்ணீர் இஞ்சிச் சாற்றில் இவைகளில் கொடுக்கவம். பத்தியம் வெந்நீர் தண்ணீரும் சோறுங் கொடுக்கவம்.

இருவி விராகன் .வ, நாபி விராகன்.வ, நெருவிஊடம் விராகன்.வ, அரிதாரம் விராகன்.வ, கடுக்காய் விராகன்.வ, ஆக இது வெல்லாங் கூட்டி முலைப் பால் விட்டரைத்து அதின் பிறகு பாகிலைச் சாற்றில் அரைத்து பாசிப் பயறு மாத்திரம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக். கொண்டு பித்த சுரத்திற்கு முலைப் பாலில் ஒரு மாத்திரையாக மூன்று நாளும். மூன்று. குளிகை. கொடுக்கவம்.. வாத சுரத்திற்கு இஞ்சிச். சாற்றிலாவது, சுக்குச் சாற்றிலாவது, மூன்று உருண்டை மூன்று நாள் கொடுக்கவும். சேற்றும சுரத்திற்கு மிளகு .ய, திப்பிலி.ச, வெள் வெங்காயப் பருப்ப.ரு, இது மூன்றும் குளிகை மூன்றுங் கூட்டி அரைத்துத் தேனில் குழப்பிக் கொடுக்கவும். தேனில்லாதிருந்தால் வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். இந்த மருந்து. கன்னி சுரத்திற்குக் கடுக்காய்த் தண்ணீர், வெள் வெங்காயக் கட்டை ஒன்று திப்பிலி நாலு, மிளகு பத்து, இந்த மருந்து மூன்று குளிகையும் கூட்டி அரைத்து

இள வென்னீரில் கொடுக்கவும். மாந்தச் சுரத்திற்கு இஞ்சிச் சாற்றில் மூன்று மாத்திரை மூன்று நாள் கொடுக்கவம்.

சத்தி சுரத்திற்கு.

கடுக்காய், சுக்குத் தட்டித் தண்ணீரில் காய்ச்சி அந்தத் தண்ணீரில் மூன்று உருண்டை அரைத்துக் கொடுக்கவும். பத்தியம் வென்னீர் தண்ணீருஞ் சோறும். குடும்பநு-கார்ப்புப், புளிப்பு ஒன்பது நாள் விடவும்.

மனோசிலை சுத்தி, சிறுக்கீரை, பொன்னுங்கணியுந் தலைத்தப் பாலிற் போட்டு பானை வாயில் அந்திரமாக வெடுக கட்டி அந்த வெடு கட்டின சீலைக்குள்ளே மனோசிலையைப் போட்டு எரியிட்டு பால் சிவந்த பிறதே எடுத்துக் கொள்ளச் சுத்தியாம்.

கொடா குடிக் குளிகை கூட்டு வகை.

தான்றிக்காய், கடுக்காய், திப்பிலி, மிளகு, சுக்கு, பொரிகாரம், நெல்லிப்பருப்பு, இரசம் நெற விஷம், நெல்லிக்காய், கெந்தகம், அரிதாரம், நேர்வாளம், கருஞ்சீரகம், அசமதாகம் இவை யெல்லாம் ஒரு நிறையாக நிறுத்துக் கொண்டு கருப்பஞ் சாற் விட்டரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுர்த்தி வைத்துக் கொண்டு பித்த சுரத்திற்கு நெல்லிச் சாறு கொண்டு பத்து மிளகும் ஒரு வெள்வெங்காயப் பருப்பும் மூன்று திப்பிலியும் ஒரு மாத்திரை கூட்டிக் கொடுக்கவும்.

வாய்வு சுரத்துக்கு:- இள வென்னீரிலரைத்து கொடுக்கவும்.
அஜீரணத்திற்கு:- ஊர் முருங்கைப் பட்டைச் சாற்றில் ஒரு மாத்திரை கொடுக்கவம்.
வாத அக்கினி சுரமாய் நித்திரை வராத பேர்களுக்கு:- கோரைக் கிழங்கு மூன்று மூன்று மாத்திரையும் தின்னக் கொடுக்கவும்.
அபான வாய்வுக்கும் கடுப்புக்கும்:- ஆமணக் கெண்ணெயில் மூன்று மாத்திரை கொடுக்கவும்.
கவனமில்லாத பேருக்கு:- சீனியாவது நற்சீரகமாவது அரைத்துக் கலந்து கொடுக்கவும்.
மூத்திரப் பாலைக்கு:- சிறு பூளை வேரும், பருத்தியிலைச் சாறும், பசுவின் பாலால் இந்துப்பு களஞ்சு .உ, சவக்காரம் களஞ்சு .உ, நேர் வாளம் களஞ்சு.ச, நீர்முள்ளி சுட்ட சாம்பல் களஞ்சு..ச, சாறணைக் கிழங்கு களஞ்சு.ச, இவை யெல்லா மறைத்துத் தேங்காய் கண் திறந்து அதிலடைத்து மூடிக் கல்லுப்பு அரைத்து ஒடு தெரியாமல் பூசி உலர்ந்த பிறகு மேல் சாணங்கு பூசி விருட்டி ஒரு மொரங் கொண்டு வந்து அடுக்கிச் சுட்டால் ஒடு வெடிக்கும். பிறகு ஒடு வாங்கிப் போட்டு கூட் அரைத்துக் கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு வெல்லந் தேன் கலந்து கொடுக்கவும். இதற்குப் பத்தியம். பசுவின் பால், நெய், வெள்ளாட்டு உப்புக் கண்டமும், அருந்தத் தீரும். உப்புப் புளி ஆகாது. இந்த மருந்து இருபது.உய, நாள் கொள்ளவும்.

நெல்லிக்காய் உலர்ந்த பொடி, கடுக்காய்ப் பொடி, காந்தக் கல் பொடி, காகாசுக் கடி, களிப் பாக்குப் பொடி, ஆவிரை விரைப் பொடி, ஆக ஆறு விராகனிடை .க, வெல் வேராயப் பொடி செய்து சீலையில் ஒவ்வொரு பிடி அக்க அளந்து கொண்டு பசுவின் நெய்யில் குழைத்து உருண்டை பண்ணி ஒரு குடத்தில் விட்டு ஒரு குண்டு சட்டியிலே ந, மூன்று படி தண்ணீர் வார்த்து அந்த குடத்தை வண்டு கடிவண்டுக்குக் கீழ் வைத்து சுண்ட வைத்து சிறுக எரித்து சுண்டின பிறகு எடுத்துக் கொண்டு நெய்யிலே ஒரு பச்சைப் பாக்கு அளவு கொடுக்கவும். இரு நாழிகை பொறுத்து மாவிலே நல்லெண்ணெய் வார்த்துத் தின்னவும்.

எண்ணெயுடன் தின்னவம். பத்தியம்:- முருங்கை இலையும், பிண்ணாக்கும் புழுக்கி எண்ணெய் வார்த்துண்ணவும். எருமைத் தயிர் மோர் பிசறிப் போலவே உண்ணவும். இப்படி ஒரு மண்டலங் கொள்ளவும். ராத்திரி போகம் விடவும். உப்பு, புளி, பச்சரிசி யாகாது. மாங்கிஷம் வறத்தி பட்டும் படாமலு முண்ணவும். ஆவர வேர் பட்டை ஈர வெங்காயச் சாற்றிலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் கோரோசினைக் கலந்து கொடுக்கவும். பால் கஞ்சி குடிக்கவும். இரத்த பித்தந் தீரும்.

குலைப் புண்ணுக்கு மருந்து.

இரசங் களஞ்சு . , காரீயங் களஞ்சு . , எருக்கிலங் கரி களஞ்சு . , சாதி லிங்கம் களஞ்சு .க, துத்தம் களஞ்சு.க, துரிசு களஞ்சு.க, வெள்ளைப் பாஷாணங் களஞ்சு .க, கெவுரி பாஷாணங் களஞ்சு.க, நாவி பணவிடை .உ, அரிதாரங் களஞ்சு .க, நெல் லிக்காய்; கெந்தங் களஞ்சு, க. சுருக்காய்க் கெந்தகங் களஞ்சு.க, கருங்குங்கிலியங் களஞ்சு.க, ஆக ய , பதினாறு மருந்துங் கூட்டி.ப பொடி பண்ணி ஆகக் கட்டி ச இருளில் இரண்டு நேரமும் போடவும். ரு நாளிலே விளக்கெண்ணெய் வார்த்து முழுகங்கவும். இரண்டு நேரமுங் குளிநீர் வார்த்துக் குளிக்கவும். பழஞ்சோறு உப்பு. புளி பிசைந்துண்ண வும். மாறுப் பூசனிக் குடல் கொடுக்கவும். புண்ணுக்குக் கெண்டை மீன், பச்சைக் கறி பால், நெய் ஆகாது.

அகவைக்கு மருந்து.

சிமிட்டிப் பழச் சாறு படி . , திருகு கள்ளிச் சாறு படி .க, ஆலையிடியுங் கலந்து சுத்தி பண்ணின நேர்வாளம்.எரு, உள் இதம் வாங்கிப் போட்டு வளையலுப்பு களஞ்சு .யஅ, இந்துப்பு களஞ்சு.ரு, பொட்டிலுப்பு களஞ்சு .ரு, கல்லுப்ப களஞ்சு.ரு, சொமஞ்தன் பெருங்காயஞ் களஞ்சுரு, சவுக்காரங் களஞ்சு.ரு, வெள்ளாட்டுக் கோமயம் வார்த்து கலந்து ஓட்டிலே வைத்து வெய்யிலிலே வைக்கத் திரளும் உருண்டை திரட்டி வைத்துக் கொண்டு காய்ச்சல் விரேசனத்திற்கு வெல்லத்தில் கொடுக்கவும். அகவைக்கு வாழைப் பழத்தில் முழுங்கவும். சுண்டைக்காய் பிரமாணங் கொடுக்கவும். கொள்ளும் பொழுது முதல் வெல்லந் தின்னவும். இப்படி நாலு நாளுக் கொரு தபா கொள்ளவும். இதற்கு மாற்று வெல்லம் கொடுக்கவும். இப்படி பத்து நாள் கொள்ளவும்.

அறிஞ்சி வேர் பட்டையைப் பச்சைப் பாககளவு அரைத்துக் கொடுக்கவும். அகவை விழும். இதற்கு மாற்று எருமைத் தயிரும், எலுமிச்சம் பழச் சாறும் கொடுக்கவும்.

ஆசன புண்ணுக்கு மருந்து.

கையாந்த கரையிலை. பருத்தியிலை, செருப்படி யிலை, ஆடா தோடையிலை, ஆக நாலு இலைச் சாறுங் கொண்டு வந்து குருவை அரிசி பொரித்து நெரித்து அதற்கு மேல் மருந்து இரசங் களஞ்சு.உ, அரிதாரங் களஞ்சு.க, நெல்லிக்காய், கெந்தகங் களஞ்சு.க, கெவுரி பாஷாணம் பணவிடை. , வெள்ளைப் பாஷாணம் பணவிடை . , துத்தம் பணவிடை . , துரிசு பணவிடை . , சாதிலிங்கம் பணவிடை .ரு, கடுகு களஞ்சு.க, சாதிக்காய் களஞ்சு .க, ஆக மருந்து யக, பொரி மா அரைப் படியும் முதல் சாறு வார்த்து அரைத்து சுண்டைக்காயளவ உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு தேனில் கொடுக்க வும். அல்லது விளக்கெண்ணெயிலாவது விட்டுக் கொடுக்கவும். பத்தியம் முருங்கைக்காய், துவரைப் பருப்ப கஞ்சி வார்த்து உண்ணவும். உப்ப, புளி ஆகாது. புண்ணுக்குக் காரம் போட சவுக்காரம் துத்தந் துரிசு, ஆக , வேலிப் பருத்திச் சாற்றிலரைத்து சீலையில் தவட்டி போடவம். ரா பழஞ் சுள்ளி இலையும் தினை அரிசியு மிடித்துக் கிளறி பசுவின் நெய் கருப் பட்டி கட்டி வெந்நீர் வார்த்துக் கொண்டு அதின் பிறகு தின்னவும்.

வெட்டுப் பட்ட புண்ணுக்கு எண்ணெய் வேய்க்க மருந்து.

கடுக்காய் . , கருஞ் சூரை வேர் புங்கங் கொழுந்து மாங்கொழுந்து. அரசங் கொழுந்து, இலுப்பைக் கொழுந்து, நொச்சிக் கொழுந்து, காஞ்சிக் கொழுந்து, ஆவரங் கொழுந்து, முசுட்டைக் கொழுந்து, கரு வேலாங் கொழுந்து. வெள்வேலாங் கொழுந்து. சொரைக் கொழுந்து. பழம் பாசிச் சாறணைக் கொழுந்து, வேலிப் பருத் திக் கொழுந்து, நீர்ப் புலாங் கொழுந்து. வரப்புலாங் கொழுந்து, வேப்பங் கொழுந்து, சங்கங் கொழுந்து உகாங் கொழுந்து முத்திரிக்க (இதந்கு*இ)

1. உண்டியிலாடு நீரால் வெய்ய[illegible]
மண்டிய கபாலந்தாலும் ஞால் மாதராலும்
தொண்டையின் கனிய வாயாய்

2. ஆங்காரக் கோபத்தாலும் அழ வெய்யிலி காயலாலும்
பாங்கினிற் புணர்ச்சியாலும் பாய்ந்த தோர் விரணத்தாலும்
தாங்கொணுச் சிமையலாலும் சருகிலை யூறலாலும்
தேங்கிய சிலைக் கட்டாலும் சீதமுஞ் சுரமுமாமே.

3. உண்டியிற் பொல்லாங் காலும் ஒவ்டொடி வருதத்தாலும்
கண் துயிலாமையாலும் கடும் புகல் லோட்டத்தாலும்
பண்டையில் மலக் கட்டாலும் பழகிய சிரமத்தாலும்
மிண்டிய சினத்தினுலும் வெதுப்ப வந்துற்றவாறே.

4. துக்கமும் பயமு முன்னேராது ரகத மேறிருந்தோர்
மிக்க தோர் பழி புட்டோர்கள் விடமது தன்னை யுண்டோர்
தக்க தோர் பலமில்லாதார் தன தொடங் காண்டிருந்தோர்
இக்கமை மொழியினுளே இவர்கள் பட்டினி யொந்தார்.

5. ஞால காயமிளைத்த பஷ்டினி துய்யா வருத்த முபையவா வந்தேழும்
ஆலமான வெதுப்பின் ரானவர் அச்சமாக
அடைந்த உடம்பினர் கோலமா மகிழ தன்னுடன் கூடினோர்
கொண்ட டிாமதுபான ழருந்தினோர்? பாலருகம், கிளத்தவர்
முத்தரை பட்டினிக்கி–வாரோதகர்கனே.

6. வாதமான வெதுப்புக்கு மருவு பட்டினி நின்றுள்
ஒது பித்த சுரந்தனக்கு ஒன்றே ஆகு
மோத வெதுப்புக்குச் சிறந்த பட்டினி மூன்று நாள்
ஓதாது கோபமென வாறு கேளீரே.

7. சாஸ்திரப்படியினுலே பட்டினிவிடுளுளாகில்
சேர்ந்திடும் விழியினுளே திகைப்புடன் சுவாதமுண்டாம்
நேத்திரம் உடம்பு வற்றும் நிரந்தர சுகமுமாகும்.
வாரத் திகழ் முலையினுளே மாமுனி அருளிச் செய்தார்.

8. அதிபுலமுள்ள மாந்தர்க் கடுத்த பட்டினியை
யாரேயிதமாகச் சத்தி கெட்டார். பட்டினிக் கிசையாருக்கும்
மதியுடன் நவ சுரத்தின வகை சத்தி பண்ணி
வித்து விதமிடு சுரங்கள் விட்டால்
விரெணிம போகப் பண்ணென.

9. சத்தியே பண்ணுகில் பட்டினி தானே விட்டுப்
புத்தியாலச் சுரங்கள் விட்டால் விரோசனம் போகப் பண்ணி
சுத்தமாயச் சுக்குக் காச்சிச் சுகம் பெறக் குடிப்பிராகில்
அத்தனுர் சொன்ன வண்ணம் அகன்றிடும் வெதுப்புத்தானே.

10. ஒன்றை விட்டொரு நாள் நாளிது மொருனாள் க் காய
மென்று விட்டொருனளில் பத்தியமெடுத்தே காயும்
வென்றி சொல்லி காரந்தானே அபத்தியம் விருந்தானென்றும்
குன்று போல் முலையினுளே கொடு விஷம் சுரங்கள் தானே.

11. கருங் கொள்ளு சுக்கு மாவிக் ஆரியக் கஞ்சி காய்ச்சி
விரும்பியே யுண்டாளுகில் வெதுப்புட னுடல்
முடைந்து பிரங்கவே நெஞ்சு நொந்து பிடரியுங் காலும் னேகும்
ருவிய வயிறு தானும் வகையறச் சிதைக்கு மன்றே.

12. பிளையாதவன் குணம்:–

அத்தி போல அளலதாகில் ஆங்கார மொழியதாகி

இத்திர மிருந்து நாளும்-இடைவிடாதிருந்த போது
மெய்த்த வாய் கையக்கும் போது வெறியெனப் பிதற்றம் போது
ஒத்த சொல் நாக்கு மூக்கும் முரைத்திடில் புண்ணதாமே.

6.9.62.

13. இக்குணங் கண்ட போதே மிசைத்திடுஞ் சன்னி வாதம்
அக்குணம் முற்றதற்கும் அசாத்திய மென்றறிந்து
இக்குணம் நசியம் பண்ணி மிந்து தொகுடி சீராட்டால்
கைக்குணம் வாராதாகில்க் காலனென்றறிந்து கொள்ளே.

14. நாடிக்கு நாடி மிகப் பதறி நாவும் பல்லு மிக வற்று விடுக்கு
மேனி மிகக் குளிரும் மெலிந்தே பூச்சு மிகவுண்டாம்
மடுத்த சேற்றும மடந்துரக்கும் மதியை அண்டத்திறந் தெங்கும்
படுத்த காரியங் கண்டக் கால் பாராதிவையன் பாராதே.

15. நெல்லி திப்பிலி வேர்க் கொம்பு நிலமா மிளகு தன்னுடனே
சொல்லு முள்ளி சீரகந் தலங்கும ஒன்றரைக்
களஞ்சு மெல்ல அரைத்தித ஊ வகையால்
வென்னீரடனே குடிக்கையிலே வெல்லும் வாத சீத சுரமென்றே முனிவரியம்பினேனே.

16. பேராமுட்டியைச் சுக்குடன் காய்ச்சியே பேணி பூதியுனத்தாறக் குடித்திடில்லார்
கவந்த விஷ சுரத்துடனும் நடுக்கல் மிகு கோபமுள்ளது மீரமில்லாயிரு ஞாளை மாற்றும்
பெற்றமா மூன்று ஞாளை மாற்றும் சர்ர் விலர்னலும் ஞாளயில் மாற்றும்
தனிவரென்றும் முனிவருஞ் சாற்றினரே.

17. நாருஞ் சீரக மிந்துப்பு, நல்ல திப்பிலி, வசம தாகம்
வீருங் கரிய சீரகமும் வேர்க் கொம்போ
ரொன்றிரு களஞ்சாய்க் கூறு படவே பொடியாக்கிக் கொண்டாற்றிவன்
பாயிரமாம் ஊர பெருத்த பித்த சுரம் மூலரோக மொதுங்கிடுமே.

18. சீரா கடுகு ரோகணியும் சிறந்த தராயுங் கடுக்காய்
மோரா சிவதை கொன்றையுடன்னிசையும் மிலாமிச்சை வேரும்
நெராகாக்கி நாலொன்றாய் நிகரியிந்துப்புடன் குடிக்க
பேராம வாத சுரம் புரமல் மின்றுங் குணமாய் யேகிடுமே.

<u>வாத சுரத்துக்குக் குடிநீர்</u>.

19. கஞ்சாங் கோரை கற்றாழை கருத வேப்பிலைக்குடனே
நஞ்சாய் பிரம்ப கடுக்காயும் விறையாஞ்சுக்கு முடன்
கூட்டி மஞ்சார் குழலாய் நாலொன்றாய் மதியாலா மணக்கெண்ணெயுடன்
அஞ்சா நீர் குடிப்பீரா ஆமந் தீரும் சுரம் விடுமே.

<u>சீதம் போகிறதற்கு மருந்து</u>:

20. கற்றாளஞ் சருகுடனே களிப்பாக்குக் கடுக்காய் கரு வேலம் பிரமியுடன் கன்க சுக்குங் கூட்டிப்
பற்றுமல் நாலொன்றால்க் காய்ச்சிக் கொண்டு பதறும்ல் வெண்ணெயுடன் பருகு வீரா
யலற்றூதே உடல் வற்றும் சீதம் போக்குங் வடிவான குணமுடனிரும்ல் போக்கும்
பெற்றூரென சுரதி பேதியேன்றே பெருகில் நாமுமாய்ப் பேசிக் கொள்ளே.

<u>வாத சீத சுரத்துக்குக் குடிநீர்</u>.

21. ஆடாதோடை நில வேம்பு, அன் சொட்டம், முத்தமுடன், பாடாதிலங்கும் பற்படகம் பருத்த சீந்தில் பேய்ப்புடல் கொடாற கொற்ற மல்லியுடன் லேவுந் தெச மூலங் கூட்டி இந்துப்பு பெருத்த சுக்கு வெள்ளுள்ளி ஆரு மாஞர் னரத்தையான நொச்சியிலையில் இலந்தையிலை சொச்சரியாயிரு நாழி நீரில் காய்ச்சி யருந்து வீராய்ப் பரவுந்த சீத சுரம் பாரிப் போக்குங் காண்டீரே.

22. தேவதாரம், பற்படாகஞ் சிறந்த முத்தங் கடுக்காய் சுக்காலதாக்குங் கண்டங் கத்திரி அழகான கோஷ்டங் குமிழ வேரும் மேல் தாக்குஞ் சிறு தேக்கு விரவிற் காய்ச்சி எட்டிலொன்றுய் நவதாக்குறபடிராய நளி சுளஞ் சுரமும் நாடாதே.

வாத_சீத_சுரத்திற்குக்_குடிநீர்.

23. கொட்டந் திப்பிலி, கண்டங் கால் கொள்ருஞ் சிறு தேக்குடன் சுக்கு வாட்ட
மில்லா நிலவேம்பு வன்மை முத்தங் காஞ்சொறி நீட்டும் நிந்தல் பற்படாகம் நிரையக்
காய்ச்சி யருந்து வீராய் ஆட்ட மனிறி குளிர் சுரமு மாறு மினியெ கண்டீரே.

24. ஆடாதொடை தூதுவளை யணியாருஞ் சிறு வெழுதில் வேர்
பாடர் திலவங்கம் பற்படாகம் பங்கம் பானை வேற் கொம்ப
தேடா சந்தனம் நஞ்ரி சேரக் கூட்டி வைத்துக் காய்ச்சிக்
கொடா வடித்துக் குடித்தாரெ குளிரைக் கெடுத்தாரே.

25. சிட்டம் சீந்தல் நிலவேம்ப சிறுகாஞ். சொறி கொத்தமல்லி.
வட்டத் திருப்பி, மனி முததங் கிழங்கு, புசுமிலாமிச்சை
பட்ட திலவயும் பற்படாகம் பகருஞ் சுக்குக் கொடிவேலி
வெட்டிக் குட்டிய முதாதி வெதுப்பங் குளிரு மாற்றிடுமே.

26. சுக்குச் சீந்தல் செவதாறும் துய்ய கருவேல் வெப்பலிக்கும்
மிக்க கடுக்காய் கருவேம்பு, வெண்ணெயுடன் நீர்த் தெட்டொன்றுய் நக்கச்
நக்கச் சன்னி சுரமெல்லாம் நாடிதோடு மல்லாத
பக்கத்தாரும் வாய்வும் போம் பார்த்து மெள்ளப் பகறீரே.

27. திருந்து கோட்டங் கொத்தமல்லி நிகரும் விலாமிச்சம்
பொருந்து முத்தக் காசுடனே பொதவாரிரண்டு உழக்காய்
அருந்தத் தீரும் சன்னி சுரம் ஆண் தோஷமுள்ள தெல்லாம்
பொருந்தா தோடிப் போ மென்றே புகன்றூர் முனிவர் பொய்யாதோ.

28. சீந்தித் தண்டு, கொடிவேலி சிறுகாஞ்சொறி பற்படாகம்
வாய்ந்த. முத்தங் கொற்ற மல்லி வட்டத் திருப்பி நில வேம்பு
சேர்ந்த பத்தி லெட்டொன்றுய்ச் சிறுகக் காய்ச்சிப் பருகுவருய்
வெடந்திடு வதும்பை விடு விக்குமரிடத்திற் சொன்ஞெம். விதியிதுவே.

பித்த_சுரத்துக்கு_குடிநீர்.

29. பாகம் பானை வேர் கொம்பு பருத்த முததக்காசுடனே அரகாஞ் சொறிய
அரகாஞ் சொறிய தின் வேறும் அடவே காய்ச்சிக் குடிப்பீராய்ப் பொங்கிக்
கனியுஞ் சுர பித்தம் பொல்லாத நாற்றமது விட்டு
கஷ்டப்பட்டு மேலெழும் தப்பாதென்று சாற்றினுரே.

30. சிறு தேக்குப் பற்படாகம் முத்தக்காசு சீந்தி வேர்
நன்னுரி, சிறுகாஞ்சொறி நறு நற்றமுள்ள
தேவதாரம் கோஷ்டம் நலத்திகழும். பேய்ப்புடல்
எரித்துப் படாதி பதத்திலிருந்து காய்ச்சி யிரு போது
மின்னிரைப் பருகில் விட்டால் குறையாமல்
மூன்று நாளைக்குள்ளெ தானெண்ணிய. தோர்
நாளைக்குள்ளெ தான் பறியாத பனை வெதுப்பும்
மாறிப் போம். பண்டை யொருரைப்பதுன்மை பகருங்காலெ.

31. ப்ச்ச சங்குருந்து நெய்தலக் கிழங்கும் இரு வேலியின் வேறிவை யுடனே
வாச்சு மதுரம் வெள்ளி லோத்தி மாமருவுஞ் சித்தா முட்டியுடன்
சேர்த்துக் கமலச் சந்தனமும் செருபிறுப்பைப் பூவுடனே பேச்சு மாந்த
சுரந் தனக்குப் பிணி குடுப்போம் பெரியோரே.

32. இப்ப நீர் கேரும் கேளும் இடும்புடொல முத்தக் காசு
பற்படாகம் சீந்தில்த் தண்டு. பையவே நய்ய வெந்த
அப்பினுர் தேனினுரோட ருளாவினுரெனக் கேட்டு வெப்பினுர் ருளிரினுரை
வினவினுர் விடை கொண்டாலெ.

<u>வியாதி தீருகிறதற்கு அடையாளம்.</u>

33. பெருகிய நீரினகன பெருக்கியே அளித்தார்ப் போலே
வருகிற வாயில் தாங்கி வந்தது சுரமே யாகும்
தருமணி தொகை நல்லாயது யாத தங்கினுளாய்
வெகுவிறு விடை யூறினிலே விளம்பினுர் மேன்மையோரே.

34. வாத சுரம், பித்த சுரம் சேற்றும சுரம் மூன்று
வகை வகையாய் சேற்றுமமும், வாதமும், பித்தமுங் கூடினுல் பேதமிகு தோஉடம்
சன்னியாம் பிழைக்கவரித பித்தமுடன் தானும் ஒது சன்னி வாத சன்னி வகையிலேல
வாத சேற்றுமமும் முற்ற சன்னியு மாகும் உரைக்கும் காலே பேத மறவாத பித்தம்
செற்றுஞ் சன்னி பிழைப்பிக்க வென வென்றும் பேசினுரே.

<u>சன்னி ரூப இகர் பெயர்.</u>

35. பெசரிய சாதி சன்னி, தரூந்திர சன்னி பிறலாப சன்னியுடன் லோப சன்னி
அசை மிகு சின் குளிவு சன்னி கன்ட சன்னி ஆக மெ உற்ற சன்னி அதிக சன்னி
தெசமி நக்க சன்னி, சீதாங்கள சன்னி, அசுவ மேக சன்னி திக்கில் விழும் சன்னி
மாசுடனே மாரும் அரற்றும் சன்னி வகை பதிமூன்றெ முனிவர் வகுத்தாரே.

36. (வேறு)
வாத சுரம், சத்தி சுரம், முறை வெதுபற் வாத சேற்றும சன்னி வாத பித்தம்
பேதமிகு நாக பித்தாந்திரமாகும் காய்ச்சல பித்த வாதத்துடனெ அதிசாரம் போகில்
நீத தலும் வாத பித்தம் சேர்ந்த காச்சல் சிறு பித்த சேற்றுமமும் சே
சேருத்த சுரமலும் விதமான விஉடி சுரம் விளம்பினேமெ.

<u>தொல பேர்க்கிற தெசமூல கஉஷாயம்.</u>

37. முன்னைப் பாதிரி காவளையும் முதிருங் குமிழும் பெருவாகை
வன்னமான அழிஞ்சி முள் வேர் வகையாஞ் சுக்குச் சீந்திலுள்ளி
பன்று மெட்டுந் தோல் போக்கிப் பகரு முள் வேர் தனைக் கொள்ளச் சொன்னேமே
தொல விஉடிமென்றே தொகுத்தார் முனிவர் சொல் விதியே.

38. பாதரி முன்னை, பெருவாகை, பகருஞ் குமிழும். வில்லமுடன்
தீத்தருள்வே புதனைக்குள் சிறுவழுதிலை நெரிசில தன்னுடனே
சாதிய சித்தாமல்லி, பேராமல்லி, கன்டங் கத்திரி இவை பத்தும்
முதரி வருரைத் தகனர் யிவை திசமூல மென்றே.

<u>சுரத்தின் குணபாடமுங் குடிநீரும்.</u>

40. சுரத்தின் குண பாடமுங் குடிநீரும் காச்சி யிளவாகவே சென்று கம்பித்து நிற்குமுடனே
முசலுச்சி வாத முளதாகியே சென்றுபி செய்யும்
நாளிரந்து மெலிவாம்-கொவிச் சிறந்த தோர் தாமுங் கூறுடன்
கொன் தோர் பித்த மூன்று வாலிற் சிறந்த தோர் அய்ய மொரு கூறு ரும் வாத
சுரம் வந்திடுமதுவே.

41. பெரிய வாகை, பெருங் குமிழ், பாதரி, பாரெள் முன்னை சதா வேரி,
கூறவளை வேர், நன்னாரி, நெரிஞ்சி, நற் பேய்ப்புடல், உளரென சீந்திலுடன்
பேராமுட்டியே.

42. ஏராரும் சித்தா மல்லி, பேராமல்லி, யெண்டிசை றென சித்தா முட்டி ஆடாதொடை
காராருங் கண்டங் கத்திரி, முத்தக் காசு, கருது மிலாமிச்சையுமுடனெ அவுரி தானும்
சீராருஞ் செங்கழுநீர்க் கிழங்கு சிறு குறிஞ்சில் சிறந்த சிறு சிறு காஞ்சோறி வேரும்
கூட்டி
பேரான காவளை வேர் சாரணை வேருடனே பெருல கென கடைச் சரக்குப் பேசுங்
ா ஙகாலே.

43. தேவதாரம் அரத்தை வசம்பு சொற் செருகு சுக்குடனே
கோஷ்டமுந் திப்பிலி, பூவுளொரென மிளகு மருந்தெல்லாம்
பேராகுந்தற் சமன் கொண்டிடித்த பின்னை மேற் நீரிரு நாழியுங் கூட்டியே
மேலீராறு களஞ்சிட்டுக் காய்ச்சி ஏக விரோவினியாயிரு லொன்றுக்கியே கருதிக்
கொள்ள வாதசுரமே யாகும்.

பித்த சுரத்தின் குணம்.

44. பித்த சுரத்தின் குணஞ் சொல்லின் பெரிதா முலை மிகச் சொலிக்கும்
மெத்த மருள் போலேயிருக்கும் மிகவே சூழ்ந்தும் நாவற்றும்
குற்றுந் தலையில் வலியுளதாங் கொடிதாம் பித்தமுக கூறும்
சுத்த சேற்றும மொரு கூறுழ் சொன்றேம் பித்த சுரத்தடைவே.

45. இதற்கு கஷாயம்:-

ஏலம், அதிமதுரம், இருவேலியின் வேர், விலாமிச்சை, கொழுங்கலைங் கொம்பிலுப்பைப் பூசிக் கொடி நன்னாரி பேய்ப்புடல் சீலமுத்தம், ஆடாதோடை யிலை, சீந்தில். பற்படாகஞ் சமனிடித்து கொலமுள் பன்னிரு களஞ்சு குளிநீரிட்டுக் காய்ச்சிக் கொள்ளீரே.

46. வானீர் கொளுத்தும் முடம்பு பல வண்ணம் மாறும்
அடைக்குந் தானெ குளுந்தும் வெதும்பும்
தரியா திருமல் தானு முண்டாந் தெனர ளுவு தித்திக்கும்
சிறந்த மூக்கும் நீறது பாயும் மானேற வினியாய் சேற்றும மாய் வந்த சுரத்தின்
வகையறியே.

47. தோஷ சுரத்தின் குணம்.

இதற்கு குடிநீர் தூதுவளையின் பூறல், ஆடாதொடை அய்ய சிறுகாஞ் சொறி, முத்தக் காசு, எதமிலாக் கத்தாழை, கண்டங்கத்திரி, ஏற்ற சிறு வழுதலை சுக்கிடித்துக் கூட்டிப் பேதமறப் பன்னிரண்டு களஞ்சு கூட்டி பெருகு பனவிரு நாழி உரியாய்ய் காய்ச்சி ஓதிய திப்பிலிப் பொடித்தெ ராவிக் கொள்ளில் ஓடியிடுஞ் சேற்றுமத்தின் வகையெனதானே.

48. வேறு.
கைகால் குளிர்ந்தால் வலிக்கும். கண்டு வெள்ளோக்காள முண்டாம்.
மெய்தான வெதும்பும் தாகமும் தகவும் உழலையுண்டாகும்
பொய்யா விதனங் குத்தி யிருமல் பொருந்து எரிகிரிக்கும் செவி கேளா.
அய்யா வாத பித்த முன்றுகு மான தோஷ சுரநிதே.

49. கனசீரா நன்னாரி முத்தக் காசு காசினி யென பேய்புடல் பேராமுட்டி, வணக்கமாங்
குவளை வேர் குளவிக் கூடு, வாத்திடு, செவ்வள்ளிக் கொடி, செங்கழுநீர் மூலம்.
சுளற பொருந்து நீர் நழிச் சாறு களஞ்சு உழக்காய்க் காய்ச்சி இஞ்சிச் சாறு
உழக்குடனே கூட்டி நித்தங் கொள்ளு நாளு முடைந்தோடுந் தோஷ சுரம் உண்மை
தானே.

சன்னி சுரத்தின் குணஞ் சொல்லும்.

50. (வேறு) சிக்கிக் கழியு முழலை மிகுஞ் சிற்ந்த பித்த மிகத் தடிக்கும்
மெய்க்கும் விதனமாய் வெதும்பும் மிக மற்றும் மொனியுண்டாம்
தக்க தாகம் பரவிக்கும் தரியாய் பித்த சேற்றுமம்

இதற்குக் கஷாயம்:-

51. இலந்தையிலை, நன்னாரி, சீந்தித் தண்டு, இருவேலி, விலாமிச்சம், மெருமுரகங் கலந்த தொரு பேய்ப் புடல், முத்தக் காசு, கன கோஷ்டம், சுக்குடனே ஆடாதொடை தலம்புகளும் முலைப்பாலும் இஞ்சிச் சாறும், தகைமால யிரு நாழி நீரிலிட்டு உலர்ந்த தொரு திப்பிலி மேற் பொடி செய்து ஆவி உகர்ந்து கொள்ள சன்னி சுரமோடுந் தானே.

52. கற்றுழஞ் சருகுடனே வேப்பந் தண்டு, கண்டங் கத்திரி வேர்,
உற்றன கற்கண்டு கடுகு ரோகணியும் நிகறுங் காரம்புடனே
வெற்றுரு முந்திரிகைப் பழமுங் கூட்டிப் பிசைந்து வெந்த சாறுக்காய்.
வற்று முலைப் பாலுங் கூறுங் கூட்டிக் கொள்ள வன்மமாஞ் சன்னி சுரந் தீருந்தானே.

திரிதோஷ சுர குணமும் கஷாயமும்.

53. வலபானமும் மிகை வழியும் குறைந்து சுரமானது முளதாகியே தலை மார்பு கண் மிவை மிக வெதும்பும்
வருந் தலை வலியும் மிஞ்சிடவே பன்வாயெனனத் தீரும்
விளையுடனே வந்து பாரித்த சோப மிக வாக்கும் வாதமமைய சரியும்
பித்தமுங் காலுடன் கூடுவது தோஷ சுரமாம்.

54. உடம்போடு குளிர்ந்து வரும் முகம் வேர்வுடல் காலு முன சேற்றும மெதிரொடுக்கும்
வெப்பொடு முழங்கால் குளிர்ந்திடும் தலைவலியும் மிஞ்சி மலமுஞ் சுரிக்கிடும்
வாயக் கப்பும் புளிப்புடன் தித்திக்கும் வாயுங் கறுத்திடும்
வாதமுடனே செப்புறற் பித்தமும் சேற்றமமும் முற்றியது செய்யுந் திரி தோஷ குணமே.

55. நய்ய சிறு காஞ் சொறி வட்டத் திருப்பி வேர் தூதுவளை நன்னாரி வேர்,
எய்யுமடா தொடை சிறிய வழுதலையின் வேரினிய கண்டங்காரி வேர்
மெய்யுலவு நெல்லி முள்ளி சுக்கொடு கடுக்காயு மிகுதானனறிக் காய்ச்சி நீரில்
கய்யவே தேனிலேடு திப்பிலி யளாவிக் கொள் கொண்டு நாபிஷ திரிதோஷ சுரமே.

56. கண்ணைச் சிவந்தே கரித்தே யிருந்து பல காலுமே எழுந்திருக்கும்
என்னறுங் கழுத்தில் மிக வற்றி அறிவனறியே யெப்பொழுது மேல் மூர்ச்சையாம்
கன்னறுந் தலைக்குள் வலியுளதாய் வெதும்பிடும் நடு மார்புச் சறச நிலையும்
உன்னின் றெழுந்திவையான குணமே செப்பு முறை சந்தி சன்னிச் சொல்லிலே.

57. சொற் பெரிய ஆடா தொடையிலை, சிறுவழுதலை தூதுவளை, நன்னாரி வேர்
கற்புடைய நற்சித்தாமுட்டி வேர், சுக்குக் கலந்து முத்தக் காசுடன் பற்படா
சந்தன மிருப்பைப் பூ விவைகள் பன்னிரு களஞ்சு கொண்டே
விற்படைய நீருமிறு குழி யொட்டொன்றுதாய்ப் பேசிக் கொள்ள சன்னி நட்டமாமே.

தாந்திர சன்னிக்கு.

58. நடுவிரல் நெற்றி வெஞ்சுர மிகுத்தொடக்கும் மனல் வாயிறலே,
உடலாதி உண்மை யிது பல குணஞ் செய்யுமே உற்றனச் சொல்லாமலே
கொடிதாகியே கெத்தத்தாக மிகுதாகும் குறித்த கால் னககள் தனவாம்
நடமார்பும் குளிர கால் கை வராது இது தாந்திர சன்னி விதமே.

தாந்திர சன்னிக்கு குணத்திற்கு கஷாயம்.

59. இதுக்குக் குடிநீர் சீந்தில் பற்படவகமொடு வெற்றி வேர் பேய்ப்புடல், செய்ய சுக்குடன்
வசம்பு வந்த நீரிருழி தன்னீ களஞ்சிட்டு வள்ளித்தாக்க ** காய்ச்சியே
சேர்ந்தவுடனே உழக்கா யிறத்துக் கொண்டு செய்ய பரிகாரஞ் செய்தால்
ஆயிந்த பாரோர் சொன்ன சன்னி விதம் வகை அத்தனையும் பறியுமே.

கிறந்திக்கு மருந்து.

சித்தா மணக்கெண்ணெய் ஒரு படி கிளிமுக்குக் கிழங்கு, ஈர வெங்காயம், வால் மிளகு, சேர்த்து மெழுகு பதமாக வேக வைத்து இறக்கிக் கொண்டு சாப்பிடவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

கிறந்திக்கு மருந்து.

சித்தா மணக்கெண்ணெய் ஒரு படி, ஈர வெங்காயச் சாறு படி ஒன்று, சங்கங் குப்பிச் சாறு படி ஒன்று, சங்கயிலை சாறு படி ஒன்று, இலுப்பைப் பூச் சாறு படி ஒன்று, கோட்டைக் கிறந்திச் சாறு படி ஒன்று, இது யெல்லாம் ஒன்றாகக் சேர்த்து தீபாக்கினியால் எரித்து கமலாக்கினியால் எரித்தும் மெழுகு பதத்திலிறக்கிக் கொண்டு வடித்து நித்தம் கொள்ளும் போது ஒரு சிறங்கை சாப்பிட பத்தியம் உப்பு, புளி ஆகாது.

இருமலுக்கு.

நெல்லி, திப்பிலி, நெற்பொரி, சர்க்கரை, நல்ல தேனில், நெய்யிர்க் கொள் வீரே இல்லையேல் இருமலும் ஈழையுந் தில்லை மேவும் சிதம்ப ராரனே யே சிவமயம்- குருவாழி-இலவங்கம் விராகனிடை .ச, மிளகு விராகனிடை.அ, சுக்கு விராகனிடை.உ, நாகப்பூ விராகனிடை.அ, திப்பிலி விராகனிடை . ,, சாதிக்காய் விராகனிடை .ச, இலவங்கப் பட்டை விராகனிடை .ச, இலவங்கப் பத்திரி விராகனிடை.ச, இரசம் விராகனிடை.ச, முககுருந்து இடித்து இந்த மருந்தை வஸ்திர காயம் பண்ணி வைத்து பின்பு ஆறு பலச் சர்க்கரை கலந்து வைத்துக் கொண்டு இரண்டு நேரமும் ஒரு மண்டலங் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி இருமல், ஆராட்டம், உடம்பு மூல வியாதி ஆரோசிகம் முதலானதுந் தீரும்.

பிள்ளை பிணிக்கு மருந்தெண்ணெய்.

பாவட்டை வேர், பேய்ப் பீர்க்கன் வேர், வேலிப் பருத்தி வேர், சங்கம் வேர், தூதுவளை வேர், முள்ளி வேர், விரும்பி வேர், சிறுக்கீரை வேரா, குரி வேர், வேளை வேர், நாய் வேளை வேர், குப்பை மேனி வேர், கொஞ்சி வேர், சித்தவரை வேர், சாறணை வேர், வசம்பு, மிளகு, திப்பிலி, ஓமம், வெள் வெங்காயம் வருத்தாத்தின ஆமணக் கெண்ணெய் இரண்டு படிக்கு ஒரு படி ஈர வெங்காயம் அரிந்து போட்டு முன்னே சொன்ன மூலிகை வேர் எல்லாம் பட்டை தட்டிப் போட்டு எண்ணெய் விட்டு பதமாய் வெங்காயம் சிவந்த பதத்திலிறக்கி எண்ணெய் வடித்துக் கொள்ளவும். பிள்ளைக்கு வயிறு கழிய வார்க்க வேண்டில் வென்னீர் கலந்து வார்க்கவும். மற்றநாள் சர்க்கரையிலே மட்டிலை சற்றெடுத்து அரைத்துப் பாலுடன் கண்டு காரம் வார்க்கவும். சகல மாந்தமுந் தீரும். கத்தாழைச் சோறு பலம் .ரு, ஈர வெங்காயச் சாறு படி., வருத்தாத்தின ஆமணக் கெண்ணெய் படி.க, பொதளைச் சாறு படி.இ, வேலிப் பருத்திச் சாறு படி.இ, கடுகு ரோகணி விராகனிடை .உ, வெள் வெங்காயம் வசம்பு, கடுக்காய் பலம்.இ, இது வெல்லாம் அரைத்து கரைத்து எண்ணெய் எரித்து கொள்ளவும். இதற்கு பத்தியம் கார்ப்பு புளிப்புத் தவிர்க்கவும். சகல மாந்தந் தீரும்.

மாந்தக் குளிகை.

சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, தேசாவரம் விராகனிடை.க, வாய் விளங்கம் விராகனிடை.க, கோஷ்டம் விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, கொத்தமல்லி விராகனிடை.க, வசம்பு விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, சாதி பத்திரி விராகனிடை.க, கடுகு ரோகணி விராகனிடை.க, கோரோசினை விராகனிடை.க, கடுகு விராகனிடை .க, கிராம்பு விராகனிடை.க, ஏலம் விராகனிடை .க, அக்கிரா காரம் விராகனிடை .க, ஓமம் விராகனிடை.க, வெள் வெங்காயம் விராகனிடைகக, பெருங்காயம் விராகனிடை.க, ஆமையோடு விராகனிடை.க, சிறுத்தேள் விராகனிடை.க, கண்டு பீரங்கி விராகனிடை.க, அதிவிடையம் விராகனிடை.க, கடுக்காய் விராகனிடை.க, சீரகம்

விராகனிடை

விராகனிடை. க, சித்திர மூலம் விராகனிடை . க, இது வெல்லாம் பசுவின் நெய்யில் சிவக்க வறுத்து அதின் பிறகு பட்டைத் தாளை ஒரு பிடி உத்தமணியிலை ஒரு பிடி, பொடுதலை ஒரு பிடி, சுண்டையிலை ஒரு பிடி, சீறியிலை ஒரு பிடி, எழுத்தாணித் தழை ஒரு பிடி, சுரைத்த தழை ஒரு பிடி, ஆவரந் தழை ஒரு பிடி, பாகத்தழை ஒரு பிடி, இது வகைக்குச் சாறு பிழிந்து கொண்டு இந்த சாறு விட்டு அரைத்து பருத்தி விரைப் பிரமாணம் குளிகை பண்ணிக் கொண்டு பின்னைப் பிணி மாந்தமானால் ஒரு குளிகை வெந்நீரில் வார்க்கவும். இதற்குப் பத்தியம் உப்புப், புளி தவிர்க்கவும். சகல மாந்தந் தீரும்.

வயிற்று நோவுக்கு.

அடி வயிற்று நோவும் மூல வாத்து வேதினையுந் வேதினையுந் தீர்ப்பான் வேத் நாயகியம்மாள் பஞ்சாங்கஞ் சொல்லுவாள், பரதேசி வேல அஞ்சாமல் சொல்லுவாள். ஆரிய பேர் பெத்தவள் குடலைப் பிடுங்கி மாலையைப் போட்டு கண்ணைப் பிடுங்கித் தீயிலே போட்டு முழியைப் பிடுங்கி நெருப்பிலே போட்டு நிர்க்க சிவா.

ஓரண்ட வாதத்திற்கு மருந்து.

உதிர்ரல் குப்பை மேனியிலை, குன்டியிலை, முடக் கொத்தானிலை, ஊமத்தை யிலை, நொச்சி யிலை, இவை சமனாகத் துவைத்து வறுத்துக் கட்டவும். குணமாகும்.

விரை வாதத்திற்கு மருந்து.

களச்சிக் காய் பருப்பு, சாறணை வேர், ஒரு பிடித் தும்பை யிலை ஒரு பிடி, முடக் கொத்தான் கொழுந்து ஒரு பிடி, வெள் வெங்காயம் இது வெல்லாம் நறுக்கிப் போட்டு நல்லெண்ணெயில் எரித்து உள்ளுக்குக் கொண்டு வீக்கத்தில் பூசவும். இது கைக் கண்டது.

கிறந்திக்கு மருந்து.

என்னெய் ஒரு படி, ஈர வெங்காயச் சாறு ஒரு படி, தன்ஞ்சிச் சாறு ஒரு படி, குதிரைப் பல் ஒரு படி, இந்த நாலையும் வைத்து ஒரு விறகு கொண்டு எரித்து ஒரு படியாக சுடவைத்து இறக்கிக் கொள்ளவும்.

குதக வாய்வுக்கு.

சீனி சர்க்கரை ஒரு பலம் தாழை விழுது சாறு ஒரு படி பூலாந்தச் தழைச் சாறு பருத்திக் காய்ச் சாறு, இந்த நாலு வகையும் சேர்த்து சாப்பிடவம். இதற்குப் பத்தியம் உப்புப் புளி தவிர்க்கவும்.

நர்வி சுத்தி.

நாவியைப் பொன்னாங்காணி, சிறுக்கீரை, சமூலமும் அரைத்து பானை வாய் கட்டிப் புட்டுப் போலே வைத்து சுத்தியாம்.

பசுவின் பாலில் இந்த மருந்தை அவ்ரத்துக கட்டிச் சுத்தி பண்ணவும்.

கெந்தக சுத்தி.

ஒரு பானையிலே இரண்டு படி மோராவது பொன்னாங்காணி, சிறுக்கீரையாவது வைத்து மேலதை சீலை கொண்டு வடுகட்டி புட்டுப் போல் வேக வைத்து சுத்தியாம்.

வெண் காரச் சுத்தி.

வெண்காரத்தைக் கரண்டியிலிட்டுப் பொரித்துக் கொள்ள சுத்தி ஆகும்.

காரச் சுத்தி.

ஒரு பானையில் நாழிப் பால் வார்த்து பொன்னாங்காணி சிறு கீரை துவைத்துப் புட்டுப் போலே வேக வைத்துச சுத்தியாம்.

நாபி சுத்தி.

நாவி எருக்கிலம் பாலில் ஊரச் சுத்தியாம்.

அரிதார சுத்தி.

ஜாதிலிங்கத்தைத் தண்ணீர் வார்த்து அரைத்து அடை போலே தட்டி வைத்து சிறு கலசத்தில் பசுவின் பால் வார்த்து பிட்டு குரு வாயி கட்டு கிரும் போலே கட்டி அதில் சாதிலிங்கம் அரைத்ததை வைத்து சட்டி மூடிச் சீலை மண் செய்து புட்டுப் போலே வேக வைத்து சுத்தியாம்.

பாஷாண சுத்தி.

பாஷாணஞ் சீலையில் முடிந்து ஒரு சீலையிலே தேங்காயளவு சுண்ணம்புகு குறுணி நீரில் கரைத்து தோளாந்தாள்க் கட்டி வைத்து தீ யெரித்துச சுத்தியாம்.

துரிசு சுத்தி.

துரிசி எலுமிச்சம் பழச் சாறு வார்த்து கழுவச் சுத்தியாம்.

துத்தம் சுத்தி.

துத்தம் எலுமிச்சம் பழச் சாறு வர்ர்த்துக் கழுவ சுத்தியர்ம்.

மதுமீர ரசாயனம்.

தும்பி முகத் தோன் து‌ணைப் பதத்தை என்னுளும் நம்பி மது மீரா சுர ரசாயனத்தை அம்புவியில் செய்யு முறை சொல்லக் கேள். சீனத்துப் பட்டை பலம் இரண்டு சர்க்கரையு மந்த நிறை தூய்ய நிலத்தால் கிழங்கு அளவாயிரண்டு பலம் நிலப் பிரப்பங் கிழங்கு, மெ சாலப் பல மொர்ன்று கெந்திய பலமுமொர்ன்று சலமீட்டான் மூலம் வதாலும் பலம் அரையா மென்ற மிளகு சுக்கு, யோற்ற சிறு திப்பிலியும். மூன்று முத்தக் காசும் ஓர் பலமாம் வென்று மதிமதுரமேமம் அதிலிடைய சாதி பத்திரி வாணந் தோர் சாதி பத்திரியும் மிதமான முந்திரிகை பேரீந்து முத்தக் கனியுடனெ அந்த சன்ன கூகை நீருனதும் சாந்தமிகும் வெட்டி விலர்மிச்சு மிகு கடுகு ரோகணியும், பட்ட கிரும்ப இவை தான் பன்னி ரண்டு திட்டமுடன் தின்றென்னுக் கைந்து விராகனிடை கோஷ்டம், குண்டாத சித்தரத்தை கெ கொத்தமல்லி நன்றுக சன்ன யிலவங்கமுடன் தாளிச பத்திரியும் முண்ணத்ா து விளை புடன் பாண்டி சொன்ன கண்டங்கத்திரியி தெட்டு கருது மொரு வகைக்கு மூத்திவிராகனிடை மூன்று சித்தி தரும் தேவ தருதான்றி சிறு நாகப்பூ, வின்னகம் மாவித மாசக்காய் அயிந்து மே ஓர் வகைக்கு இரண்டு விராகனிடை நெய்யு மொரு மூன்று படி கண்டதலி கனி பத்து விண்ட நறு செந்தேன்ரைப் படியாம், செப்பு மருந்தில் வாரவும். சிந்தாமலெ கொணர்ந் பின்பாக நந்தா பட்டை தழை வேர். பத்மாயிப்பிடித்து வைத்து தொட்டவன் மருந்து ஆளாக்கிட்டு கற்டச் சாக்கிலே சாதிக்காய், யேலம், கோஷ்டம், பேரீச்சம் பழ மொடு, முந்திரிக்கை, யித்தனையும் ஒன்றுய் இடித்து மெதத்தை யெமத்த சர்க்கரை யெலம் வாசாகவே கூட்டி குத்தமில்லாதெ யிடித்து கொன்தற் பின்ற் பலவர்.

அனித புண்ணுக்கு குழம்பு.

சங்கு பச்சை, அரைத்து பொடி, வெங்கக்கல் பொடி, கடுக்காய் பொடி கலந்து மேலே இட்டு எலுமிச்சம் பழச சாறு விட்டுத தேய்த்து பசுவின் வெண்ணெய் போட்டு தேய்த்து புளியந்தனை தண்ணீர் விட்டு கழுவிப் போட்டுப்பு புண்ணுக்குப் போட புண்ணும் ஆறும்.

இருமலுக்கு மருந்து.

நன்னாரி வேர், கொண்டு வந்து கஷாயம் போட்டு ஒரு துட்டிடை மூன்று நேரங் கொள்ளவும். உப்பு, புளி, கிரந்தப் பண்டமாகாது.

சிறுநீர் அடைத்தால் மருந்து.

நீர்க் கடுப்பாளல் பருத்தியிலையப் போட்டு தவைச்சுக் காடியில் பிசைந்து சர்க்கரை கூட்டிக் குடிக்க நிற்கும். சறு ஒலங் கொண்டு வந்து தவைத்து தனிச் சாருக ஒரு

ஒரு சேரையும் ஒரு எலுமிச்சம் பழச் சாறு சர்க்கரையுங் கூட்டி கொடுக்க. சுக்கில் அக்கில் பிறமியமான பிறமிய முந் தீருமே. காச்சலுந் தீருமே.

சிறு பிள்ளையின் பிளிப்புக்கு மருந்து.

கருப்புக் கட்டியும் நெய்யிலும் தெற்முன பழத்தை பிசைந்து அடையாகத் தட்டிக் கொடுக்கவும்.

பிறமியத்துக்கு மருந்து.

வில்லை பட்டையைக் கொண்டு வந்து நறுக்கி, ஆவரங் தோல் கொண்டு வந்து பிளந்து நறுக்கிப் போட்டு புதுப் பானையில் ஊரப் போட்டுத் தண்ணீர் நிறையக் காடி தண்ணீர் விட்டு சாலிக் பானைக் கழுத்து மட்டும் மணல் விட்டு மூடி இருக்க விட்டு எடுத்து மூன்று நாளைக்கு கொள்ளவும். சகல பிறமியமும் விடும.

ஈழை நோவுக்கு மருநது.

மூன்று வாழைப் பழம் கொன்டு வந்து அதில் பூதின குஷ்டத்தை வைத்துக கொடுக்கத் தீரும்.

சிறு பாம்பு கடிக்கு மருந்து.

கிளி மூக்குக் கிழங்கும், ஆவார வேர், வெள்ளை அருகு விரும்பி வேர், முசக்கு மட்டி வேர், இது மேலுக்குத் தவளை போடவும். உள்ளுக்குக் கொடுக்கவும்.

சோளை பயிர் தின்ற மாட்டுக்கு மருந்து.

தேன் கொண்டு வந்து நாக்கில் தடவத் தீரும். ஆவாரம் பருப்பும் வசம்பும் மென்னவுஞ் சிவிலும் காதிலும் வாய் பேசாமல் ஊத்தவும்.

தோஉடும் முறிய மருந்து.

கொம்புப் பாகல், பருத்திப் பிஞ்சு, சிறுக்கீரை, சீந்தில் தண்டு, கத்திரி வேர், இவை பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். தண்ணீர் காய்ச்சிக் கொடுக்கவும்.

மூலத்திற்கு மருந்து.

கடுககாய், வெடி வேர், சிறு நாகப்பூ, இந்த மூன்று வகையும் விராகனிடை.ச, ஐந்து நாழி தண்ணீர் விட்டு மூன்று உழக்காய்க். காய்ச்சி அதில் மேல் பொடி சவுக்கார ஒரு கழஞ்சு பொடியது மேல் பொடியிட்டு இந்தப் படிக்கு மூன்று நாள் கொள்ளவும்.

எலிக்கடிக்கு மருந்து.

எலிக் கடித்தவுடனே கடுகு ரோகனி இரண்டு கழஞ்சு அரைத்து காடியிற் கொள்ளவும்.

வேளைச் சாறும் எண்ணெயும் சமனைக் கூட்டிக் கொடுக்கவும்.

சங்கன் குப்பி வேர், சந்தனமும அரைத்துப் பாலிலே கொடுக்கவும்.

சங்கன் குப்பி வேர், சங்கு பற்பமுந், சந்தனமும். இந்த மூன்று மொன்றுய்க் கூட்டிக் கொடுக்கவும். பாலில்க் கொடுக்கவும். குருவே துணை.

நீரழிவு பிறமேகத்துக்கு மருந்து.

மருேசிலை பலம்.க, எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி புடம் போட்டு எடுதது வைத்துக கொண்டு நீரழிவு பிற மேகத்துக் கொடுக்க தீரும்.

எலிக் கடிக்கு. மருந்து.

எலிக் கடித்த வாயைக் கிழித்து கொடி வேலி வேரை அரைத்து கரண்டியில் கொதிக்க வைத்துக் கடி வாயில் கட்டவும். குப்பை மேனி இலையும் பிரண்டையுந் துவைத்து எருமை மோரில் பிசைந்து வடி கொண்டு மூன்று நாளைக்குக் கொடுக்கவும். அதின் பிறகு காவிலிங்கம் பட்டையைக் கொண்டு வந்து கருங் குருவை அரிசி அரிசி அரிசியில் இடித்து

அந்த மாவைத் தின்னவும். மிஞ்சின மாவை எலி ரூபமாய் பிடித்து மாவிலிங்கந்தழையைக் கொண்டு வந்து தட்டு பிடித்து வைத்து தழையைக் கீழும் மேலும் வைத்து நடுவையாவது வெந்ததைத் தின்னவும். இதற்குப் பத்தியம் காரப்பு, புளி ஆகாது.

அரணை கடிக்கு மருந்தும் வண்டு கடிக்கு மருந்தும்.

கையாந்த கரை வேரும், அம்மான் பச்சரிசியும் இரண்டு வேரையும் மென்று இவ்வளவு இரண்டு இலைச் சாறு மூன்று தினம் கொடுக்கவும்.

சித்தி மூலங் கொண்டு வந்து கொழுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து திணை அரிசியில் பிடித்து அந்த மாவைத் தின்னவும். மிஞ்சின மாவை குழக்கட்டையாக பிடித்து எருக்கிலங் காய் கொண்டு வந்து சோற்றை எடுத்துப் போட்டு அதற்குள்ளே வைத்து வெந்த பிறகு எடுத்து தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னவும். விஷ, கடி, வண்டு கடி, சொறி சிறங்கு இது யெல்லாந் தீரும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

தலைப் பைத்தியத்திற்கு மருந்து.

சோமனாதப் பெருங்காயம் ஒரு பணவிடை நெருப்பில் சுட்டு இளவென்னீரில் கொடுக்கத் தீரும்.

பிளவைக்கு மருந்து.

நெல்லியுடன் நிலப் பனைக் கிழங்கு தாளும் நெற் பொரியும் அவரையும் நீலி வேரும் சொல்லரிய வற்று வெண்ணெய் சேர்த்து திடமான வீக்கத்தின் மேல் பூசக் கொலவரி பிளவை தனிற் சலக் குணந் தெருந்து வருங் கன்னயி வரு நீர்ப் பாய்ச்சல், மெல்லிய தன் முலைப்பால் கூட்டில் விதனமுடன் வலிதானும் வினைப் போமெ-இதற்கு மூன்று நாள் பூசவும்.

விப்புருதி குணம்.

தொப்பிளை வலித்து நொந்து நுளங்கிட இரத்தம் வீழந்து
அப்பொழுதந்த மூலம் அரியவே வெளியில் தள்ளும்
தப்பற மேனி வற்றுந் தருகிடா தருகிடாதத்த்ந் தோன்றும்
இப்படி இரம்ம மூலமா மென விளம்புவாயே.

குவளை விப்புருதி.

இடுப்புடன் முழந்தாள் தண்டு மிரு புறம் விலாக்கள் நெஞ்சு
நடுக்கியுங் குளிர் வெதுப்பு நெய்யவே கொதித்துக் குத்தும
அடுத்திடு முதித நோவும் மயக்கமோடுஞ் சியற்று
குடிக் கொள ம்ருந்த தென்னில் குவளை விப்புருதியாமே.

இந்த நோய் வந்த நாளில் இருமியேகியும் முண்டாம். வந்த மூச்சிளப் பெடுத்து வற்றிடில் மரணமாமே.

விப்புருதி உளமாந்தையின் குணம்

பதியும் பத்திற்ச்ச மாசில் பருளால் சுற்று.
நொயி தொல சத்திய மாங்கிஷத்தில் நடர்ந்தொரு
நோவு கண்டால் முது வெண் கோழி முட்டை முருங்கை
தூதுவளை முள்ளி புத்திய பொன்னாங்காணி முசலுட்னனுள்ளான கூட்டெ
இந்த தொரு நாள்ச் சென்றுக் காலினிகி காச ரோகம்
முந்திவே அய்யும் பிக்க முருகியே குழச்சி வெதுப்பும்
வந்ததொரு குணங்கள் கண்டார் யமங்கிடா
தெந்த் நாளும் பயந்தோடி ஆவின் பால் தீரையும் அருந்தப் போமே.

குன்றிடா முசுட்டைக் கொடி வேலி வேலிப் பருத்தி
குன்றுமல் நன்றாய் நிலத்தில் குமிழினிலை நீரு பயிறும் ~~தீச்~~ நீலியிலை சென்றே பிடுங்கிச்

சிறுமல்லி சேர வரைத்தாவின் பாலில் அன்றே குடுக்கிவள மாந்தை
அகன்றே இயல் புண்ணுறிடுமே.

என்ணெயிலக் குமின் நடரி பூலா நிலத்தினிற்றின் பஞ்சம்

நடுனக் கேளாய் நலப்படுங் கோஷ்ட முள்ளி நற்கடுகு நெல்லி
தானிறி குலப்படுந் தம்புயிடல் கூட்டி நீறெண்ணெய் கொள்ளே.

கழிவகை, குறிஞ்சியிலையைக் கருங் குருவை மாவை யிடித்துச்
செறிந்தி யெண்ணெயுடன் தின்னரிந்த உளமாந்தை
மூச்சிலுடன் பிளித்து நோவாங்கூஞ்
தீர்ந்து கண்ணடைக்குங் காணே.

குன்மத்துக்கு குளிகை.

கள்ளியுஞ் சோமலுப்பி உரத் தேரிங்கு குதம்
வெள் வெங்காயஞ் சுக்கு மிளகு திப்பிலிக் காந்தங்
கள்ளியின் பாலில் நொச்சிக் கசக்கி யறுவச் சாறும்
விட்டரைத்து உருண்டை செய்து கொள்: வாய்வு குன்மம் விட்டகலும் தானே.

குதிரை வலின் குணமும்.

என்னிய சன்னி வாதத்திலிதுவுங் குதிரை வலி
எள்விலப் புருவங் கதித்தங்க முன் காது மொது
பக்கம் மென்றுரைய மிகத் தள்ளும்
மிகவே திருக வலியுண்டா
விண்ணப் பார்த்து விழி நோக்கும் மீறாதிவுஞ் திண்ணமிதே.

இதற்கு அஞ்சனம்.

சுக்கு, மிளகு, திப்பிலியும், சோமலுப்பு, வெள்ளுள்ளி, தக்கொந்தாம் மதிறப் பருப்புந் தகா வசம்பு மிவை கூட்டி சந்தேகிப் பழச் சாற்றிலுடனே அரைத்து உருண்டை செய்து மெய்க்குங் குதிரை வலி பூ தயிளந் தேசிப் பழத்திலிடென.

வெட்டை மருந்து.

கள்ளிவிடவும். சுக்கு, மிளகு, திப்பிலியுமித் துய்ய கடுக்காயிந்துப்பு, மிக்கக் கடுகு ரோகணியும் வெள்வேராகக் கழஞ்சு, நெல்லரிசி கனி நீர் படி.ச, இதை புது சட்டியில் வார்த்து மூன்று நாள் இருக்க விட்டு அதை இருத்து அடி மட்டிக் கனி நீரில் பசுவின் பால் விட்டு குழப்பி குமிழம் வேர் வடக்கே போகிற வேரைக் கொண்டு வந்து அரைத்துக் குழப்பி விழுங்கவும். இதற்கு பத்தியம் சம்பாவரிசி, பச்சை அரிசி, சமையல் பண்ணிப் பசுவின் பால் விட்டுச சாப்பிடவும். வன்னி மாத்துத் தழை மூன்று பிடி கொண்டு வந்து அரைத்து பசுவின் வெண்ணெயில் குழப்பி விழுங்கவும்.

ஈளை இருமல் சேற்றும இருமல் இதுகளுக்கு மருந்து.

ஆடா தொடைச் சாறு படி.க, கண்டங் கத்திரி சாறு படி.க, பிரண்டைச் சாறு படி.க, கரு நொச்சிச் சாறு வென்னீர் விட்டுத் துவைத்து சாறு படிக.; ஆக நாலு சாறுங் காய்ச்சி நெருகு பதமானால் இதற்குக் கூடைச் சரக்கு வெண் காரம் கழஞ்சு.ச, சுக்குப் பலம்.உ, திப்பிலி பலம்.உ, இந்த மருந்துகளை பொரிச்சுப்போட்டு துளாவிக் காய்ச்சி இறக்கி பனைப் பாகி லொன்று தேனி லொன்று கூட வார்த்து துளாவி காய்ச்சி நெல்லிக் காயளவு கொள்ளவும். பத்தியம் பசுவின் பால். நெய்யாம். உப்ப, புளி ஆகாது.

மருந்தீட்டுக்கு.

மயிலேசினை கழஞ்சு, ௩, குளித் தாமரை இது இரண்டுங் கூட்டி எலுமிச்சம் பழச்

சாறு விட்டரைத்து செப்புக் காசுத்தி தகடு தட்டி அந்தந்த கட்டுக்குள்ளே இந்த மருந்தை வைத்து மூடி சீலை மண் செய்து விரட்டியில் புடம் இட்டு வெந்தவாறே எடுத்துக் கொண்டு அரவு பொடி களஞ்சு.ங,கூட்டி அரைத்து நாழிகை எருமைத் தயிர் கொண்டு வந்து கட்டித் தூக்கி அந்தத் தயிரில் கொடுக்கவும். பத்தியம் புண்ணுக்கு இலை கரியும், எண்ணெயும் குருவை அரிசிச் சோறும் எருமை நெய்யுமாகும். சீறு கொட்டி விடவும்.

பேய் வீக்கத்திற்கு மருந்து.

ஆதியிலையை கொண்டு வெதிப்பி உருவிக் கொண்டு கட்டவும். கறுப்பாய் திரண்டு உடையும். உடைந்த பின்பு விளக்கெண்ணெய் சீலை போடவும்.

விரேசனத்திற்குக் குளிகை.

நேர்வாளங் கழஞ்சு.அ, சுக்குக் கழஞ்சு.ச, சுரக்காய் கெந்தகம் கழஞ்சு.உ, வளையலுப்பு களஞ்சு.க, வெங்காரங் கழஞ்சு.க, மிளகு கழஞ்சு.க, ஆக மருந்துகளை தண்ணீரிலரைத்து சுண்டக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுணர்த்தி வைத்துக் கொண்டு தண்ணீரில் ஒரு உருண்டை கரைத்து கொடுக்கவும். மாற்று வெந்நீரில் கொடுக்கவும். சுடு சோறு உண்ணவும்.

பிளவைக்கு மருந்து.

நீருலி எலை மடித்துக் கன்னிப் பால் தடவி மேலே வெல்லந் தடவிக் கட்டவும். இதற்கு வேப்பெண்ணெய், புங்கெண்ணெய் இலுப்பை யெண்ணெயுங் காய்ச்சி குப்பை மேனிச் சாறு இலையில் தடவி புண் மேலே போடவும். பிறகு விளக்கெண்ணெய் சீலை போடவும். சரக்கு திப்பிலி, மிளகு, சுக்கு, அரிதாரம், மனோசிலை, நந்தியாவட்டம் சாறு வார்த்து அரைத்து உருண்டை பண்ணி வைத்துத் தேனிலுரைத்திடவுந் தீரும்.

சன்னிக்குக் குளிகை.

முந்திரிகைப் பழம், பேரீச்சம் பழம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், ஏலம் இலவங்கம், கடுக்காய், நெல்லிப் பருப்பு, தானிக்காய், இரு வேலி வேர், இலுப்பைப்பூ, விலாமிச்சை வேர், இவை யெல்லாம் தண்ணீரில் லொக்கக் கொண்டு கரும்பஞ் சாற்றில் அரைத்து அவரை பழப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துத் தேனிலாவது, முலைப் பாலிலாது பண்ணி வைத்துத் ஒரு உருண்டை இடவும். சன்னி தீரும்.

காமாலை பாண்டு ரோகம் வாய்வு உடம்புக்கு மருந்து.

கையாந்தக் கரை சாறு படி.க, மிளகு பலம்.ச, நல்லெண்ணெய் படி.க, கூட விட்டு சிவந்த பதத்தில் இறக்கி மிளகு பொடி தூவி இறக்கிக் கொண்டு எண்ணெயும் மருந்தும் குழப்பி முழுகவும். பதினான்கு நாளைக்கு உப்பு, புளி விடவும். இந்த எண்ணெயிலு நாளைக் கொரு தரம் முழுகவும்.

மஞ்சள் காமாலைக்கு மருந்து.

நற்சீரகம், ஏலம், திப்பிலி, மூலம் கடுகுரோகணி, அதிவிடையம், கோஷ்டங் கிராம்பு, பூலாங் கிழங்கு, அதிமதுரம், தக்கோலம், இலவங்கப் பட்டை, இது வெல்லாம் வகைக்குப் பணவிடை யஉ, பசுவின் நெய் படி.க, பசுவின் பால் படிக.ஆடா தோடைச் சாறு படி.க, இதுவெல்லாம் ஒன்றுகக் கூட்டி கண்டச் சரக்கெல்லாம் பொடி செய்து கூடப் போட்டு வேக வைத்து மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு ஒரு தட்டிடை யளவு அந்தியும் பகலும் தின்னவும். மஞ்சள் காமாலை, மஞ்சள் பித்தம் குன்மம் இவை யெல்லாந் தீரும்.

சீ விழுகிறதற்கு மருந்து.

பச்சை நெல் அரிசி ஒரு சேரை, நற்சீரகம் ஒரு சேரை, இரண்டுந் நுணுக்கி வஸ்திர காயம் பண்ணி வெள்ளாட்டுப் பால் ஒரு பிடி செம்பருத்தியிலை ஒரு பிடி கூடப் போட்டு பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவுந் தீரும். இதற்கு பத்தியம்.

7.9.62.

பாண்டு ரோகம் உடம்பு இளைத்தலுக்கு மருந்து.

அரவு பொடி ஒரு காசிடை வெள்ளுள்ளி ஒரு காசிடை மிளகு காசிடை கையாந்த கரை யோடரைத்து நல்லெண்ணெயில் குழைத்துக் கொள்ளத் தீரும்.

ஊது காமாலைக்கு மருந்து.

பொடிதலை ஒரு பிடி தழையைக் கொண்டு வந்து எருமைத் தயிலரைத்து நல்லெண்ணெய் அரைப்படி இது வெல்லாங் குழப்பிக் கொள்ளவுந் தீரும்.

கொனிக் கற்ப்பம், பாண்டு ரோகம், காமாலை, சோகை இதற்கு மருந்து.

பெருங்காயம் விராகனிடை.உ, ஊசிக் காந்தம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை .உ, திருபாலை பலம்.உ, கிரிகடுகு விராகனிடை.உ, கடுகு ரோகணி விராகனிடை.உ, சுக்கு விராகனிடை .ய்ரு, சீரகம் விராகனிடை.யக, இதுவும் மூன்று வருஷத்துக் கோழியை குடலைப் பிடுங்கிப் போட்டு கடைச் சரக்கெல்லாம் அதின் வயிற்றில் வைத்து கால்படி கன்னிப் பால் கூடவிட்டு மருந்தை சாவல் வயிற்றிலெ வைத்து புரஞ்சு சாராயம் ஒரு படி நல்லெண்ணெய் ஒரு படி இதுவெல்லாச் சட்டியில் விட்டு கோழி உள்ளே போட்டுச் சுண்ட வேக வைத்து அதை எடுத்து உலர்த்தி மருந்து மாங்கிஷத்து மெல்லாம் உலர்த்தி பொடி செய்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம். தேனில் கொள்ளவும். மூன்று நாள் கொள்ளவும். பாண்டு ரோகம், காமாலை, சோகை, இது வெல்லாந் தீரும். இதற் குப் பத்தியம் ஈர வெங்காயம் படி.க, புங்கந் கொழுந்து வெங்காரம், ஒரு பாக்களவு வெல்லமும் கூட கொடுக்கவும். புங்கந் கொழுந்தை அரைத்து காடியிற் கொடுக்கத் தீரும்.

நஞ்சு நீர பிறமியத்துக்கு.

சிறு செருப்படிச் சாறு ஒரு பிடி எருமை மோரு நாழி தண்ணீர் விடாமல் மோரும் மருந்து இரண்டுங் கலந்து மூன்று நாள் குடிக்கவும்.

நீர்ச் செருப்புக்கு.

சிறுக்கீரை, வேர் நெருஞ்சி வேர் மனலி வேர் வெள்ளரி விரை, ஆவரை அரிசி இது வெல்லாம் ஒன்றுயரைத்து புன்னைக் காயளவு பசுவின் பாலிற் கலக்கி மூன்று நாள் கொடுக் கவும்.

காதில் சீழ் வருகிறதற்கு மருந்து.

பூ நாகம் வேரை இழைத்து அந்தப் பாலைக் காதில் பிழியத் தீரும்.

கழல் வாதத்திற்கு மருந்து.

கழச்சிப் பருப்பு, கொத்தான், கெருஞ்சி யிலையும், ஆமணக் கெண்ணெய் கோழி மொட்டு வெள்ளைக் கருவும் பொரிச்சுத் தின்னத் தீரும்.

அண்ட வாதத்திற்கு மருந்து.

இருந் தொட்டித் தழை ஒரு பிடி கொண்டு வந்து நல்லெண்ணெய் ஒரு பிடி கருப்புக் கட்டி ஒரு வட்டு சட்டியில் வைத்து மூன்று நாள்க் கொள்ளவும். இதற்குப் பத்தியம்மூறு நாள் மூன்று நாளைக்கு மூன்று கோழி அறுத்துத் தண்ணீர் குடிக்கவும்.

சன்னிக்குக் குளிகை.

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், கடுகு, வெந்தயம், வாயு விளங்கம், மருந்து வகை யொன்றுக்கு பலம் இ, நேர்வாளம், சுத்தி பண்ணியது பலம்.ச, ஒக்க ஒன்றுய்க் கூட்டித் தவைத்து புட்டவியல் வைத்து புளிந்து கொண்டு அந்தத் தண்ணீரை விட்டு நன்றுயரைத்து சுண்டக் காயளவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு உப்பிச சன்னிக்கு ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். பிறமிய மிளகு அரைத்து அந்தத் தண்ணீரில் கொடுக்கவும். வயிறு பேதிக்கு. அந்த உருண்டை கொடுக்கவும்.

திமிர் வாதத்திற்கு மருந்து.

எண்ணெய் நாழி, வேலிப் பருத்திச் சாறு உழக்கு, குப்பை மேனிச் சாறு உழக்கு, எ எருக்கிலைச் சாறு உழக்கு, கன்னிப் பால் உழக்கு, சாறணைச் சாறு உழக்கு, கால தண்ணீர் உழக்கு, கருஞ் சீரகம் விராகனிடை.உ, பெருங்காயம் விராகனிடை.உ இந்துப்பு விராகனிடை.உ, இது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி அரைத்துக் கலந்து காயவைத்து மெழுகு பதத்தில் இறக்கி மேலே வெல்லம் போட்டு திமிர வாதம் நாற்பதுந் தீரும்.

இரச செந்தூரம்.

ஒரு வீரல் சட்டி தன்னில் அடவுடன உப்பை விட்டு இரிவுள்ள சாதிலிங்கம் நயமுள கெந்த நாபி கருவுள்ள பூலாத்திப் பட்டை கொன்றைப் பூ திப்பூவும் அரைத்து மன் குகை யாய்ச் செய்து

வார்த்ததோர் இரசுந் தன்னை வடிவுடன் சட்டி மூடி
கடுகவே னா த்திருப்பதானல் எடுத்துப் பின்
சர்க்கரையில்த் தேனில் இரு பொழுது கொள்ளே.

கொண்ட பின் சத்தி குன்மம் குடலெரி வாதமிழை
அண்டத்தி லெழுந்த வாய்வு-அடவாய்
அமிண்டின் கவுசி தீரு
மீண்டென குஷ்டடந் தீரும் ஓ. வெடி குலை தீரும்-இது கை கண்டது.

பெரு வியாதி தீர மருந்து.

பூ நாகம் பலம்.க, பச்சை நாவி பலம்.க; செங்கொட்டை பலம்.க, சிவனார் வேம்பு பலம்.க, வெள்ளருகு பலம்:க, நிலவாகை பலம்.க, மாச்சக்காய் பலம்.க, அதிமதுரம்; சாதிக்காய், சாதிபத்திரி; கிராம்பு, இது வகைக்கு கழஞ்சு .ச; இது வெல்லாம் வெள்ளாட்டு மூத்திரத்தில் அரைத்து வேப்பெண்ணெய் வெளிச்செண்ணெய் ஆமணக் கெண்ணெய் புன்னைக் காய் எண்ணெய் இந்த அஞ்சு வகை யெண்ணெயும் ஒன்றாய்க் கூட்டி அரைத்து மருந்து கூட்டிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வாங்கி கரண்டி உள்ளுக்குப் போட்டு ஒரு கரண்டி நிறையத் ஏழு நாள் சாப்பிடவும். மேலுக்குத் துவளை போடவும்.

வயித்து வலிக்கு மருந்து.

சுக்கு, வெங்காரம், வளையலுப்புப் பெருங்காயம்; சமஙக எடுத்து நெருப்பிலே வெதுப்பி; முருங்கைப் பட்டைச் சாற்றிலே அரைத்து மூன்று வாய்வு, வயிற்று வலி, செமயாத குணம், பசித் தாகம் இல்லாமல் இருக்கிறது இது நாலுக்கும் ஆகும். இது கை கண்டது. மூக்காலே தண்ணீர் விழுகிறதுக்கும். ம

மூக்காலே தண்ணீர் விழுகிறதுக்கும் மண்டை நோவுக்கும் பாற்ப ரேகத்திற்கு மருந்து.

கூந்தலெண்ணெய் படி.க, கையாந்த கரைச் சாறு படி.க, மிளகு ஆழாக்கு, ஆவின் பால், சாதிக்காய், கிராம்பு பலம்.க, சுக்குப் பலம்.க, மஞ்சள் பலம் .க, தைய வளை வேர் ஒரு பச்சைப் பாக்களவு அரைத்து இது வெல்லாம் அரைத்துக் கலக்கி முதிர்ந் மெழுகு பதமாக வேக வைத்து வடித்து வைத்துக் கொண்டு முழுங்கவும். இது கை கண்டது.

குதக வாய்வு சன்னிக்கு மருந்து.

குன்ம வயிறு போருமுங் கூப்பிடும் இரைச்சல் காட்டும் காலுங் கைய மெரியும் இதற்கு மருந்து. தருசு பலம்.ச, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.க, இளநீர் தண்ணீர் இரண்டு படி, பசுவின் பால் படி .உ, திரிகடுகு பலம்.க, சதகுப்பை விராகனிடை.ங, கசகசா விராகனிடை.ச, குரோசாணி ஓமம் விராகனிடை.ச, விளாவரிசி விராகனிடை.உ, வாயுவிளங்கம் விராகனிடை.ச, கொத்தமல்லி விராகனிடை.ச, வாலுளுவை அரிசி விராகனிடை .உ, சென்னி நாகம் விராகனிடை.உ, இதற்குச் சர்க்கரை பலம் உயரு. தேன் படி .இ,

பெருங்காயம் விராகனிடை.௪, இதெல்லாங் கூட்டி லேகிய பதத்தில் இறக்கிக் களச்சிக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு நாள் இரண்டு நேரமுங் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால்.

சன்னி வாதத்திற்கு எண்ணெய்.

வேப்பம் பட்டை பலம்.௨ய, ஆடாதொடை வேர் பலம்௨.ய, பேய்ப்புடல் சமூலம் பலம்.௨ய, நறுக்கி யிடித்து ஆறு மரக்கால் தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு கலக்கம் கோஷ்டம், மரமஞ்சள், அரத்தை, தேவதாரம், அதிமதுரம், சதகுப்பை, வாயுவிளங்கம், கற்கடக சிங்கி, திப்பிலி கஸ்தூரி மஞ்சள், முன்னை வேர், விலாமிச்சை வேர்; வெற்றி வேர், அசமதாகம், குந்திருக்கம், வகை கால் பலம் நய்ய அரைத்து கரைத்து நல்லெண்ணெய் படி .௨, வேப்பெண்ணெய் படி.௨, இறுப கட்டிக் காய்ச்சி வடித்ததின் மேலுக்கு விட்டு உள்ளுக்கும் ஒரு கரண்டி வாங்கிக் கொள்ளவும். சாயங்காலம் வேது விடவும். நாற்பது நாளிட சன்னி வாதமுந் தீரும்.

சிறுநீர் புடைத்தால் மருந்து.

குதக்க் கடுப்பாலை பருத்தியிலையை பொத்த துவைத்துக் காடியில் பிசைந்து சர்க்கரை கூட்டிக் குடிக்க நிற்கும். எலிச் செவிக்கரு மூலங் கொண்டு வந்து துவைத்து தனிச் சாருக ஒரு சேரையும் ஒரு எலுமிச்சம் பழச் சாறும் சர்க்கரையுங் கூட்டி கொடுக்க சுக்கிலப் பிறமிய மாறி பிறமிய மற்ற பிறமியமுந் தீரும். காச்சலுந் தீரும்.

அரிதார பற்பம்.

அரிதாரத்தை ஒரு சீலையில் கட்டி சுண்ணாம்புக் கல்லுக்குள்ளே வைத்துத் தண்ணீர் விட்டு நீற்றி ஆறவிட்டு எடுக்கவும். இப்படி நாலு தரம்வைத்து எடுக்கவும். அதின் பிறகு எருக்கிலம் பால் விட்டு அரைத்து வில்லை செய்து உணர்த்தவும். அதின் பிறகு புதுக் கலசங் கொண்டு வந்து பூவரசம் பட்டை இடித்துக் கொண்டு கலசத்தில் வைத்துப் பாதிப் பட்டையை அதிலே வைத்து அதின் மேல் மருந்து வைத்து எருவடுக்கிக் காலமே வைத்து இருபது நாழிகை புடம் வைத்து எடுத்தால் செந்தூரமாம்.

மாவிலங்கம் பட்டை, எருக்கிலம் வேர் பட்டை இது இரண்டுஞ் சீலை வெடு கட்டி புட்டவியலாக வேக வைத்து அந்தச் சாற்றில் இரண்டு குளிகை கொடுக்கப் பிற வீக்கந் தீரும். திரிகடுகுப் பொடியில் கொடுக்க குணம் எட்டுந் தீரும். வெள் வெங்காயச் சாற்றில் கொடுக்கப் பறங்கி ரோகந் தீரும். சங்கங் குப்பிச் சாற்றில் கொடுக்க குஷ்டம் பதினெட்டுந் தீரும். கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதொடை மூன்றும் புட்டவியல் வைத்து அந்த சாற்றில் கொடுக்க எரி குணந் தீரும். தேனிற் கொடுக்க பாண்டுவந் தீரும். வெள்ளாட்டுக் கோமயத்தில் கொடுக்க நீருமல் பெருவியாதி உதிர்ச்சிக், குடல் வாதம், இது வெல்லாந் தீரும். இது அருப்பான மருந்து கொடுத்தால் சகல வியாதியுந் தீரும். இதற்குப் பத்தியம்

குணங் கோடாலிர்

சுக்குத், திப்பிலி, மிளகு, கடுக்காய், கடுகு, வெந்தயம், வாயுவிளங்கம் இவை வகைக்குக்கு பலம்.இ, நேர்வாளங் கொட்டையை உடைத்து எருமைச் சாணியிற் பொதிந்து உமிதாந்த விலச் சாணங் சருகந்த தனியுஞ் சுட்டு பிறகு எடுத்து பருப்பு உடைத்து இரண்டாய் பிளந்து நஞ்செடுத்துப் போட்டு பிறகு கத்தாழை மடலுக்குள்ளே பொதிந்து வெந்ததின் பிறகு எடுத்துப் பசுவின் பால் வார்த்துக் கழுவிப் போட்டுச சுத்தியாம். இந்தப் படிக்குச் சுத்தி செய்த நேர்வாளம் பலம்.௪இ; எலுக்கிலையும், நொச்சியிலையும், பெருந்தும்பையிலையும், குப்பை மேனியிலையும் ஒக்கக் கூட்டித் துவைத்துப் பிழிந்து கொண்டு அந்தத் தண்ணீரை விட்டு நன்றுரைத்து சிறு சுண்டைக்காயளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொண்டு உப்பிசத்திற்கு மஞ்சன்னிக்கும் இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். குளிர் சுரத்திற்கு பிறமியம் மிளகு அரைத்து அந்தத் தண்ணீரில் கொடுக்கவும். வயிறு பேதிக்கு உருண்டை உண்டை கொடுக்கிற போது இந்துயபக் தால் கழஞ்சு கூட்டிக் கொடுக்கவும். பேதி மிகுதியானால் மோருஞ் சோறுங் கொடுக்கவும். குருவே துணை.

பூரண சந்திரோதயமுங் கொட்டுகிற வகை.

அபரஞ்சி ரேக்கு பலம்.க, பாதரசம் பலம்.அ, கெந்தகம் பலம்.ய, இந்த மூன்று வகையும் செம்பருத்திப் பூவின் சாற்றில் ஒரு நாளரைத்து குப்பியை மறக்காலி இமூடி சீலை மண் செய்துச் சாரில் பாதி மணல் சொரிந்து குப்பி அதிலே வைத்து நிறைய மணல் சொரிந்து அடுப்பிலே வைத்து ஒரு நாள் தீபாக்கினியாக ஒரு நாளிருக்க விட்டு அதுதானே ஆறின பறகு எடுத்து நிறுத்துப் பார்த்து எத்தனை பலமாகும் அதில் நாலி லொரு பங்குச் பச்சைக் கற்பூரம் போட்டு இலவுங்கஞ் சாதிக்காய் கஸ்தூரி, மஞே சிலை இந்த மூன்று வகையும் அந்த மருந்துக்கு எட்டுப் பங்கு கூட்டிச் சூரணம் பண்ணி மூக்கில் குழலிலே சொட்டு வைத்துக் கொண்டு அந்த ஔஷதம் பணவிடை வெத்திலையிலே வைத்துத் தின்னவும்: பிறகு பசுவின் பாலில் கொடுக்கவும். சகல வியாதியுந் தீரும். இதற்குப் பத்தியம் *அ* *இ மூக்குறட்டை வேர், மிளகு பலம்.ச, வெள் வெங்காயங் கூட்டி மிளகு நீர் வைத்துக் கொடுக்கவும். நிற்கும்.

சுரத்து குளிகை கூட்டுகிற விதம்.

தாளீச பத்திரி பலம்.க, மிளகு பலம்.க, செவ்வியம் பலம்.க, திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.உ, சுக்குப் பலம்.ங, இலவுங்கப் பட்டை பலம்.க, இலவுங்கப் பத்திரி விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, வெற்றி வேர் விராகனிடை.க, இது இ வெல்லாங் கூட்டி சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணி சூரணம் ஒரு பங்கும் வெல்லம் மூன்று பங்கு இது இரண்டுங் கலந்து புட்டவியல் வைத்து மூன்று பங்காய் வைத்து நெய் ஒக்கக் கலந்து பிசைந்து கையிலெயும் நெய் தடவட்டிக் கூட்டி கழச்சிக் காய் பிறமாங் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு சுரத்திற்கு கொடுக்கவுஞ் சகல சுரமுந் தீரும். இதற்குப் பத்தியம்.

இழ நாறுக்கும் சுழுக்கு.

பண உறுள பனை மரம் முறுள பனையடியிருக்கும் மீனியுருள
தென்னு ருளந் தெனமாய் முருள் தென்னமுயிருக்கும் மீனியிருள
அரகுருள ஆகாச முருள சுங்குருளச் சுங்கு சக்கிரயுத முருள
சூலாயுத முருள சுடுகாடுருள சீ சீயிறங்குளயிறங்கு.

மேக வெட்டைக்கு மருந்து.

வட்டந் தருத்தி வேர், பசுவின் பால் உணர்த்தி நற்சீரகம் அரைத்து பாலிற் கொள்ள குழப்பிச் சாப்பிடவும்.

சுரத்திற்கு உண்டை மருந்து.

நேர்வாளம் ஒரு பணவிடை, இரசம் ஒரு பணவிடை, கெந்தகம் பணவிடை.க, வெங் காரம் பணவிடை.க, மிளகு பணவிடை.க, இதுவெல்லாம் தண்ணீர் வார்த்து அரைத்து கடலை மருவாதி உருண்டை செய்து நிழலிலுணர்த்தி சுரத்திற்கு ஒரு உருண்டை இள வென்னீரில் கொடுக் கவும். இதற்குப் பத்தியம் பால் கஞ்சி குடிக்கவும்.

மலட்டுப் புழுவுக்கு.

ஆடாதொடை கொடிக் கள்ளி, இவை எருக்கிலம் பழுப்புச் சிறுகுருஞ் சாயிலைச் சாறு கொண்டு சிவந்த பசுவின் பால் சாறுடனே கூட்டிக் கொடுக்கவும். புழு விழும்.

பித்த சுரத்தின் குணம்.

1. பிதற்றஞ் சிரிக்கும் உடம்புசியும் ஊத்தந் திரேகங் பருக்கும்
   உதற்றஞ் சருகாய் நாவுலரும்
   உற்ற சிறுநீர் மலந்தாறும் ஒளி சேர் நயனம் வெருப்பாகும்
   சுற்றிப் பார்க்கும் முகங்கடுக்கும், சோளச் சருகாய் நாவுமுன்றிருக்கும்
   உற்ற சிறு நீர்ப் பித்தம் போல் வாதஞ் செய்யும் பெருசி யஎசி வயிறெளியும்
   மெற்ற முறம் மலந்தாறும் மேவிக் குளிரும் படவெஞ்டு
   அற்ற ஊண் அன்னமது வேண்டாம் முறைற்றந் தண்ணீர் மிகப் பருகும்
   சுற்றமாக பிறதாறுஞ் சொல்லார்ப் பித்த சுர மென்றே.

சேற்றும சுரத்தின் குணம்.

2. மூக்கு நீர் வெள்ளொக்காளம் முதிர்ந்த சுவாச முண்டாவதும்
தேக்கிய வாய் நீரூறும் உரிசையாந் தித்திப்புங் குளிருண்டாவதும்
பார்க்குங் கண்ணும் உடம்பும் பருத்த நிறமாய் உரக்க முண்டாவதுஞ்
சீர்க்கும் பஞ்சொறி மேனியை விரும்பிடுஞ் சேற்றும மென்னுஞ் சுரந்தானே.

3. மெய்யுஞ் சிலுக்குஞ் சொம்பாகும் வெள்ளோக்காள் முளதாகு
மெய்யிலிருமல்டைப்பு குந்து கண்ணுந் தாங்கி வர னீரனுக வரிசிக்குந்
துய்ய சலத்ன்த வெளுப்பாக்குந் தொத்திய வேர்வை உப்புரைக்குஞ்
செய்ய சாவின்னவெ சேற்றும மென்னுஞ் சுரந்தானே.

சந்தொடு தலையும் நொந்து தாகமு மெய்யிலி வேர்வை ந்திடும்
உதர வாயில் கருந்திடு முளக்க மன்றி
முந்திடு குளிர் வெதுப்பு மூக்கையும் துளசி போல
அந்தமாச் செவிடு மோகித்து பேசிய மயக்கமுண்டாம் கொந்தலாகுமுளே.

ஆமசுரத்தின் குணம்.

ஆம சுரத்தின் குணங் கேளீர் அதிகமாக வெதும்பாதே சாமந்தோறும்
வெதுப்பிக்கும் சுரந்தானுறக்கந் தானுண்டாம்

பித்தமு மரிதரு சுரமாவும் பிணங்கியே கூடுமாகில்
சத்தமாய் உடல் குளிர்ந்திடும் யிருமல் வந்து
மெத்தென வெதுப்பு மின்னே வெந்திடு யிறுகால் கண்ணும்
நித்தமும் வெளுத்துக் காட்டும் நெறியிது கூறினேனே.

மூக்கு மருடித்துப் பின்பு முடுகக் வெடித்துப் பின்பு
கற்குடி கற்கும் போது தானிடு கற்குந் தண்ணீர்க் குடி குடித்து வும்
இசையவே வகையனக் கேளாய்-ந்
சொற் குடியதினுலே சுவறவெ சொல்லுகுறேன்

கருது முத்தப் பற்படாகந்தானும் வேர் யிலாமிச்சை வேரும்
பெருகுஞ் சீந்தில் சிறு தேக்கும் பேளியிவை தான்
ஒரொன்று இரு கழஞ்சு பெரும் புனலு மிரு நாழி
பேளிக் காச்சி உழக்காகி வந்த சுரத்தின் குணமறிந்து வகை செய்யீரே.

சௌனமி யேழும் சேற்றுமத்

துடங்கிய யெட்டா நாழில் தானறி நெல்லிக் கடுக்காயும்
தக்காரு வெப்பாலை பூனறு சிந்தி யிவை சேர் ஒன்று
ஒக்க நிறுத்து முக்களஞ்சு யென்றும் புனலு மிரு குழியிசையக் காய்ச்சி
உழக்காக்கி திப்பிலி ஒரு கழஞ்சியிட்டு இசையக் கொள்ளீரமதானே.

இந்த மருந்து யிடை யேறக் குறையாய் வகை நிறுத்து
அந்த வகை கொண்டதற் பின் பிறியும் புன் குழுழி
வெந்த பழ மிக வரிந்து வியைக் காய்ச்சி உழக்காக்கி வடித்துக் கொண்டு.
அந்த திப்பிலியை அரைத்து கொள்ளீர் மேற்பொடியே.

பித்தமுஞ் சேற்றும்மும் கூடின சன்னி வாத சுரத்தின் குணம் சொல்லுவான்.

கருக்குங் கண்ணும் பல்லு மிகிறும் கமலமுகம்
வறகும் வழலி விக்கும் வயிறு தாம் முரி தலை நோவாக்கும்
பல நோவும் உன்ர வில்லை உள்ளே நோவும் மந்திடுமே.

கண்டக் கால்வாத சன்னி.

செருத்த மெதப்புக் கண்டக் கால் திரவறி சிரகை யுள்ளே
கண்ணது சோர்விக்குங் காலுங் கையும் சாவிக்கும்
நன்னவ் நாவும் சொற்றெழுந்து நாடி சோர பிறிந்திடுமெ
என்னறுஞ் செவியும் இன்னென்னெ ளேவிக்கும்
வண்ண மறிந்து கண்டக் கால் வாத சன்னி தானதுவே.

நீ பானங் கண்டலப் பொழுதே வித்த சன்னி தானென்று
அபானந் தன்னை நெழவித்து அன்றேதானெ வளா மிட்டுத்து
பானம்படாமல் ஊ புங் காட்டித்துடந்தே செய்யுாயுயிர்மீன
உப்புங் குறையுங் கண்டிடீரே.

பெருக்கும் ஜீசி பித்த சன்னிக்கும் பிதற்றுஞ் சிரிக்கும் முகஞ் சுளிக்கும்
புருவ நெறி மொகிக்கும் போத மொழியும் பிதற்றி விக்கும்
கருக்கு முடலில் வயறுழியம் கன்னிருடை புண்ணறுக்கும்
கருதி யித னைக் கண்டக் கால் னென்று கருதாயே.

அறிந்து கொண்டு புடொல் நெய்யை
அழவில்க் கூட்டிலது தானெ சன்னி வாத முதிர்ந்தது மறைக்கும்
விழுங்கு விக்கும் குறவுஞ் சேற்றுமங் கண்ட முன்னே.
கொள்ளுங் குரலுமி ம் பார்த்துப் பித னைக் கண்டக்கால்
பண்பிருடனே பிறிந்தெரிந்து காவு மனத்தை. யுங்க னைக் காரென்று கருதாயே.

அசத்தியை அமலச் செய்யும் ஆங்கனம் மொனிப்பிக்கும்
எத்திசை வெதுப்பி விக்கும் ஏழலது காதடைக்குப்
விடா தெத்தெழியாத தாபந் தான் வாபத்து பித்துமாகி.
முற்றது பல மூக்கு நாக்கு முசை செய்து புண்ணதாமே.

கடுகெல்லி தானறி தாமரை வழையும் தேவதாரம்
முடுகிய முத்தக் காசு, சந்தன மிலாமிச்சை வேர் நின்புகடுகு ரேருகணியும்
சுக்கும் வெலப் பிலே
சிந்தான வடுதிவற கொண்டு கூட்டி வைத்து கொண்டிசைக்கு மன்றே.

என்று நாடி நடக்கு மென்றே
எனமிது தானே றொன்று
அன்று புனலந்தீரு ஒழி கூட்டி
ஒன்றிய காலாங் குரட்டி விசைய நாம நடக்கு மென்றே.

கடுநெல்லி தானறி சிறு காஞ்சியிருழுழி ஒத்துக் காய்ச்சி உழக்காக்கி
உளத்திக் குடிக்க றொரு நொடியில்.

ஒளக் கொன்னரைத்துக கரைத்துக் குடுப்பது
முத்தக் காசு சுந்தி, வெப்பல புடொல், கொத்தமல்லி, திப்பிலி
இவை தான் ஒவ்வொன்று முக்கழஞ்சு கூட்டி
நாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்துக கொண்டு சர்க்கரை மேல்
போட்டுக கொடுப்பது.
பித்தமும் சேற்றுமமும் கூடில் சின்னில் வாத சுர முற்றும்.

வாதமும் சேற்றுமமும் கூடின குணஞ் சொல்வான்.

சரீரம் நொந்து குறுந்து தென்ன
சந்தும் புடையன மெலிவுதென்ன
நாரியிருமல் வந்ததென்ன
எச்சி வாய் பிளந்த தென்ன

அருமை வாதம் வந்தடி வயர் வந்தளவில்
பில வலிப்பாத் தரித்துக் கொள்ளே.

நீறங் கடுத்த பிழிந்தினித்து
நிரை தன்டு உப்பு தென்னப் பாகும்
பிற வெதுப்புங் கையும் நெஞ்சுரமாரும்
பன்பியறையும் ஓர்வித சேற்றுமத்தின்
உற்ற சுரங்களிவை யென்று
செருபிதனை சொரதிருக்கும் உண்டீரே.

இதற்குக்கு ஏழுபட்டி கொடுமுக் கொடி, புழுங்கலரிசி, ஒரு பிடியும், கொள்ளு ஒரு பிடி, பச்சப் பருப்பு ஒரு பிடியும், கொன்னைத் தோலு முக்கழஞ்சும். கடுகு ரோகணி இரு கழஞ்சு, தேவதாரம், பற்படாகம், முத்தக் காசு, கொத்தமல்லி, வசம்பு சுக்கு இவை ஒவ்வொன்று இரு கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்து உழக்காய் காய்ச்சி வடித்துக் கால் பணவிடை பெருங்காயம் விட்டுக் கரைத்துக் கொடுக்கவும்.

ஆடாதொடை, அரமுரசுக்கு, மரமஞ்சள், தேவதாரம் இவை ஒவ்வொன்று கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி காசிடைதேனில் கலந்து குடிக்க கொடுப்பது.

பெருங்குமிளங், கடுக்காய், சுக்கு, வேப்பிலக்கு, கொடிக் குமின் இவை ஒவ்வொன்று கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி வடித்து ஒரு விராகனிடை ஈகு பெருங்காயமிட்டுக் கொடுப்பது.

கொத்தமல்லி, சுக்கு, ஆடாதொடை, செங்கழுநீர், கோஷ்டம், பூசனித் தண்டு ஒவ்வொன்று முக்கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்து வடித்துக் கொடுப்பது.

விச்சுரத்து பித்தமும் வாதமுங் கூடி ல் கடுத்து அளிவிக்கும். சிறு மிருக்குமிது தானே. ந்து குளிர் விட்டால் திரேகம், வெதும்பும். குரலதாறும் வந்து வந்து வாய் பதைக்கும் ப் பின்பு திக்கும் தாறமாக வ்பிறளியும்.
வு வுணரவு மிக வுண்டாம். யிந்தக் குணங்கள் கண்டக்கால் இதற்கு வகை பரிகாரம் பட்டினி கொண்டு அதிமதுரம், தேவ்தாரம், அரிசி, கொள்ளுப் பயிறு, சுக்கு இவை கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்த உழக்காக காய்ச்சி வடித்துக் கொடுப்பது.

<u>விச்சுர குணஞ் சொல்லுவான்.</u>

ஈருமரு மூக்கும் நீரும், யினிய நீருண்டாய் பெருகிய சதியுண்டாம், பேனியுறக்க ாய் முகம் வரும் உடல் குளிர்ந்து காட்டும் வகை வகை வெதும்பி வைக்கும் யின்னை கருகி உருவுறும் கண் குளியும் மென்றே-ம்யிலேடெறிந்தும் வெண்டி மருவிப் பலகால் ட்டாவி மிகு மிகுவெறித்து கால் குடைந்து கால் சுருங்கியது வறிமொழி மடவீர் சொல்லு குறி கண்டாப் பயின் வேற்றிந்துப்பார் மரரஷி ளிைப்பாத யிதனைப் ர்த்தறிந்து நிற்பீரே.

இரண்டு நாள் பட்டினிவிட்டு மூன்றுநாள் புழுங்கலரிசி ஒரு பிடியுங் கொள்ளு பிடியுஞ் பயறு ஒரு பிடியும் சுக்கு முக்கழஞ்சுங் கூட்டி இரு நாழி நீர் வார்த்து உழக்காகக் ய்ச்சி வடித்துக் கொடுப்பது.

மருந்துகள் ஒவ்வொரு பிடி கூட்டி ஒரு பானையில் நாலு படி தண்ணீர் இந்த மருந்து யுஞ் சுக்குங் கூட்டி இந்த பானைத் தண்ணீரா ரப் போட்டு நாழியாகக் காய்ச்சி பிறகு வடித்துக் கொண்டு தண்ணீரிலரைப்படி அரிசி சோறுக்கியிடவும். எட்டுப் படி நாற் கழஞ்சு சுக்கு, நாற் கழஞ்சு பனை வெல்லமும் போட்டு நாழியாகக் காய்ச்சி கொடுப்பது. மாதனை சரு மூலமும் சுக்கு, சீந்தி, ஆதனை, சுமூலமும் முத்தக் ஒவ்வொன்று முக்கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடித் சு திப்பிலி மேற் பொடி யிட்டுக் கொடுப்பது.

கடுக்காய் கடுகு ரோகணி தேவதாரம், திப்பிலி, மரமஞ்சள், சுக்கு ஒவ்வொன்று கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்துக் கொடுப்பது.

கீரை நெல்லி, கடுகுரோகணி, குறும்பை, வேப்பலக்கு, பேய்ப்புடல்ல, கோஷ்டம் தேவதாரம், அதிவிடையம், சிறு தேக்கு, சிறுகாஞ் சொறி வேர், சந்தணம். பங்கம் பாழை, பெருஞ்குமிள், சீந்தி, நாகப்பூ, ஜங்கம் இவை ஒவ்வொன்று முக்கழஞ்சு கொண்டு இரு நாழி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்துக் கொண்டு கொடுப்பது.

சேற்றுமம் முறிந்தது.

சு.ச.7.9.62. முற்றும்.